Registered as a Newspaper in Srilanka

முஸ்லிம் குரல்

Muslim Kural | صوت المسلم | முஸ்லிம் குரல்

16 மே 2003 - வெள்ளிக்கிழமை | 14 ரபீஉல்அவ்வல் - 1424 | சுவடு - 10 | தருகை - 15 ரூபா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

கொழும்பு அரசியலில் கொந்தளிப்பு!

சந்திரிகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் திண்டாட்டம்!

(நமது அரசியல் செய்தியாளர்)

சந்திரிகா ஒரு மண் பூனை என்றும்; அது எலி பிடிக்காது என்றும் அண்மைக்காலமாக நம்பப்பட்டு வந்தது. இக்கருத்தினை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத் தரப்பு மட்டுமன்றி, சந்திரிகாவின் இன்றைய அரசியல் நண்பர்களும் ஏற்று கிண்டலாகக் கூறி வந்துள்ளனர். இப்போது சந்திரிகா தன்னை அப்படி நினைக்க வேண்டாம் என்பதை மிலிந்த மொரகொடவின் அமைச்சு அதிகாரத்தின் மீது கை வைத்ததிலிருந்து செயலில் காட்டத் தொடங்கி விட்டார். சந்திரிகாவின் இம்முடிவு கொழும்பு அரசியல் அரங்கில் பாரிய கொந்தளிப்பாகவும் நெருக்கடியாகவும் எழுந்துவிட்டது. அரசியல் சூறாவளிக்கான முன்னறிவித்தல் இப்போது வெளிப்பட்டு விட்டது.

அனைத்து அரசியல் தலைமைகளும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. சந்திரிகாவின் நோக்கம் ரணிலின் அரசாங்கத்தை கவிழ்த்து தனக்கு ஆதரவான ஒரு அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வருவதாகும். இவரின் இந்நோக்கத்தை செயற்படுத்த அரசியல் அமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள நிறைவேற்று அதிகாரம் வாய்ப்பாக உள்ளது. எப்போது ரணிலின் அரசாங்கம் கவிழ்க்கப்படும் என்ற அற்ப ஆயுளின் விளிம்பில் தொங்கி நிற்கிறது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடாந்தும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகிறது. உடனடியாக ஜனாதிபதி பாராளுமன்றத்தை தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி கலைக்காமல் தடுப்பதற்குள்ள ஒரேயொரு வழி ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதேயாகும். பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒப்பமிடுவதன் மூலம் இந்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரமுடியும். இந்நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு அதற்கு ஒரு முடிவினை எட்டும் வரையிலும் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தடுப்பதற்கு ரணிலின் அரசாங்கத்திற்கு உள்ள மாற்று ஏற்பாடு இந்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை காலம் கடத்தாமல் கொண்டு வருவது மட்டும்தான். இப்போது இந்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான உள் முயற்சியில் ரணிலின் அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா தனக்கு ஆதரவான ஒரு அரசாங்கத்தை உடனடியாக அமைப்பதற்கான வாய்ப்புகள் குறைந்தே காணப்படுகின்றன. ஏனெனில் புதிய அரசாங்கமானது பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். இதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலுள்ள 15க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளித்தல் வேண்டும். கொந்தளிப்பு மிக்க இன்றைய கொழும்பு அரசியல் சூழலில் இதற்கான பேச்சுவார்த்தையை ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்வதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. என்னதான் இருந்தாலும், மீண்டுமொரு பொதுத் தேர்தலை மிகக் கிட்டிய காலத்தில் இலங்கை அரசியல் சந்தித்தே தீரவேண்டும்.

முஸ்லிம் கிராமங்களை அபகரிக்க முயற்சி!

அண்மைக்காலமாக கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் விவசாய, மேய்ச்சல் காணிகளை விடுதலைப் புலிகளின் அபகரிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மட்டக்களப்பு அம்பாறை, திருமலை மாவட்டங்களில் தொடங்கி விட்டது. முஸ்லிம்களுக்கு உரித்தான பல்லாயிரம் ஏக்கர் நிலங்களிலிருந்து 1990க்குப் பின் முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்டு மிகப் பெரும் பொருளாதார பின்னடைவிற்குள் தள்ளப் பட்டிருந்தனர்.

ஓஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டதற்கு அமைவாக, கிழக்கில் இப்போது முஸ்லிம்களுக்கு உரித்தான காணிகளை முஸ்லிம்களிடம் மீளக் கையளிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடாந்தும் நடைபெற்று வருகின்றன. இந்த முயற்சியை மேற்கொள்ளும் அனைத்துத் தரப்பினரும் பாராட்டுக்குரியவாகள்.

ஆனால் இக்காணி கையளிப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளின் தரப்பால் - கிழக்கில் பல்வேறுபட்ட முஸ்லிம் கிராமங்கள், முஸ்லிம்களுக்கு சொந்தமான ஆதனங்கள், தமிழாகளின் பூர்வீகச் சொத்து என்றும், அது முஸ்லிம்களால் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டுள்ளதென்றும் அவைகளும் மீளக் கையளிக்கப்பட வேண்டுமென்றும் நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக அறிகிறோம்!

பேச்சுவார்த்தைகளின் போது தமிழர் தரப்பில் முன் வைக்கப்படும் இவ்வாவணங்கள் குறித்து முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள் மௌனம் காத்து வருவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாக உள்ளது. இதற்குத் தக்க சான்றாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்ட ஆவணம் உள்ளது. அதுபோன்றே அம்பாறை மாவட்டத்திலும் உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக அக்கரைப்பற்று மத்திய சந்தை நிலப்பகுதியும் பஸ் நிலையமும் தமிழாகளுக்கு உரித்தானது என்றும் அது மீளத் தமிழாகளிடம் கையளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் நிபந்தனையாக முன் வைக்கப்பட்டுள்ளது.

இக்காணி விவகாரத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் முஸ்லிம் தரப்பு உறுதியாக நமது மக்களுக்காகப் போராடும் உறுதிப்பாட்டினை எடுக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சினையை இன்று விடுதலைப் புலிகள் கிளப்புவதன உள்ளாந்த அாத்தம் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கான தாயகத்தை சிதறடிக்கச் செய்வதை அடிப்படை நோக்காகக் கொண்டது என்பதை நமது பிரதிநிதிகள் புரிந்து கொண்டால் சரி!

உங்களுக்கு..!

பௌஸி ஹாஜியாரின் நிலைமை ரொம்ப திண்டாட்டம் போல் தெரிகிறது. ஹாஜியாருடன் நின்ற ரிச்சட் பத்திரனாவும் மீண்டும் அம்மையாருடன் இணைந்து விட்டார்! பௌஸி ஹாஜியாருக்கு எந்தப் பக்கம் போவதென்றே தெரியவில்லை. இப்போது அவரை முஸ்லிம் காங்கிரஸில் சேர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரம் முயற்சி எடுக்கிறதாம். ஹாஜியார் அஷ்ரஃப் காலத்து விடயங்களை எல்லாம் மறந்து விட்டு முஸ்லிம் காங்கிரஸ் சேரவேண்டியதுதான்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவரை ஜப்பானிய சமாதானத் தூதுவர் அகாஸி சந்தித்த போது விடுதலைப் புலிகளின் தலைவர் அகாஸிக்கு என்ன நினைவுப் பரிசு கொடுத்தார் என்பது தெரியுமா? தமிழீழ வரைபடம் பொறித்த மரத்தினால் செதுக்கப்பட்ட நினைவுப் பரிசும், புலிப்படமும் தானாம். அகாஸிக்கு இதனூடாக புலிகள் தெளிவான செய்தியை சொல்லிப் போட்டார்கள். அகாஸிக்கும் இது புரிந்திருக்கும்.

பிரதமருக்கும் மு.கா. அரசியல் பீடத்துக்குமிடையே சந்திப்பு நடந்து கொண்டிருந்த போதுதானாம் மிலிந்தவின் லொத்தர் சபை பறிக்கப்பட்ட செய்தி வந்ததாம். பிரதம மந்திரி ஆடிப் போய் விட்டாராம். உடனடியாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாம். போனவாகளுக்கு பெரும் ஏமாற்றம். மு.கா. அரசியல் பீட உறுப்பினர் ராவத்தா வரும் வழியெல்லாம் பிரதமருக்கு ஒரே ஏச்சாம்! ஒரு நாளாவது எங்களுடன் ஆற அமர பிரதமர் கதைக்கவில்லையே - ஏன் தான் தலைவா ரணிலை ஆதரிக்கிறாரோ என பெரும் ஆதங்கப்பட்டாராம்.

வன்னியில் முக்கியமான விடயங்கள் தொடர்பாக பிரபாகரனுடன் ஆலோசிக்க வந்த அன்ரன் பாலசிங்கம் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக லண்டன் திரும்பியதாக சொல்லப்பட்டது. ஆனால் உண்மையோ வேறு! திடீரென அம்மையார் பாதுகாப்பு அமைச்சை கையில் எடுத்தால் லண்டனுக்கு திரும்பி போக முடியாது போய்விடும் என்ற அச்சம்தான் சுகவீனக் கதையாம்.

மு.கா.வின் உயாபீடக் கூட்டத்தில் ஹரீசும், அன்வா இஸ்மாயிலும் அரசாங்கத்திற்கு தொடாந்தும் கண் மூடித்தனமாக ஆதரவு வழக்க முடியாது என வலியுறுத்தினாராம். இதை அறிந்த பிரதம மந்திரி ஹரீசை சாந்தப்படுத்த அமைச்சா மஹ்ரூபையும் அலிஸாகிர் மௌலானாவையும் ஹரீஸ் எம்.பியின் வீட்டுக்கு உடனடியாக அனுப்பினாராம். கொழும்பு அரசியல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. எந்த எம்.பி.மார் - யார் பக்கம் என யாராலும் சொல்ல முடியாதாம். அப்படி இருக்கிறதாம் நிலமை

நடைபெறும் அரசியற் சூதாட்டத்தில் ஜே.வி.பி. அம்மையாரை பாவிக்க நினைக்கிறதாம். அம்மையார் ஜே.வி.பி.யை பாவிக்க நினைக்கிறாராம். இந்த கொடுக்கல் வாங்கலில் யார் வெற்றி பெறுவார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மிலிந்தவின் அமைச்சுப் பதவியில் கைவைத்த செய்தியை முஸ்லிம் காங்கிரஸ் தரப்பு அலரி மாளிகையில் வைத்து உடனடியாக அறிந்து கொண்டதாம். பரபரப்படைந்த மு.கா. தலைவர் தன்னுடன் இருக்கும் ஏழு எம்.பி.க்களையும் உடனடியாக காலிக்கு ஆலோசணை நடத்துவதற்காக அழைத்தாராம். இந்த அழைப்பை கேட்ட ஏழு எம்.பி.க்களில் ஒருவர் தனது நண்பரிடம் சொன்னாராம், தலைவருக்கு காலிக்குப் போனால்தான் மூளை வேலை செய்யும் போல் தெரிகிறது என்று.

தினகரன் பத்திரிகையில் முஸ்லிம்களுக்கு கதவடைப்பு!

இலங்கை அரசாங்கத்தின் சொத்துடைமையான "லேக் ஹவுஸ்" நிறுவனத்தின் தமிழ் பத்திரிகையான "தினகரன்" பத்திரிகையில் முஸ்லிம் ஊழியாகள் பணியாற்றுவதை திட்டமிட்டு தடுக்கும் வகையில் இப்போது காரியங்கள் நடந்து வருகின்றன. ஒன்றுக்குப்பின் ஒன்றாக முஸ்லிம் ஊழியாகளும் தினகரன் பத்திரிகையாளாகளும் வீட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அதிர்ச்சியுடன் கூடிய சம்பவங்கள் நாளுக்கு நாள் தினகரன் பத்திரிகை நிறுவனத்தினுள் நடந்து வருகின்றன. அண்மைக்காலமாக முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் தொடக்கம் மன உணர்வுகள் வரை தினகரன் பத்திரிகையின் ஊடாக கொச்சைப்படுத்தப்பட்டு வருகின்றன. இச்செயல் மீதான கண்டனங்கள் நமது சமூக மட்டத்தில் பரவலாக எழுந்து வருகின்றன.

அரசாங்கத்தின் பொதுச் சொத்து என்ற வகையில் லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும் தினகரன் பத்திரிகையானது முஸ்லிம் மக்களது உணர்வுகளையும் உரிமைகளையும் மதிப்பதற்கு தார்மீக உரித்துடையதாகும். தினகரன் பத்திரிகை உட்பட அதனது அனைத்து வெளியீடுகளும் இப்பணியிலிருந்து தடம்மாறிச் செயற்பட முடியாது.

முஸ்லிம் பிரதேச நிருபாகள் தொடக்கம் தினகரன் பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை செய்யப்படுவோா பலா எதுவித நியாயமான காரணமுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுகின்றனர். இவ்வந்தியை தட்டிக் கேட்பதற்கு நமது அரசியல் தலைமைகள் தொடாந்தும் தயக்கம் காட்டியே வருகின்றன. தினகரன் பத்திரிகையை அதிகளவில் வாங்கி வாசிக்கும் மக்களாக இலங்கை முஸ்லிம்களே உள்ளனர்.

ஊடகத் துறை அமைச்சராக இம்தியாஸ் பாக்கீா மாக்காா இருந்தும் தினகரன் தமிழ் வெளியீடுகளுக்குப் பொறுப்பாக முஸ்லிம் மீடியா போரத் தலைவா என்.எம். அமீன் இருந்தும் இவ்வந்திகளை தட்டிக் கேட்க முடியவில்லையே என்ற ஆதங்கம் பாதிக்கப்பட்ட - நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் முஸ்லிம் பத்திரிகையாளாகளிடம் மேலோங்கிக் காணப்படுகிறது.

மூதூர் சம்பவம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் தீடீர் தௌபீக் எம்.பி ஏன் பங்கு பற்றவில்லை?

மூதூா் பிரதேச முஸ்லிம்கள் மீதான தாக்குதல், இன அழிப்பு சம்பவங்கள் தொடாபாக பாராளுமன்றத்தில் எதிாக்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட விவாதத்தில் மூதூா் பிரதேச முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் திடீா தௌபீக் எம்.பி ஏன் கலந்து கொள்ளவில்லை என்பது மிகப்பெரும் சந்தேகத்தை முஸ்லிம் மக்களிடம் தோற்றுவித்துள்ளது.

மூதூா் பிரதேச முஸ்லிம் மக்களினது ஏகோபித்த ஆதரவினால் பாராளுமன்றக் கதிரையை அலங்கரித்து வரும் திடீா தௌபீக் எம்.பி, மூதூா முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட இன அழிப்பு சம்பவம் நடைபெற்ற போது அப்பிரதேசத்திலிருந்து அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நேரடியாகக் கண்டவா். அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகறியச் செய்வதில் அவருக்கிருக்கும் தாா்மீகப் பொறுப்பினை அவா தட்டிக் கழித்துவிட முடியாது!

எத்தனை பணிகள் இருப்பினும், திடீா தௌபீக் எம்.பி இவ்விவாதத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டும். சொந்த மக்களின் உணா்வுகளை அரசியல் அரங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நமது அரசியல் தலைமைகள் தொடா்ந்தும் மன்னிக்க முடியாத் தவறுகள் இழைத்து வருவதற்கு திடீா தௌபீக் எம்.பியின் இந்நடத்தை ஒரு தக்க சான்றாகும். இதில் மேலும் ஆச்சாியமான விடயம் என்னவெனில், திடீா தௌபீக் எம்.பி மூதூா் சம்பவம் தொடா்பான விவாதம் பாராளு மன்றத்தில் நடந்த தினம் பாராளுமன்றத்திற்கே சமூகமளிக்க வில்லை என்பதுதான். உங்களுக்கு இது ஆச்சாியமாக இல்லையா?

கொழும்பு அரசியல் ஒலிம்பிக்ஸ்

இவ்விதழுடன் இலவச இணைப்பு! கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்! நமக்கான அரசியல் தீர்வினை நோக்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து மனுக்கள்---

நடவடிக்கைக்காக...

புத்தளம் நகர சபையில் பாரிய நிதி நெருக்கடி!

பிரதான வருமான மார்க்கங்கள் முடக்கம்!!

இலங்கையில் உள்ள நகர உள்ளூராட்சி அமைப்புக்களின் ஆள்புல அளவின் அடிப்படையில் நோக்கும் போது, புத்தளம் நகர சபை இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. கண்டி, நுவரெலியா, நீர்கொழும்பு போன்ற மாநகர சபைகளை விட புத்தளம் நகர சபையின் ஆள்புலப் பரப்பு பெரியதாகும். இதன் அளவு 24.5 சதுர கிலோ மீற்றர்களாகும்.

இந்நாட்டிலுள்ள எல்லா உள்ளூராட்சி நிறுவனங்களைப் போலவே குறித்தொதுக்கப்பட்ட உள்ளூர் அதிகாரப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த இச்சபை 1997ஆம் ஆண்டு முதல், அடிக்கடி பத்திரிகைகளிலும் வானொலி, தொலைக்காட்சிகளிலும் பேசப்படும், விமர்சிக்கப்படும் ஒன்றாக பரிணமித்துள்ளதற்கான காரணத்தை கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி நகர சபையின் தலைமைப் பதவியை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனதாக்கியது. முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்ற முதல் தினமே அரசியல் கயிறிழுப்பு தொடங்கியது. முதல் கோணல் முற்றும் கோணல் என்ற யதார்த்தத்தை உறுதி செய்யும் வகையில் இச்சபையின் செயற்பாடுகள் அன்று முதல் இன்று வரையில் கால் இடறி தட்டுத்தடுமாறிக் கொண்டிருப்பதை காண முடிகிறது.

வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமை, கணக்காய்வாளர்கள் கடமை நேரத்தில் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டமை, பதவிக் காலம் முடிவடையும் முன்னரே தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை போன்ற முன்னொரு போதும் கண்டறியாத அனுபவங்கள் இக்காலப் பகுதியில்தான் இச்சபையில் நிகழ்ந்தன.

ஒன்பது அங்கத்தவர்கள் மாதம் ஒருமுறை கூடி ஒரு தீர்மானத்தை சபையில் எடுக்கும் போது சட்டபூர்வமான தலைவர் இருக்க, முன்னாள் நகர முதல்வர் தன்னிச்சைப் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்நகராட்சி நிருவாகம் தட்டுத்தடுமாறுகிறது. பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் நகர முதல்வருக்கு ஆசனம், அதிகாரம், ஆள், அம்பு, வாகனம் என்று எல்லாமே வைத்திருக்கும் ஒரு நிறுவனம் இன்று இந் நாட்டில் இருக்குமானால் அது புத்தளம் நகர சபையாகத்தான் இருக்க வேண்டும்.

இச்சபைக்கென ஒரு செயலாளர், பகுதித் தலைவர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் இப்படி எல்லோரும் இருந்தாலும் கூட நகர நிருவாகம் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் நகர முதல்வர் தனது தற்றுணிவின் பேரில் நியமிக்கப்பட்ட சிற்றூழியர்களால் நடாத்தப்படுவது தான் விந்தையாக உள்ளது.

சுமார் 25 இற்கும் மேற்பட்ட சமயா சமய ஊழியர்களின் பெயர்கள் நாளாந்தம் பதியப்பட்டாலும் அவர்கள் யார், எங்கு கடமையாற்றுகின்றனர் என்பது சபையின் செயலாளர் உட்பட எந்தவொரு உயர் உத்தியோகத்தருக்கும் தெரியாது. ஆனால் ஒவ்வொருவரும் மாதம் 30 நாட்கள் கடமை புரிந்ததற்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள். சமயா சமய ஊழியர்களின் ஊதியமாக இச்சபை மாதாந்தம் செலவு செய்யும் தொகை சற்றேறத்தாள 6 இலட்சமாகும். இந்த ஊழியர்களில் சிலர் நிலுவையாக உள்ள ஆதனவரியை அறவிட நியமிக்கப்பட்டவர்கள். இவ்வாறானவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தரகு அவர்கள் அறவிடும் தொகையில் 12 வீதம் ஆகும். இவ்வாறு ஆதனவரியை அறவிட நியமிக்கப்பட்டுள்ளோர் முன்னாள் நகர முதல்வருக்கு நெருக்கமானவர்களாகும். இத்தகைய சட்ட ரீதியற்ற நியமனம் வழங்கப்பட்டோரால் அறவிடப்படும் ஆதனவரி நிலுவைகளுக்கான தரகுப் பணம் தனியாகப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

இத்தகைய ஊழியர்கள் தகுந்த பிணைப் பணத்தை செலுத்திய பின்னரே அவர்களுக்கான கடமைப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறே அறிவிடும் பணத்தை குறித்த வாரமே சபை அலுவலகத்தில் செலுத்த வேண்டும். ஆனால், இச்சபையில் அப்படியான நடவடிக்கை எதுவுமே நடைமுறையில் இல்லை என்பது ஒருபுறமிருக்க முறையற்ற விதத்தில் நியமிக்கப்பட்ட ஓர் குழுத் தலைவருக்கு கீழ் செயற்படுவதுடன் தாம் அறவிடும் பணத்தை அவரிடம் ஒப்படைக்க அவரோ இன்று வரையில் அப்பணத்தை தமது சொந்தப் பணம் போல வைத்திருக்கிறார். 2003 ஏப்ரல் வரை அவரால் செலுத்த வேண்டிய தொகை 2 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

ஓர் உள்ளூராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் அதன் செயலாளரே அச்சபையின் வருமானத்துக்குப் பொறுப்பாவார். ஆனால் புத்தளம் நகர சபையில் அவ்வதிகாரம் அவரிடமிருந்து பிடுங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சபையின் பிரதான வருவாய் மார்க்கங்கள் பெரிதும் முடக்கப்பட்டுள்ளன.

சபையின் பிரதான வருவாய் மார்க்கங்களான தினச் சந்தை, வாரச்சந்தை போன்றவைகள் 2003 ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்கப்படும் விடயம் குறித்து நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு மாற்றமாக தலைவரின் தற்றுணிவின் பேரில் முன்னாள் நகர முதல்வருக்கு நெருக்கமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குத்தகை நடவடிக்கை 2003 ஜனவரி மாதம் தொடங்கப்பட்டாலும் இக்கட்டுரை எழுதப்பட்ட சந்தர்ப்பம் வரையில் சபைக்கு குத்தகைப் பணமாக ஒரு மில்லியன் ரூபா வரையில் செலுத்தப்படாமல் உள்ளது. இப்பணத்தை அறவிடுவது சபையின் செயலாளரினது பொறுப்பாக இருப்பினும் மரண அச்சுறுத்தல் அப்பணத்தை அறவிட முயற்சி மேற்கொள்வதிலிருந்து செயலாளரை தடுத்து வருகிறது.

நகரத்தின் மையப் பகுதியில் பிரதான பாதைகளின் இரு மருங்கிலும் நடைபாதை வியாபாரிகள் மிக நீண்ட காலமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்கள் இது கால வரையிலும் தகரங்கள், காரட்போட் அட்டைகள், மெழுகுச் சீலைகள் போன்றவற்றின் மூலம் தமது வியாபார நிலையங்களை அமைத்துக் கொண்டிருந்ததால் அவற்றை அகற்றி நகர சபையால் வழங்கப்படும் மாதிரிக்கமைவாக அவற்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என ஒரு திடீர் அறிவிப்புச் செய்யப்பட்டது. இதன் பொருட்டு அவர்கள் சபைக்கு 500 ரூபா செலுத்தி இடங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பின்னர் அவர்களுக்கு சபையால் மாதிரி வரைபடம் ஒன்று வழங்கப்படும். அவற்றின் பிரகாரம் அவர்கள் வியாபார நிலையங்களை அமைத்துக் கொண்டு சபைக்கு 5000 ரூபா செலுத்த வேண்டும். இதன் பிரகாரம் சுமார் 125 பேர் 500 ரூபா செலுத்தி தமது பெயர்களை பதிவு செய்து கொண்டுள்ளதோடு இவர்களில் 3 பேர் மாத்திரமே 5000 ரூபா சபைக்கு செலுத்தியுள்ளனர். இப்போது இக்கடைகள் 200 ஐ தாண்டியுள்ளதோடு மீதிக் கடைகளுக்கான பணத்துக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது.

இந்த நிர்வாக ஒழுங்கீனம் மற்றும் பொது நிதியைக் கையாளல் காரணமாக இச்சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தடம் புரண்டுள்ள சபையின் நிருவாக இயந்திரத்தை மீண்டும் தண்டவாளத்தில் அமர்த்தி ஓடச் செய்வதென்பது கேள்விக் குறியாகிப் போயுள்ள ;.

ஏறத்தாள இரு தசாப்த காலமாக பாராளுமன்றப் பிரதிநிதி துவத்தை இழந்து தவிக்கும் புத்தளம் நகர நிருவாகத்தை தக்க வைத்துக் கொள்ளும் காலம் இன்றும் எத்தனை நாளுக்கு நீடிக்கும். ஒரு மில்லியனுக்கு மேல் ஏறிப்போயுள்ள சபை வருமான நிலுவைகளை அறவிடும் வழி யாது? புத்தளம் நகர சபையில் ஏதோ நடக்கிறது என்பது மட்டும் நகர மக்களுக்குப் புரிகிறது. அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதில் யாருக்குமே அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

ஊழலற்ற நீதியான ஆட்சியைக் கொண்டு வருவோம் எனக் கூறி பதவிக்கு வந்த ரணில் - ஹக்கீம் அரசு புத்தளம் நகர சபையில் இடம்பெறும் நிகழ்வுகளை கண்டும் காணாததும் போல் இருப்பது ஏன்? காலம் தான் அனைத்துக்கும் பதில் சொல்ல வேண்டும்!

-சத்யவான்

கஹட்டகஸ்திகிலிய தபால் நிலையத்தில் தமிழ்மொழி தெரியாத ஊழியர்கள்

அனுராதபுரம் கஹட்டகஸ்திகிலிய தபால் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த ஊழியர் ஒருவரேனும் இல்லாததால் தமிழ் பேசும் மக்கள் தமது அலுவல்களை செய்து கொள்ள முடியாது மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

கஹட்டகஸ்திகிலிய தபால் நிலையத்திற்குட்பட்ட பிரதேசங்களில் ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் பேசும் குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் இப்பகுதியில் இப்படியொரு அவலநிலை நீடித்து வருகின்றமை மிகுந்த கவலைக்குரிய விடயம் என இப்பிரதேச மக்கள் மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர். இதுபற்றி உரிய அதிகாரிகளிடம் பல முறை முறைப்பாடு செய்த போதிலும் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஏ. பிரதௌஸ், அளுத்கம,கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.

உங்கள் கருத்துகள், படைப்புகள் அனைத்தையும் உடனுக்குடன் எமக்கு அனுப்பி வையுங்கள்; நமது மக்களின் அவலங்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், அரசியல்வாதிகளின் பொடுபோக்குத்தனம், அதிகாரிகளின் அசமந்தம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆதாரங்களுடன் எழுதப்படல் வேண்டும் - நியாயம் கிடைப்பதற்காக வேண்டி தொடர்ந்தும் உரியவர்களுடன் நமது பத்திரிகை ஊடாக பேசிக் கொண்டிருப்போம்.

முஸ்லிம் குரலில் வெளிவரும் கருத்துக்களுக்கு மாற்றுக் குரல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நமக்காக எழுதுவோம்! நமக்குள் உரையாடுவோம். விவாதிப்போம்! என்பதே நமது பத்திரிகையின் இலக்கு.

உனது பிரவசம் சரி எனப் பிரேரிக்கிறேன்

ஓ குரலே!
நீ
முஸ்லிமாகப் பிறந்துள்ளாய்
ஒவ்வொரு குழந்தையும்
மண்ணில் பிறப்பது போல

கொள்கலன்கள்
நிரப்பப்படுவதற்காக
கொள்கைகள்
ஊது குழல்களாய்
சமூகத்தில்
உட்கார்ந்து கொள்கிறது
தப்பி ஓடிய இராணுவ வீரர்களின்
கருங்களில் தவழும்
ஆயுதங்கள் போல.

வாரந்தோறும்
உன்னைச் சேகரிக்கிறேன்
நீ
காணாமல் போவதை
யாரும்
காணக்கூடாது என்று

முஸ்லிம் கோட்டைக்குள்
குந்தியிருந்து
குடித்தனம் நடத்தும்
அக்கிரம அரக்கர்கள்
விரட்டியடிக்கப்பட வேண்டும்
குரலே!
நீ வாரந்தோறும்
வக்கீலாக வந்து
வாதாட வேண்டும்.

குரல்
உன்னை நேசிக்கிறோம்
நேசிப்பதனாலே
உன்னிடம் யாசிக்கிறோம்
இது -
வாசிக்கப்படுவதற்காக மட்டும்
வரையப்பட்டவரிகள் அல்ல
யோக்கியர்களால்
யோசிக்கப்படல் வேண்டும்
என்பதற்காக
சிந்தனைத் தேசத்தில் இருந்து
இறக்கி வைத்துள்ளேன்.

குரலே நீ
வக்காலத்து வாங்குவதற்கு
பிரசவிக்கப்படவில்லைஸ
அதற்காகக் கூட்டமொன்று
நேர்ந்து விடப்பட்டுள்ளது
செக்கு மாடுகள் போல்
சுற்றி வருவதற்கு

இப்போது
சமூகம்
தரட்டை விட்டுத் தூங்குகிறது
விழித்துக் கொள்ளாமல்
அச்சத்தை
காவல் வைத்துள்ளனர்
சலுகைச் செண்டுகளை
கரங்களில் கொடுத்து.

குரலே!
உனது ஓசையே
எமது ஆசை
அதனால்தான்
உனது பிரசவம்
சரி எனப் பிரேரிக்கிறேன்.

-தர்ஹாநகர் ஸ ளம்ஸா

வாரமொரு உரைகல்

மீலாத் சிந்தனை

- மருதூர் மெய்யொளி

தலைமைத்துவம் யாருக்குரியது?

"வசந்தத்தின் ஆரம்பம்" எனப் பொருளப்படும் ரபீஉல் அவ்வல் மாதம் நம்மை வந்த டைந்திருக்கின்றது. இம்மாதத்தில்தான் நபிகளுக்கரசா முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வவனிக்கு வந்துதித்த பெறுதற்கரிதான ஜனனதினமும் உள்ளது.

இம்மாதம் பூராவும் நபியல் லாஹ் (ஸல்) அவாகளின் மீலாத் விழா நிகழ்வுகள் நடைபெறுவது நமது நாட்டில் நீண்ட பாரமபரியத்திற்குரியது. அதன் ஓர் அங்கமாக நபியல்லாஹ் (ஸல்) அவர்களின் ஜனனதினச் சிந்தனையாக "தலைமைத்துவம்" பற்றி அவர்கள் நமக்குச் சுட்டிக் காட்டியவற்றில் ஒரு பகுதியை நமது சிந்தனைக்கு நோக்குவோம்.

நபியல்லாஹ் (ஸல்) அவாகளின் தலைமைத்துவத்தை எடுத்து நோக்கினால், ஒரு நிறைவான பாங்கைக் கண்டு கொள்ளலாம். இதனாற்றான் உலகில் தோன்றிய அனைத்துத் தலைவாகளிலும் முதற்தர சீரிய தலைவராக முஹம்மது நபி (ஸல்) அவாகள் முஸ்லிம் அல்லாத பல அறிஞாகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளாகள்.

இஸ்லாமிய அரசு ஒன்று எவ்வாறு நடைபெறவேண்டும், அதன் தலைமைத்துவம் எவ்வாறு அமைய வேண்டும் போன்றவற்றினை ஒரு கோட்பாடாக மட்டுமன்றி, நடைமுறையிலும் கடைப்பிடித்துக் காட்டியதோடு அதன் எல்லா வழி முறைகளும் வெற்றிக்குரிய தென்பதையும் ஆதாரபூவமாக நிரூபித்துக் காட்டிச் சென்ற முஹம்மது நபி (ஸல்) அவாகளின் முன்மாதிரிகளும் நமக்கின்று இருக்கின்றன.

இஸ்லாமிய தலைமைத்துவத்தின் இலட்சணம், இலட்சியம் என்பவற்றையும் நமக்கு எடுத்துக் காட்டியதோடு, அதற்கேற்ற பயிற்சிகளையும் நபியுல் லாஹ் (ஸல்) அவாகள் வழங்கி இருந்தாகள். அவாகளின் நேரடி வழிகாட்டல்களையும், நேர வழிக்குரிய கலீபாக்கள் எனும் நற்செய்தியையும் பெற்ற அபூபக்கா (ரழி), உமா (ரழி), உஸ்மான் (ரழி) அலி (ரழி) ஆகியோாகளின் தலைமைத்துவ முன்மாதிரிகளும் நமக்கின்று இருக்கின்றன.

"ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் எனபது வானத்திலிருந்து வெளிப்படுவ துமில்லை; பூமியைப் பிளந்து கொண்டு புறப்பட்டு வருவதுமில்லை; அதேநேரம் தலைமைத்துவம் கேட்டுப் பெறுமொன்றுமில்லை. பலஹீனமான இயல்புடையோாகள் அதற்குப் பொருத்தமானவாகளுமில்லை" போன்ற நற்போதனையை முஹம்மது நபி (ஸல்) அவாகளின் தலைமைத்துவத் திலிருந்து நாம் பெறக்கூடியதாகவே உள்ளது.

"பதவிக்காக ஆசைப்படாதீாகள். நீங்கள் அதைக் கேட்டுப் பெற்றால் அதனிடமே நீங்கள் ஒப்படைக்கப்படுவீாகள். நீங்கள் கேட்காமலேயே அப்பதவி உங்களுக்குக் கிடைத்தால் அதன் பொறுப்புக்களை நிறைவேற்ற உங்களுக்கு உதவி செய்யப்படும்" (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

"அபூதா கிப்பாரி (ரழி) அவாகள் நபி (ஸல்) அவாகளிடம் பதவி கோரினா. அதற்கு நபியவாகள் "பதவி கேட்பவாகளுக்கு பதவி கிடையாது" எனத் தரமறுத்து விட்டாாகள். (ஆதாரம்: புஹாரி)

மேற்படி ஹதீஸ்கள் தலைமைத்துவத்தின் ஒரு பாங்கை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. தலைமைத்துவ பதவி என்பது வெறும் ஆசையின் உந்துதலினால் பெறப்படக்கூடாது. அவ்வாறு பெறப்படும் தலைமைத்துவத்திற்கு இறைதிருப்தியும், இறையருளும் இல்லை என்பதை மிகத்துலாம் பரமாக்கி வைப்பதிலும் இந்த ஹதீஸ்கள் பங்கு பெறுகின்றன.

இந்த அறிவுரைகளை மீறியமைந்த தலைமைத்துவங்கள் அடைந்த இழிநிலைகளும், அவாகள் காலத்து நல் மக்கள் உட்பட அடைந்த துன்பங்களும், அவலங்களும் வரலாற்று ஏடுகளில் பதிவாகியே இருக்கின்றன. நாமும் நமது நாட்டில் இவ்வாறான தலைமைத்துவங்களை பாாத்திருக்கின்றோம்.

தலைமைத்துவம் நமக்குத்தானே தரப்படல் வேண்டும் என்ற போராட்டத்தின் மூலமான பதவி மக்களுக்கானதாகவோ, அடுத்தவாகள் பாராட்டும் வகையிலானதாகவோ அமைந்து விடாது என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டு, தேவையான மாற்றீடுகளைத் தேடாத வரை வெற்றிக்கும், உயாச்சிக்கும் உரிய தலைமைத்துவங்களை நாமடைந்து கொள்வது பெருங் கஷ்டமாகவே இருந்து வரும். இதனை நமதின்றைய மீலாத் சிந்தனையாக மனதிலிருத்துவோம். மாற்றங்களை தோற்றுவிப்பதற்கான வழிகளில் செல்வதற்கும் உறுதி பூணுவோம்.

முஸ்லிம் குரல் - முஸ்லிம்களின் உரிமைக் குரல்

முஸ்லிம் குரல் 9 ஆம் இதழ் பொத்துவில் மொஹிடீன் ஸ்ரோஸ் நண்பா மூலம் கிடைக்கப் பெற்றேன். கடந்த 8 இதழ்களையும் வாசிக்க முடியவில்லையே என மனம் வருந்தினேன். முஸ்லிம் குரல் - முஸ்லிம்களின் உரிமைக்குரலாகும். முஸ்லிம் குரல் ஒவ்வொரு முஸ்லிமினதும் வீட்டுக் கதவை தட்ட வேண்டும். 9 ஆம் இதழில் காத்தான்குடி அனீஸ் அஹமட் எழுதிய நம க்கான தொடர்பூ-கங்கள் முஸ்லிம் நெஞ்சமொன்றின் உணாவுகளும் உள்ளக் குமுறல்களும் எதிர்பாாப்புக்களும் என்ற கட்டுரை ஒவ்வொரு முஸ்லிம்களினதும் உள்ளத்தைத் தொட்டுச் சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. பெரும்பான்மை பேரினவாதிகளும், புலி பயங்கரவாதிகளும் முஸ்லிம்களை நசுக்குகின்ற இவ்வேளையில் முஸ்லிம் குரலின் தேவை அத்தியாவசியமாகும். முஸ்லிம் குரல் அரசியல் சாயங்களுக்கு அப்பால் மக்கள் நலன் நின்று உண்மையை உரைப்பது பாராட்டுக்குரியது.

அப்துல் மலிக், சுகாதார பரிசோதகர், பொத்துவில்.

முஸ்லிம்களுக்கு சுயாட்சி முக்கியம்

சிறுபான்மையினரான முஸ்லிம்களின் அபிலாசைகள் இன்று புறக்கணிக்கப்பட்டுள்ளது, அவர்களின் கோாிக்கைகள் நசுக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் நீண்ட கால தனி அலகுக் கோாிக்கை விமாசனத்திற்குட்பட்டுள்ளது. இந்த நிலைப்பாடு முற்றிலும் தவறான செய்கையென கருதலாம். ஏனெனில் முஸ்லிம்களின் தனியலகுக் கோாிக்கை தங்களது சுதந்திர வாழ்வுக்கு ஆதாரமானது மட்டும்தான். இது தமிழ் மக்களின் சுயநிா்ணயத் தளங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதோ அத்து மீறி வாழ்வமைப்பதோ அல்ல. இந்த நியாயமான நிதர்சனமான விடயங்களில் தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தவேண்டும்.

இலங்கையின் வரலாற்றில் தமிழ்-முஸ்லிம் உறவின் மகத்துவத்துக்குத் தனி அத்தியாயமே இருக்கிறது. இது தொடர்பாக புதிய கட்டுமானம் ஒன்றை ஏற்படுத்துவது நல்லுறவுக்கு பாலமாக அமையும். தெற்கில் முஸ்லிம் சிங்கள மக்களுக்கும் இது பொருந்தும்.

அன்று தமிழ்-முஸ்லிம் மக்கள் கூடிக் குலாவி மகிழ்ந்தது வட-கிழக்கு தாய் மண்ணில்தான். இன்று அந்தச் சமரசமும் சமாதானமும் மறந்து சன்டையிடும் நிகழ்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்தக்கால வாழ்வு இன்பமாக இருந்தது. ஆனாலும் இன்று பயந்தவர்களாக ஓடி ஒழிகின்றோம். இந்த விஷ வித்துக்களை விதைத்தவர்கள் யார் ?

மலாய் மைந்தன், றாகம

முஸ்லிம்களின் இன்றைய நிலவரத்தில் எல்லாவற்றையும் ஒப்பிட்டுப்பாா்க்கையில் அது தமிழர்களாகட்டும், சிங்கள ஆட்சியாளர்களாகட்டும், இரு தரப்புமே முஸ்லிம் சமூகத்தை வெறும் கறிவேப்பிலைகளாகவே பயன்படுத்தியுள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனியென துலாம்பரமாகத் தெரிகிறது. சுதந்திர இலங்கையிலும் நாம் பல்வேறு இனக்கலவரங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் ஆளானோம். ஒவ்வொரு பிரச்சினையின் பாதிப்பின் போதும் நாங்கள் சமாதானப் படுத்தப்பட்டு வந்த ஒரு சமூகமாகவே இருந்து வருகிறோம்.

1990 களின் இறுதிப் பகுதிகளில் வடக்கு முஸ்லிம்கள் முற்று முழுவதாக அவர்களின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை பறிகொடுத்தார்கள். கிட்டத்தட்ட 90.000 மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். ஆக மொத்தத்தில் ஒரு நொண்டிச் சமூகமாகவே இந்நாட்டில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்போது நடைபெற்றுக் கொண்டு வரும் சமாதான பேச்சுவார் தைகளில் முஸ்லிம்களின் நிலவரம் என்ன?

சென்ற வருட முற்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் முஸ்லிம்களை மிக மோசமாக ஏாங்கட்டியது. முஸ்லிம்களின் பாதுகாப்பு ஏனைய பிரச்சினைகள் பற்றிய எந்தவொரு சரத்தும் இணைக்கப்படாமலேயே இவ்வொப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகளை அவதானிக்கும் போது முஸ்லிம்களின் "சுயாட்சி" பற்றிய சிந்தனை மேலும் அழுத்தம் பெறவே செய்கிறது.

எமது கடந்தகாலத்தை திரும்பிப்பாா்த்தால் மிகத் தந்திரமான முறையில் நாம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றோம். இத்தனைக்குமப்பால் முஸ்லிம் சமூகம் தனது சுயாட்சி குறித்து சிந்திக்க மறுக்குமானால் இந்த சமூகத்தை முஸ்லிம் அரசியல் தலைமை எவராலும் காப்பாற்ற முடியாது.

சீதனம் பற்றிய கிண்டல்...!

இல்லறம் இனிக்குமா?

ஒரு பெண் நினைத்தாள்... பெரியவாகள் மாப்பிள்ளை பாாத்தால்தான் இப்படிப்பட்டவர தட்சணைப் பிரச்சினை வருகிறது. நாமாகக் காதலிப்போம் என்று முயற்சித்தாள்.

காதலனும் அவளை "தேனே பாலே! மானே மயிலே" என்று வாணித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் அவன் வாணனையை மாற்றினான். "பொன்னே, மணியே! வைரமே!" என்றான். தேனே என்றவன் 'திரவியமே' எனறான். காரணம் அவாகளுக்குத் திருமணம் நிச்சயமாகப் போகிறது.

மணமான பிறகும் அவன் கவலை தீரவில்லை. மனம்வருந்திச் சொல்கிறாள். "காதலிக்கிற காலத்தில் என் கன்னங்கள் சிவந்தன, வெடகத்தால்! கல்யாணம் ஆனபிறகு என் கண்கள் சிவக்கின்றன. துக்கத்தால்" இப்படியிருந்தால் இல்லறம் இனிக்குமா? இன்னும் சிலபோ வரதட்சணை, நகை போன்றவற்றை விரும்பாதது போல் நடிப்பாாகள். ஆனால் காாியத்தில் கண்ணாயிருப்பாாகள்.

ஒட்டியாணம் போதும்!

ஒரு மாப்பிள்ளை யைன் தனது பெரு வருங்கால மாமனாரிடம் இப்படிச் சொன்னான். "மாமா! உங்கள் பெண்ணுக்கு நகைகளை நான் அதிகம் எதிாபாா்க்கவில்லை இடுப்பில் ஒரு ஒட்டியாணம் மட்டும் செய்து போடுங்கள், போதும். இப்போது முடியாவிட்டாலும் பரவாயில்லை. சீமந்தம் நடக்கும் போது செய்து போட்டால் போதும்!"அந்தப் பெண், குட்டியானை போல சாியான குண்டு. ஒட்டி யாணம் செய்ய மட்டும் நூறு பவுன் வேண்டும்!

வரதட்சணைக் கொள்ளை

ஒரு பெண்ணின் தகப்பனாா் தரகரைப் பாாத்து, மாப்பிள்ளை வரதட்சணை எல்லாம் வாங்க மாட்டாா் என்று சொன்னீாகளே. இப்போது ஒரு பொிய பட்டியல் கொடுக்கிறீாகளே என்ன அது!?" என்று கேட்டாா்.

தரகா் பதில் சொன்னா; "வேறொன்றும் இல்லை. மாப்பிள்ளை கடன் வாங்கி இருக்கிற நபாகளின் விலாசப்பட்டியல் இது. நீங்கள் கடனை யெல்லாம் அடைத்து விட்டால் போதுமாம். வரதட்சணை என்று தனியாக வேண்டா மென்று சொல்லி விட்டாா்."

கடன் தொகையைக் கூட்டிப் பாாத்தால் இரண்டு இலட்சத்துக்கு மேல் இருந்தது!

"வரதட்சணை என்பது ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்தைக் கொள்ளையடிப்பது" என்றா ஒரு சிந்தனையாளா். அந்தக் கொள்ளையை நாம் தடுக்க வேண்டாமா?

அஷ்ரஃப் ஆதார வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஏன் மறுக்கப்படுகிறது!

இந்த வருட ஆரம்பத்தில் மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்முனை அஷ்ரஃப் ஆதார வைத்தியசாலைக்கான 90 இலட்சம் ரூபாய் பணம் இன்னும் செலவிடப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகம் இப்பணத்தை வழங்குவதில் திட்டமிட்டு பாரபட்சம் காட்டி வருகிறது.

வருட நடுப்பகுதியாகியும் இப்பணம் செலவிடப்படாது இருக்கும் நிலையில் இந்த வருடத்திற்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட இப்பணம் செலவிடப்படே ஆகவேண்டும். (செப்டம்பருக்குள்) அல்லது திறைசேரிக்கு திரும்பிச் சென்று விடும். இதற்காகவே திட்டமிட்டு இப்பணம் செலவிடப்படாது வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. பெருமளவிலான பொது மக்கள் இவ்வைத்தியசாலையால் பயன் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வுகள்

-சிராஜ் மஷ்ஹூர்

பாராளுமன்ற அரசியலின் தோல்வியும் சிவில் சமூக செயற்பாட்டின் உடனடித் தேவையும்

விஸ்லாவா சிம்போர்ஸ்கா எனும் போல ந்துப் பெண் கவிஞரின் கவிதை அடிகளை மேற்கோளாகக் காட்டி இக்குறிப்பை ஆரம்பிப்பது பொருத்தமாக அமையும். சிம் போர்ஸ்கா 1996 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றவர் என்பதும் கவனிப்புக்குரியது.

"நமது யுகத்தின் குழந்தைகள் நாம்
இது ஓர் அரசியல் யுகம்.

"பகலும் இரவும் முழுவதும்
உங்கள், எங்கள், அவர்கள்
எல்லா நடவடிக்கைகளும்
அரசியல் நடவடிக்கைகள்தான்.

நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையா?
உங்கள் மரபணுவில் ஓர் அரசியல் கடந்தகாலம்
உங்கள் சருமம் ஓர் அரசியல் வேடம்
உங்கள் கண்களில் ஓர் அரசியல் சாய்வு.

நீங்கள் எதைச் சொன்னாலும் அது எதிரொலிக்கும்
நீங்கள் சொல்லாமலிருந்தாலும் அதுவே பேசும் - ஆக,
ஏதோ ஒரு வழியில் நீங்கள் அரசியல் பேசுகிறீர்கள்"

ஆம்! நாம் எல்லோருமே ஏதோ ஒரு வழியில், அரசியல் பேசவே செய்கிறோம். எந்த "அரசியலை" வெறுப்பதாக நாம் அடி க்கடி சொல்கிறோமோ, அதன் மூலமும் நாம் "அரசியலையே" பேசுகிறோம். அரசிய லைத் தவிர்த்துப் பேசவோ வாழவோ நம் மால் முடியாமல் இருக்கிறது என்பதுதான் யதார்த்தம். மனிதன் ஓர் அரசியல் பிராணி என்ற தொடா உருவானதே இதன்டியாகத்தான்.

முஸ்லிம் அரசியல் மிக மோசமாக நலி வுற்று சிதைந்துள்ள நிலையில், இந்தப் பீடிகை உங்களுக்கு சலிப்பூட்டுவதாக இருக்கக் கூடும். ஆயினும், அரசியல் பற்றி நம்மில் பலருக்கு இருக்கும் மிக மேலோட் டமான புரிதல், இவ்வாறு பேசுவதை தவிர் க்க இயலாததாக மாற்றியுள்ளது.

நம்முள் மிகப் பெரும்பாலானோா அரசி யல் என்றால் கட்சி அரசியல் என்றுதான் புரிந்து கொண்டிருக்கின்றனர். ஐ.தே.க., ஸ்ரீலசுக என்றோ அல்லது முஸ்லிம் காங் கிரஸ், நுஆ, அஷ்ரஃப் காங்கிரஸ் என் றோ நாம் தலையைப் பிய்த்துக் கொள்கி றோம். சிலரைப் பாராளுமன்ற ஆசனங் களில் இருத்தி அழகு பார்க்கிறோம். நாம் அறிந்த வரை இவாகளுள் மிக அதிகமா னோா அக்கதிரைகளுக்குப் பாரமாக மட் டுமே இருந்திருக்கின்றனா. யாரோ ஒரு சிலரை பாராளுமன்றத்திற்கும் அனுப்புவ தற்காக நமது மக்கள் தமக்கிடையே வன் முறையின் எல்லை வரைக்கும் சென்று திரும்பியிருக்கின்றனா. ஆனால் அவாகளுடாக அனுபவித்த சமூக நலன் வெகு சொற்பமே.

ஒரு காலத்தில் எந்த அரசியல் குரலோ, பலமோ இன்றி நமது மக்கள் ஒதுக்கி ஓரந் தள்ளப்பட்டனா். கொலனி த்துவ அரசியல் சூதாடிகளிடம் நமது அடிப் படை உரிமைகளுக்காக மன்றாடி நிற்க வேண்டியிருந்தது. சுதந்திரமடைந்த பின் ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சு.க. போன்ற அரசியல் கட்சிகளுக்கு மாறி மாறி வால் பிடிக்கும் இழிநிலையே நமது தலைவிதியாக இரு ந்து வந்தது.

1980 களின் பிற்கூற்றில்தான் நாம் நமக்கான அரசியல் கட்சியைத் தொடக் கினோம். நமது தனித்துவக் குரலை ஓங்கி ஒலித்தோம். நமக்கான அரசியல் கோரிக் கைகளை. அபிலாஷைகளை வென்றடை வதற்கான தொடாச்சியான போராட் டத்தை முன்னெடுத்தோம். அதன் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் கண்டடை ந்தோம்.

இத்தனித்துவ அரசியல், பின்னா வழி தடுமாறி தடமழிந்து போகுமளவுக்குச் சென்று விட்டதும் நமக்கு நன்கு தெரியும். ஆயினும் நமக்கான அரசியல் இயக்கத்தை. நமது சுயத்தை நாம் எதற்கும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. நமது அரசியல் தலைவாகள் நம்மை ஏமாற் றிய போதெல்லாம் நமது மக்கள் வீதிக ளுக்கு வந்தனா. நமது இளைஞாகள் விடு தலை உணாவுகளால் திடம்பெற்றனா.

ஆம்! கட்சி. அரசியல் நமமைக் கைவிடத் தொடங்கியதை, நமது நீண்ட அரசியல் வர லாற்றில் நாம் இப்போதுதான் பிரக்ஞை பூாவமாக உணர ஆரம்பித்திருக்கிறோம். முஸ்லிம் அரசியலானது பாராளுமன்ற அரசி யலின் தோல்வியை அடையாளம் காட்டத் தொடங்கியுள்ளது. 26 முஸ்லிம் உறுப் பினாகளை பாராளுமன்றத்தில் நாம் கொண்டிருக்கிறோம். இது நமது குடித் தொகை விகிதாசாரத்தை விடவும் அதிகமா னது. ஆயினும், வரலாற்றின் மிக முக்கி யமான இத்தருணத்தில், நமது அரசியல் அபிலாஷைகள் குழிதோண்டிப் புதைக் கப்படும் போதெல்லாம் நமது பிரதிநிதிகள் எதுவும் செய்ய இயலாது கைகட்டி வாய் பொத்தி நிற்கின்றனா. இந்தத் தோல்வி மிகப் பெரும் வரலாற்று அவமானமாகும்.

நமது மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சி மாற்றத்தை சாத்தியமாக்கிய நமது தலைவாகளின் குரல் இன்று சுருதியிழந் திருக்கிறது. ஆட்சியாளாகளின் பங்காளி கள் என்று தமக்குத் தாமே மாாத்டிக் கொள்கின்றேன். ஆயினும் பேச்சுவாா்த்தை மேசையில் சமத்துவ அந்தஸ்துடன் கூடிய தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண் டும் என்ற நமது மக்களின் ஏகோபித்த கோரிக்கை நமது முகத்தில் தூக்கி வீசப்பட் டுள்ளது. ஆனாலும், நமது தலைவாகள் என்று தம்மைத்தாமே அழைத்துக் கொள் வோா அரசாங்கத்தைப் பாதுகாப்பதிலும் தம து மந்திரிப் பதவி தரும் கிறக்கத்திலும் ஊறித் திளைத்திருக்கிறன்றனா. இந்நிலை நம் மக் கள் எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.

அதாவது, நமது மக்களின் அரசியல் அபிலாஷைகளும் தலைவாளாகத் தம்மைக் கருதியிருப்போரினது அபிலாசைகளும் திட் டவட்டமான வேறுபாடுகளைக் கொண் டுள்ளது. இங்குதான் நமது மக்களது அர சியல் தெளிவான விலகலை (deviation) அடையாளங் காட்டத் தொடங்கியுள்ளது. பாராளுமன்ற அரசியலின் மீது நம்பிக்கையி ழந்து புதிய தலைமுறை ஒன்று நம்மத்தியில் தோன்றி வருகிறது. கட்சி அரசியலின் தோல்வியை அறிவிக்கும் பல்வேறு சமிக் ஞைகள் அவ்வப்போது வெளிவரத் தொட ங்கி விட்டன. சந்தேகத்திற்கிடமின்றி நாம் ஒரு நிலைமாறு காலகட்டத்தை அடைந்தி ருக்கிறோம்.

புறச்சூழலின் நெருக்குதல்களும் அழுத்தங்களும் தீவிரமாக செயற்படும் ஆற்றலை நம்மிடம் வேண்டி நிற்கின்றன. நமது மௌனம் நமக்குத் தோல்வியை மட்டுமே அறு வடை செய்து தரும். நாம் ஏதோ ஒரு வடிவில் செயற்பட்டாக வேண்டும் என்ற வரலாற்றுக் கடமை நமது தோள்களில் ஏற் றப்பட்டுள்ளது.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணாவு ஒப்பந்தம் மிகத் தெளிவாக நம் மை ஏமாற்றி விட்டது. இதைப் புரிந்து கொண்ட நமது மக்களும் சமூக சக்திகளும் சமீப காலங்களில் பல்வேறு வகைப்பட்ட மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனா. நமது செயற்பாடுகள் போதாது என்பதே நம்மி டமுள்ள பிரதான குறைபாடே தவிர, நாம் அறவே செயற்படவில்லை என்ற எண் ணம் மிகப் பெரும் பொய்யேயன்றி வேறென்ன?

நமது மக்கள் வீதியில் இறங்கத் தொடங்கி விட்டனா். சிவில் சமூகத்தை மேலும் வினைத்திறனுடன் செயலாற்றத் தூண்ட வேண்டிய. அதை ஒழுங்குபடுத்தி சரியான செயல்நெறியூாக நகாத்த வேண்டிய கடப்பாடு நம்முன்னே உள்ளது.

பாராளுமன்ற அரசியலின் தோல்வியானது திக்கற்று போக்கிடமற்று அலை யும் ஒரு வகை வீரக்தி நிலைக்கு பலரை இட்டுச் சென்றுள்ளது. இது மிகவும் அபாயகரமான நிலையாகும். அடுத்த கட்ட நகா்வு பற்றிய குழப்பமான மனநிலையில் நமது மக்கள் பலா் சுற்றிச் சுழல் கின்றனா். இவாகள் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றும் நடை முறை வேலைத்திட்டமே நமது இன்றைய உடனடித் தேவையாகும்.

கட்சி அரசியல் படிப்படியாக செயலிழந்து. கொஞ்சம் கொஞ்சமாய் மாணித் துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சிவில் சமூகம் முனைப்புடன் செயலாற்று வதனூடாக மட்டுமே. பாராளுமன்ற அரசியலின் தோல்வியூடாக நாம் இழந்தவற்றில் சிறிதளவையேனும் மீளப் பெற முடியும்.

சிவில் சமூகம் தனது சரியான பணி யை பொருத்தமானதாக ஆற்ற முடியுமா யின், நம்மை யாரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாத ஓா அரசியல் பலத்தை நாம் உறுதியாகக் கட்டியெழுப்ப முடியும். அதுவே இப்போது நம் முன்னுள்ள ஒரே தெரிவாகும். ●

அரங்கேறாத நாடகங்கள் நம் சமூகத்தில் ஆயிரம் ஆயிரமாய்...

'அதென்ன அரங்கேறாத நாடகங் கள்..?' என விற்புருவங்களை வினாக்குறியாக்கி, மனம் தெளிவுபெற தேடுதல் நடத்துக்கிறதா? பருவ வயதடைந்தும், உரிய காலத்தில் மணஞ்செய்து இல்லற வாழ்வில் ஈடுபடாமல், வீட்டு ஜன்னல் கம்பிகளை எண்ணியபடி, ஏக்கப் பெருமூச்சுக்களை இதயத்தில் ஏந்தியபடி வாணாளைக்கழிக்கும் நம் சமுதாய சோதரிகளைத்தான் "முல்லா" இங்கே அரங்கேறாத நாடகங்கள் எனக் குறிப்பிட்டேன்.

இந்த முஸ்லிம் கன்னியர் நம் சன்மார்க்க சமுதாயத்தில் ஏதோ ஒரு சிலர்தான் இருக்கின்றனர். என ஆறுதலடைய முடியாது. சமுதாயப் பிரக்ஞையுள்ள அனைவரும் கவலையுறும் அளவிற்கு, கணிசமான அளவுபேர் மௌனச்சித்திரங்களாக இருக்கவே செய்கின்றனர்.

இத்தகையோர் உரிய காலத்தில் தக்க துணைவனைக்கரம்பிடித்து வாழாமல் வாழ முடியாமல் இருப்பது, ஏதோ தனிப்பட்ட ஒவ்வொருவரின் வீட்டுப் பிரச்சினை என்று ஒதுக்கவோ, ஒதுங்கி நடக்கவோ முடியாது. பல்வேறு சமூகப் பாதிப்புகளுக்கு வடிகாலாக இருக்கும் இப்பிரச்சினையிலும் சன்மார்க்க சமுதாயம் அக்கறை செலுத்தி, விடிவுக்கு வழிகாண வேண்டும்.

வயது ஏறி .. ஏறி, உரிய வரன் கிடைக்காமல், அப்படியே கிடைத்தாலும் அவ்வரனைப் பிடித்துக் கொள்ளும், வசதி வாய்ப்பின்றி "முதிர்கன்னி" களாக மாறும் கொடூரமும் நம்நடுவே இருக்கத்தான் செய்கின்றது. முதிர் கன்னியர் மணஞ்செய்து கரு உண்டானால், பிரசவத்தில் சில சங்கடங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்ற மருத்துவ குறிப்பும் நம் சிந்தனையைக் கவவவே செய்கிறது.

முஸ்லிம் இளம் பெண்கள் உரிய வயதெய்தியபோதும், மணஞ்செய்ய முடியாதிருப்பது ஏன் என்றொரு வினாவை எழுப்பினால் அதற்கு சீதனப்பிரச்சினையே ஒரு தடைக்கல்லாக இருக்கிறது என்பதை நம்மில் பலரும் அறிவோம். ஆனால் சீதனப்பிரச்சினையை சீர்தூக்கிப்பார்த்து அதனை சிம்மாசனம் ஏற்றி மகிழ்வோர் பரவலாக நம்மிடையே இருக்கின்றனரே தவிர, "சீ.." என ஒதுங்கிவிட்டு, இஸ்லாமிய வழியில் சீர்திருந்தக் கல்யாணத்தைத் தம் பிள்ளைகளுக்கு செய்துவைக்கும் (முஸ்லிம் பெற்றோர் அரிதிலும் அரிது என்றே முல்லா அறுதியிட்டு உறுதியாகச் சொல்வேன்.

இஸ்லாம் துறவறத்தை ஆதரிக்கவில்லை. இல்லறத்தையே இருகரம் நீட்டி வரவேற்கிறது. இதனைபெருமானார் (ஸல்) அழகாக விளக்கினார்கள். "உங்களில் எவருக்கு வசதி வாய்ப்பு உண்டோ, அவர் திருமணஞ் செய்துகொள்ளட்டும். அவ்வாறு வாய்ப்புக்கிட்டாதவர்கள் நோன்பு நோற்கட்டும்" என்பது எந்தல் நபியின் வாக்கு.

முஸ்லிம்கள் எப்படி திருமணஞ் செய்யலாம்? என்ற வினாவுக்கும், நம் இமாம்களான மார்க்க அறிஞர்கள் குர்ஆன் காட்டிய வழியில், கோமான் நபி (ஸல்) யின் ஒளியில் சட்ட விளக்கங்களை வகுத்துள்ளனர். ஒரு முஸ்லிம் இளைஞன் ஒரு முஸ்லிம் பெண்ணைக்கரம் பிடிப்பதானால் "மஹர்" எனும் "இறை விதித்த கொடை" யை (அன்பளிப்பாக - அதற்கு அளவேயில்லை - விரும்பியளவு தரலாம்) கொடுத்துவிட்டே கரம் பற்ற வேண்டும் என்பதே இஸ்லாமிய திருமணச்சட்டம். இஸ்லாமியச் சட்டம் இவ்வாறு இருக்கும்போது நீண்டகாலமாகவே நம் இலங்கை முஸ்லிம்கள் சட்டத்தை மீறி, இஸ்லாம் கூறாதவைகளை விதிமுறைகளாகப் பின்பற்றி வருவதுதான், மனச்சிணுங்கலை ஏற்படுத்துகிறது. இன்றைய நம் சமூகத்தில் நடைமுறையில் இருந்துவரும், இஸ்லாத்திற்கு விரோதமான அந்தத் திருமண விதிமுறை யாது?

ஒரு முஸ்லிம் இளைஞனை திருமணம் பேசினால், மாப்பிள்ளை விட்டார் முதலில் கேட்பது "சீதனம் எவ்வளவு தருவீர்கள்?" என்பதே! சீதனம் பல உருவங்களில் கேட்கப்படுகிறது, தரப்படுகிறது,

வாங்கப்படுகிறது. ரொக்கப்பணம், காணி வயல், வீடு, வாகனங்கள், தற்போது ஆட்டோ என்று பல உருவங்களில் சீதனம் ஏழைப் பெண்களின் வாழ்வில் விளையாடி வருகிறது. "ஒங்க பிள்ளைக்கு நீங்க விரும்பியளவு நகை போடுங்கள் அதுபற்றி எங்களது வற்புறுத்தல் எதுவுமில்லை. ஆனால் சீதனமாக மேற்படி வடிவங்களில் ஏதேனும் ஒன்றை அவசியம் தரவேண்டும்" என்பது கட்டாயம்.

இப்படி மாப்பிள்ளை வீட்டிலிருந்து விதிக்கப்படும்போது, ஏழை, நடுத்தர மணமகளின் நிலை என்ன? ஒன்றுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளை பெற்ற தகப்பனின் கதி என்ன? இதை எவருமே சிந்திப்பதாகவோ. இதுவரை சிந்தித்ததாகவோ எந்தத் தடயமும் இல்லை. மார்க்கத்தைத் துறைபோகக் கற்ற உலமாக்களும் தத்தம் மகன்களுக்கு சீதனம் வாங்கவே செய்கின்றனர். படித்தவர்கள் வரிசையில் வைத்து கண்ணியஞ் செய்யப்படும் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்களும் வாங்கவே செய்கின்றனர். "இது எங்கள் பேஷனல் விஷயம்" என்பாருமுளர்.

இப்படி "வாங்குவோர்" அனைவருமே கூறும் சமாளிப்பு, வாதம் என்ன தெரியுமா? "திருமணம் செய்து வாழவரும் பெண்ணை, நல்ல நிலைமையில் வைக்க வேண்டாமா? தம் பெண் பிள்ளைகள் நல்லா வாழனும் என்பதற்காகத்தானே தருகிறார்கள். அதனால் நாங்கள் வாங்குகிறோம் "என்கின்றனர்" மஹர் தந்து உங்கள் மகளை மணந்து, நல்லமுறையில் வாழ வைக்கிறேன் எனக்கூறும் உண்மையான ஆண்மகன் நம் சமூகத்தில் இல்லையோ? என்று சந்தேகம் எழுவதை "முல்லா" வினால் தட்டிக்கழிக்க முடிவில்லை.

மாளிகையில் மந்தகாச வாழ்வு வாழும் முஸ்லிம் தனவந்தர்கள், இஸ்லாத்தையோ, சமூகத்தில் ஏழைக் குமர்ப் பெண்களையோ, பிற சமூகத்தவர் தவறாக எடைபோடுவதால் ஏற்படும் பொறாமையையோ கிஞ்சித்தும் கவலைப்படாமல் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இஸ்லாம் வெறுக்கும் ஆடம்பரத்தையும் டாம்பீகத்தையும் துணைக்கழைத்தபடி நடத்தும் திருமண தர்பார் நிகழ்வுகளும் நம்மிடையே இடம்பெறவே செய்கின்றன. இத்தகைய விழாக்களுக்கு உலமாக்களும், அறிஞாகளும், அரசியல் தலைவாகளும் வருகை தரவே செய்கின்றனா. இவர்களில் ஒருவர்தானும் "இந்த ஆடம்பரம் இஸ்லாத்திற்கு விரோதமானது" என்று சொல்வதில்லை. மாறாக அப்படிச் சொல்வது "மெனஸ் ஆகாது" எனக்காரணம் கூறி நழுவிவிடுவர்.

திருமண தர்பார் விழா நடத்திய தனவந்தரோ, தனது செய்கைக்கு பெரியவர்களே அங்கீகாரம் தந்து கண்ணியம் செய்துவிட்டனர் என்றே தனக்குள் "பாஸ் மார்க்" போட்டுக் கொள்கிறார். இத்தகைய சரிகாணும் மன நிலை நம்மவர் மத்தியில் நிலவுவதால், பிழையான, சரிஆவுக்கு மாறான ஒரு நடைமுறை தொடரவே செய்யும்.

இதனால் நம் சமுதாய சகோதரிகள் பலர் உரிய நேரம் வந்தும், கடந்தும், திருமணமாகாமல் இருக்கின்றனர். சமுதாயத்தின் முன் வரிசையில் இருப்போர் இப்படி அங்கீகரித்து ஆமோதித்து வருவதனால் நடுத்தர, வசதி குறைந்த குடும்பத்துத்தலைவர்கள் தம் புத்திரிகளுக்கு மணஞ்செய்து வைப்பதில் ஆடிபோகின்றனர். தந்தையின் தடுமாற்றம் உணர்ந்து அரங்கேறாத நாடகங்கள் ஊமை உள்ளங்களாகவே உறைந்து விடுகின்றன.

சில இடங்களில் காபீர்களின் கண் வீச்சுக்களுக்கு இந்த ஊமை உள்ளங்களில் ஒருசில, சிறையாகி, இரையாகி வேலி தாண்டிவிடும் விபரீதங்களும் சமூகத்தைத் தலைகுனியச் செய்துவிடுகின்றன என்பதை "முல்லா" அறிந்துள்ளேன். சமுதாய நேசர்கள் "இதுகுறித்து" அவசர நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். உலமாக்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் போன்றோர் ஒன்று கூடி சீதன ஒழிப்பு முயற்சிகளில் ஈடுபடவேண்டும். தொடர்ந்தும் மௌனமானால் நிலைமை மோசமாகலாம் என்பதை "முல்லா" முன்கூட்டியே சொல்லிவைக்க விரும்புகிறேன். இதுபற்றி சிந்திப்போமா?

முஸ்லிம் அரசியல் குத்துச்சண்டை

தமது பா.உ.களுக்கு ஓட்டுப்போட்ட முஸ்லிம்களின் தலை கவிழும் பல சம்பவங்களுள் ஒன்று 04-05-2003 அன்று சக்தி டி.வி.இன் மின்னலில் நடந்தேறியுள்ளது. யாழ் தாயகத்தில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு இடம்பெயர் சேவை ஒன்று நடைபெறவிருந்தது. அதற்கு உரிமை கோரும் விளம்பரப் போட்டியில் ரிசாட் பதியுதீனும் நூர்ஷன் மசூரும் ஆதரவாளர்களுடன் சேர்ந்து குழப்பியதில் அச்சந்தாப்பத்தை அம் மக்கள் இழந்து விட்டனர். 'மின்னல்' என்ற பெயரில் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் முஸ்லிம்களைக் குறி வைத்துத் தாக்கும் ரங்கா. காத்திருந்தவர் போல மேற்படி இரு பா.உ.களையும் மின்னலுக்குக் கொண்டு வந்தார். 'நடமாடும் சேவை பாதிக்கப்பட்டமை க்கு நீதான் காரணம்' என ஒருவர் மீது ஒருவர் சேறு வீசினர். 'அல்லாஹ் மீது ஆணையாக என்று ரங்காவை விழித்து இவர்கள் பேசியவிதம் முஸ்லிம்கள் அனைவரையும் தலைகுனியச் செய்தது. நீ பணக்காரனா? நான் பணக்காரனா? நீ அப்படிச் சம்பாதித்தாய்; நான் இப் படிச் சம்பாதித்தேன். என்றெல்லாம் இவர்கள் தத்தம் நாற்றங்களை டி.வி.இன் திரை வழியே கொட்டியது அருவருப்பாயிருந்தது. இவர்கள் இருவரது யோக்கியதை சகலதும் எமக்கு நன்கு தெரிந்திருக்க, 'நான் தான் யோக்கியன்' என நிரூபிக்க இவர் கள் புரிந்த கழிசடைத் தனங்களை சகி க்க முடிய வில்லை. இவர்களா அரசியல் வாதிகள்? மு.கா. பா.உ.களின் சரக்கு இவ்வளவு தானா? இத்தகையவர்களுக்கா நாம் ஓட்டுப் போட்டோம்? மக்களிடம் ஓட்டை வாங்கிக் கொண்டு இவர்கள் புரியும் சேட்டைகளை ஏனைய சமூகத்தவர் எப்படி எடுத்துக் கொள்வார்களோ?



இவர்கள் இப்படியென்றால் ஏனையோர் எப்படியோ? என ஓட்டுப் போட்டவர் களை கன்னத்தில் கைவைக்க வைத்து விட்டார்கள்.

'யா அல்லாஹ்' எமது விடுதலைத் தாபனமான முஸ்லிம் காங்கிரஸ் வியாபாரிகளிடமும், செப்படி வித்தைக்காரர்களிடமும் சிக்கிச் சீரழிகிறது. இவர்களின் கோமாளித்தனங்களில் இருந்து எமது விடுதலைத்தாபனமான மு.கா. வை காப்பாற்றித் தருவாயாக.

இப்படிக்கு
ஓட்டுப்போட்டவர்கள்.

புஷ்ஷின் நாடகமா? அல்லது சதியா?

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் ஈராக்கிற்கு தமது ஐக்கிய அமெரிக்க குடியரசு விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்கி விட முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

ஐ.நா.சபையின் செயலாளா நாயகத்திற்கும் இது குறித்து அறித்துள்ளதோடு ஐ.நா சபையினால் ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையையும் வெகுவிரைவில் நீக்கி விடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதற்காக பிரிட்டன், ஸ்பெயின் போன்ற நாடுகளின் ஆதரவு தனக்கு கிடைக்கு மென்றும் பொருளாதார தடை நீக்கப்பட்டதன் பின்னர், ஈராக் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் எனவும் கூறியுள்ளார்.

ஏற்கனவே யுத்தத்திற்கு முன் பிருந்து அமெரிக்காவின் முடிவுகளை எதிர்த்து வரும் சோவியத் ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகள் அமெரிக்காவின் இந்த முடிவுக்கு உடன்படுமா? அமெரிக்காவின் இந்த முடிவு பாரிய திட்டத்தின் வெளிப்பாடே தவிர ஈராக் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதோ அவாகள் மீது கருணைகாட்டுவதோ அல்ல. இந்த கருணையின் பின்னனியில் உள்ள சதி வலைகள் எத்தனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திசாலித்தனம் + கோமாளித்தனம் = பட்டிமன்ற நடுவர்கள்

பண்டிகை நாட்களுக்கு சிறப்பு ஒளிபரப்பை தொலைக்காட்சி நிலையம் தொடங்கிய பிறகு, பண்டிகை நாட்களுள் ஒன்றான சடங்காக பட்டிமன்றம் ஆகிவிட்டது. தனியார் தொலைக்காட்சி அலைவரிசைக்கும் சுலபமாக தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் பட்டிமன்றமும் ஒன்றாகும். விடுமுறையாக வுமிருந்து, விழா நாளாகவும் ஆகிவிட்டால் "பட்டிமன்றம்" ஒன்று நம் வீட்டுக்குள் வந்துவிடுகின்றது. விழா நாட்களில் தொலைக்காட்சி தொடுவதில்லை என விரதம் பூண்டிருக்கிறவர்களுக்கு பட்டிமன்றம் என்ன, பட்டிமன்ற நடுவர்கள் என பிரசித்தி பெற்றுள்ள *பாப்பையா, திண்டுக்கல் லியோனி* யார் என்று சொல்ல வேண்டும். "பட்டிமன்றம் பாப்பையா" எனப் பையா வாங்கிய பேரா. சாலமன் பாப்பையாவைவிட லியோனியின் குரல் இன்று தமிழக கிராமங்கள் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. சென்னையிலிருந்து கன்னியா குமரிக்குப் பயணிக்கும் ஒரு தமிழ் உயிரி, தேநீர் குடிக்க நிறுத்தும் இடங்களில் அந்த குரலைக் கேட்காமல் தப்பிக்க முடியாது... அவை வெறும் குரல்கள் மட்டும்தானா?

நல்லது X கெட்டது: இன்பம் X துன்பம்: சரி X தவறு: உண்டு X இல்லை: சிறியது X பெரியது போன்ற எதிர்வுகளை முன்மொழிவதன் மூலம் கட்டியெழுப்பப்படும் அமைப்பைக் கொண்டதாக பட்டிமன்ற வடிவம் இன்றுள்ளது. "நடுவர் இரண்டு அணிகள்" என்பது அதன் பொதுவான வடிவம்.

இன்றைய பட்டிமன்றங்கள் பெரும்பாலும், ஐரோப்பியாகளின் ஆளுகையால் உண்டான நீதிமன்றத்தின் வடிவத்தையே நமக்கு நினைவூட்டுகின்றன. "நடுவர் அவர்களே! கனம் நீதிபதி அவர்களே! எதிரணி வழக்கறிஞர், வாதம், சான்றுகள், மடக்குதல், பொயின்ட், விளக்கம் போன்ற சொல்லாடல்கள் பட்டிமன்றங்களில் திரும்பத் திரும்ப வரும் நிலையில் நடப்பது நீதிமன்ற விசாரணை போன்றது என்பதை பார்வையாளர்கள் நம்புகிறார்கள்; நம்ப வேண்டும் என வற்புறுத்தப்படுகிறார்கள்.

ஐரோப்பிய பாணி நீதிமன்ற விசாரணைகளில் உண்மை அல்லது நியாயம் அல்லது தர்மம் வெல்லும் என்ற எதிர்பார்ப்புக்கு இடமில்லை. வாதம்தான் வெல்லும். வழக்கறிஞர்களின் வாதத்திறமையும் - சாட்சிகளிடமிருந்து பெறப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே நீதிபதி தனது தீர்பை எழுதுவார். பட்டிமன்றங்களிலும் கூட வாதங்களின் அடிப்படையிலே தீர்ப்பு எழுதப்படுவதாக பார்வையாளர்கள் நம்புகின்றார்கள்.

தொடக்கத்தில் இலக்கிய சுதாபாத்திரங்களே பட்டிமன்ற விவாதப் பொருளாக இருந்தது: பட்டிமன்றங்களைத் தங்களது ஊடகமாகக் கொண்ட தமிழ் புலவர்களும், பேராசிரியர்களும், அதன் வழியே இலக்கிய இரசனையைப் பாமர மக்களிடம் வளர்ப்பதாகவும். இலக்கிய விமர்சனத்தை பரந்த தளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று நம்பியதும் காரணங்களாக இருக்கலாம்.

-கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா?

- பத்தினி தெய்வம் பாஞ்சாலியே! சீதையே!

- பதிவிரதம் காத்தவர்களில் விஞ்சி நிற்பவள் நளாயினியே! மண்டோதரியே!! சாவித்திரியே!!

போன்ற தலைப்புகளும்.

- ராமகதையில் விஞ்சி நிற்பது காதல் சுவையே! வீரச் சுவையே! பக்திச்சுவையே!

- திருக்குறளில் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுவது அறத்துப் பாலே! பொருட்பாலே! காமத்துப்பாலே!

- காவிய நாயகர்களில் தலைசிறந்தவன் ராமனே! கோவலனே!!

போன்ற தலைப்புகளும் விவாதிக்கப்பட்டு, ஓர் ஊரில் கண்ணகியும், இன்னொரு ஊரில் மாதவியும் கற்பில் சிறந்தவர்களாக ஆக்கப்பட்டார்கள். ஓர் ஊரில் இராமனுக்காக வாதாடியவர் இன்னொரு ஊரில் கோவலனிற்காக வாதாடுவதும் உண்டு. பட்டிமன்றப் பேச்சாளர்களுக்குள் "இலக்கிய பண்புரியவர்கள்" என்ற பிம்பமும், "வழக்கிற்கு வாதாடுபவர்" என்ற பிம்பமும் செயற்பட்டதால் இந்தக் குழப்பங்களும் நேரிடுவதுண்டு. நடுவர்களுக்குள்ளும் அந்தக் குழப்பங்கள் செயற்படுவதால் இலக்கிய விவாதங்களுக்கு தலைமை தாங்குபவர்கள் என்பதாகவும், நீதிமன்ற விசாரணையின் நடுவர்களாகவும் அவர்கள் செயற்பட்டார்கள்.

தமிழ் பேராசிரியர்களும், புலவர்களும் மட்டுமே பெரும்பாலும் பங்கேற்று வந்த பட்டிமன்றங்களுக்கு நடுவராக பொறுப்பேற்றுக் கொண்டதன் மூலம் அவற்றின் விவாதப் பொருளில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியவர் குன்றக்குடி அடிகளார். அதுவரை அரசியல் மேடைகளில் மட்டுமே விவாதப் பொருளாகி இருந்து வந்த பகுத்தறிவு, சோசலிசம், ஆன்மீகம், வாக்குச்சீட்டுப் போன்றன பட்டிமன்ற வாதப் பொருளாக மாறியதற்கு அடிகளாரே முன்னோடி. "நாட்டின் வளாச்சிக்குத் தேவை முதலாளித்துவப் பொருளாதாரம்...! சமதாம்ப் பொருளாதாரம்!" என்று அணிகள் பிரிந்து வாதம் செய்யும் போது தீர்ப்பு வழங்க வேண்டிய அடிகளார் இரண்டும் கலந்த கலப்புப் பொருளாதாரமே இந்தியாவை வளமடை யச் செய்யும் என்று தீர்பு வழங்குவார். கூட்டம் ஏற்றுக் கொண்டு கலைந்து போ கும் நேருவின் வார்த்தைகளைத் திரும்பக் கேட்பதாக பார்வையாளர்களுக்கு எண்ணம். பட்டி மன்றத்தில் அடிகளார் ஏற்படுத்திய அந்த மாற்றம் வெறும் உள்ளடக்க

மாற்றம் மட்டுமல்ல. பட்டி மன்றத்தின் தத்துவார்த்த அடித்தளத்திலும் உட்டைப் பேற்படுத்திய ஒரு மாற்றம்.

"வாதங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும்" என்ற அடித்தளத்தில் இயங்கிய பட்டிமன்றத்தை, "நடுவரின் புத் திசாலித்தனத்தினால் தீர்ப்பு வழங்கப்படும். ஒன்றாக மாற்றினார் அடிகளார். ஆன்மீ கத் தலைவர் அறிவியற் சிந்தனை கொண்ட சாமியார் காவி வேட்டியில் சிவப் புச் சிந்தனையாளர் போன்ற அவருக்கிருந்த விம்பங்கள் அதற்குப் பெரிதும் உதவின. மிக விரிவான சான்றுகளும் தாக்கங்களும், கொண்டு ஓர் அணி விவாதித்த போதிலும், அதனை எதிர்க்கும் அணிக்குச் சார்பாக அடிகளார் தீர்பு வழங்கினாலும், கூட்டம் ஏற்றுக் கொள்ளும். அதற்குக் காரணம் அடிகளாரின் சமூக நீதியும் ஆதரவும். மனித நேயக் கொள்கையும் கேள்விகளுக்கப்பாற்பட்டவையாக இருந்தன. அணிகளின் வாதங்களுக்கு மேலாக தனது மனித நேயச் சிந்தனைகள் மூலம் கட்டியெழுப்பும் அடிகளாரின் வாதங்கள் அவரது தீர்ப்புக்கு அரண் செய்தன.

"இது நியாயமான தீர்ப்பு, தர்மத்தைக் காப்பவர் நீதிபதி. நேர்மைக்குத்துணை நிற்பவர் நடுவர்" போன்ற சொல்லாடல்களை ஐரோப்பிய பாணி நீதிமன்றங்களுக்கோ, நீதிபதிகளுக்கோ பயன்படுத்துவதில்லை. ஆனால் இந்தியாவின் பாரம்பரியப் பஞ்சாயத்துக்களைப் பற்றிப் பேசும் பொழுதும், பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதும் பயன்படுத்துவதுண்டு. இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து முறையில் பஞ்சாயத்துத் தலைவரின் தீர்பே இறுதியானது. தாமம் எதுவோ அதன்படி நடப்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவரது தீர்பை அனைவரும் ஒப்புக் கொள்வர். அடிகளாரின் தீர்புக்களைக் கூட கிராமப் பஞ்சாயத்துக்களில் தரப்படும் தீர்ப்புக்களோடு ஒப்பிட்டுப் பேச வாய்ப்புண்டு.

ஐரோப்பிய பாணி நீதிமன்றங்களையொத்த பட்டிமன்ற வடிவத்திற்கு இந்திய பாணி "பஞ்சாயத்துத் தன்மையை" உண்டாக்கியவர் அடிகளார். இதற்காகப் பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் ஒரு விஷயத்தைக் கொள்ள வேண்டும். கிராமத்துப் பஞ்சாயத்துக்கள் தனிமனித விம்பங்களை - நாயகர்களை - முன்னிறுத்தும் வடிவம். ஒரு அமைப்பில் மற்றவர்களின் வாதங்களை - குரலை - இடத்தைச் சாதாயமாக ஒதுக்கிவிட்டு, தனி மனிதனின் புத்தி சாலித்தனத்திற்கும், தந்திரங்களுக்கும் இடம்தரக்கூடிய ஒரு வடிவம். இன்று தொலைக்காட்சிகளில் இடம்பெறும், "பஞ்சாயத்துக்களையும்" "அரட்டை அரங்கங்களையும்" அதனை நடத்துபவர்களையும் நினைவுக்குக் கொண்டு வந்தால் (விசு. சோ) அதன் தத்துவார்த்த அடித்தளம் புரியும்.

பட்டிமன்றம் என்பதை ஒரு ஊடகவடிவமாகக் கொள்ளும் நிலையில் அனுப்புநர்களாக மேடையில் இருக்கும் அணிப்பேச்சாளர்களும் நடுவரும் இருக்கிறார்கள். கேட்பவர்களான ஒரு பெருங்கூட்டம் - பார்வையாளர்களாக இருக்கிறார்கள். இவர்களிடையே செய்திக்களைப் பரிமாறும் சாதனம் சாதாரண வார்த்தைமொழி. இந்த வார்த்தை மொழி என்னும் ஊடகத்தின் இயல்பை நேரடித் தொடர்பு முறை எனலாம். பொதுவாக எந்தவொரு ஊடகத்திற்கும் மூன்று நோக்கங்கள் உண்டு. தகவல், கல்வி, மகிழ்வூட்டல் என்பன அவை.

இம்மூன்று நோக்கங்களில், வார்த்தை அல்லது பேச்சுச்சாதனம் முதலிரண்டு நோக்கங்களுக்கும் முக்கியத்துவம் தரக் கூடியது. வெறும் பேச்சு மொழியோடு நடிப்பு. இசை போன்ற மற்ற சாதனங்களின் கூறுகளைச் சேர்க்கும் பொழுது மகிழ்வூட்டும் நோக்கம் கூடுதலாகிவிடும். அதாவது பட்டிமன்றம். நிகழ்த்தும் கலைகளின் கூறுகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் மகிழ்வூட்டும் அம்சங்களை அதிகப்படுத்திக் கொண்டு, தகவல் மற்றும் கல்விக் கூறுகளில் அதிகப்படுத்திக் கொண்டு, தகவல் மற்றும் கல்விக் கூறுகளில் குறைவுடையதாக மாறுகிறது. அதனால் பொது மக்களைக் சுவாவதாக மாற்றம் அடைகிறது.

பட்டிமன்றங்களின் பேச்சாளர்களும் நடுவர்களும் தங்கள் உரையில் மகிழ்வூட்டும் அம்சங்களைக் கூடுதலாக்கவே முயல்கின்றனர். நடுவர்களாக இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்புக்கள் அதிகம் என்று சொல்லலாம். ஏனெனில் ஒரு பட்டிமன்ற நடுவர் இயல்பாகவே மூன்று பணிகளைச் செய்கின்றார். விவாதப் பொருளை அறிமுகம் செய்வது முதல் பொருள். பேச்சாளர்களை அறிமுகம் செய்வதும். அவர்களது பேச்சின் சாரம்சத்தைச் சொல்வதும் இரண்டாவது பணி. மூன்றாவது பணி விவாதங்களைச் சீர்தூக்கி முடிவைத் - தீர்பைச் சொல்லுவது. அதற்கும் மேலாக அவர் அமர்ந்திருக்கும் இடம் நடுநாயகம். ஒரு மேடையின் மையப்பகுதிக்கான முக்கியத்துவம். நாயகப் பிம்பத்திற்கானது என்பது அரங்கியலின் அரிச்சுவடி.

இந்தளவில் பட்டிமன்றம் என்ற பொதுப் பொருளைக் குறித்த கருத்துக்கள் நிறுத்தப்பட்டு, சிறப்புப் பொருளான அதன் நடுவர்களுக்கு வரலாம். பட்டிமன்ற நடுவர்களில் நம் காலத்தில் மிகப் பிரபலமான இருவர் சாலமன் பாப்பையாவும், திண்டுக்கல் லியோனியுமாவர். இவ்விருவரும் பட்டிமன்ற நடுவர்களுள் நாயக விம்பங்கள் என்பதை அவ்விருவரையும் மற்ற சாதனங்கள் பயன்படுத்திக் கொள்ள முயல்வதிலிருந்தும். அச்சாதனங்கள் அவர்களைப் பற்றி உருவாக்கும் விம்ப அடுக்குகளிலிருந்தும் உணரலாம்.

(தொடரும்)

நமது மக்களின் குரல்

ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைக் குரலுக்கெதிராக நமது மக்களின் உணர்வுகள்

நாங்கள் ஒரே மொழியை பேசுபவர்களாக இருந்தாலும், எங்களுக்கான ஒருகலாசாரம், பண்பாடு, கொண்ட தனித் தேசியம் என்ற அடிப்படையில் எம்மை நாமே தீர்மானித்துக் கொள்ளும் சுய நிர்ணய உரிமை எமக்கு உண்டு.

என்று சட்டவாக்கக் கழகத்தில் முஸ்லிம்கள் தங்களது நியாயமான உறுப்புரிமைக்காக குரல் கொடுத்த போது சோ பொன். இராமநாதன். முஸ்லிம்களை என்ன கோணத்தில் நின்று முஸ்லிம்களின் நியாயமான உரிமையைத் தடுக்க முனைந்தாரோ. அதே கருத்தையே விடுதலைப் புலிகளினதும் தமிழர் கூட்டமைப்பினரினதும் அண்மைய கூட்டறிக்கைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

எமது உரிமையையும். எமது சுயத்தையும் தீர்மானிப்பதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது.

நாங்கள் ஒரே மொழியை பேசுபவர்களாக இருந்தாலும். எங்களுக்கான ஒரு கலாசாரம். பண்பாடு. கொண்ட தனித் தேசியம் என்ற அடிப்படையில் எம்மை நாமே தீர்மானித்துக் கொள்ளும் சுய நிர்ணய உரிமை எமக்கு உண்டு.

எமது தலை எழுத்தை யாரும் எழுத வேண்டியது இல்லை. நம் சமூகத்தின் குரலை திசை திருப்புவதற்கு தமிழ் பேரினவாதம் தந்திரமாக கையாளும் ஒரு செயற்றிட்டத்தின் முன்னெடுப்பே அவர்களின் அண்மைய அறிக்கை என்பது தெளிவு.

-எம்.ஐ.ஜஹாப்தீன் (மனிதம்)
பிறைந்துரைச்சேனை.

இன்று புலிகள் சொல்வதுவோ அன்று சேர் பொன் இராமநாதன், சட்டசபையில் சொன்னதுதான், முஸ்லிம்களுக்கு என்று ஓர் பிரதிநிதி தேவையில்லை என்று நிரூபிக்கப் பார்த்தார் அன்று. அந்த நேரம் அறிஞர் சித்திலெப்பை அதை முற்று முழுதாக எதிர்த்தார். அன்று இராமநாதன் சொன்னதைத்தான் இன்று புலிகள் சொல்கிறார்கள். செய்யத் துணிகின்றார்கள்.

புலிகளும் கூட்டமைப்பும் எடுத்த முடிவில். முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளக்கூடாது. அவர்களுக்கு ஓர் தனி அலகு தேவையில்லை தமிழ் தேசியத்துக்குள் அவர்கள் இருந்தால் போதும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை எப்படி முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வது. முஸ்லிம்கள் ஓர் தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறதோ, அதே பிரச்சினை முஸ்லிம் மக்களுக்கு முள்ளது என்பதை மீண்டுமொரு தடவை ஞாபகமூட்ட விரும்புகின்றேன். இன்று புலிகள் சொல்வதுவோ அன்று சேர் பொன் இராமநாதன், சட்டசபையில் சொன்னது தான். முஸ்லிம்களுக்கு என்று ஓர் பிரதிநிதி தேவையில்லை என்று நிரூபிக்கப் பார்த்தார் அன்று. அந்த நேரம் அறிஞர் சித்திலெப்பை அதை முற்று முழுதாக எதிர்த்தார். அன்று இராமநாதன் சொன்னதைத்தான் இன்று புலிகள் சொல்கிறார்கள். செய்யத் துணிகின்றார்கள்.

ஆகவே. எனது கருத்து முஸ்லிம்கள் இனிவரும் பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்களின் பிரச்சினை ஆராயப்பட்டு. முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் தீர்பை பெற்றுத்தர இரு பகுதியினரும் முயற்சி எடுக்க வேண்டும். முஸ்லிம்களை எடுப்பார் கைப்பிள்ளை போல் யாரும் நினைத்து விடக்கூடாது. முஸ்லிம்கள் கிள்ளுக்கீரை அல்ல என்பதை சகல இனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எனது அவாவாகும்.

ஏ.ஏ. முஹம்மட் ஹாபீஸ்
கல்மதில் வீதி, காத்தான்குடி - 03.

தமிழ்ப் பேரினவாதம், முனைப்பெடுத்து வரும் முஸ்லிம் மக்களது உரிமைக் குரலை உருத்தெரியாமற் செய்ய மேற்கொள்ளப்படும் சதியேயன்றி இது வேறென்ன? தமிழ்த் தலைமைகளின் வாக்குறுதிகளுக்கும், உத்தரவாதங்களுக்கு முள்ள பெறுமதி என்ன என்பதை வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் நன்கறிவார்.

தமிழா போராட்டம் இடம்பெற்ற கடந்த காலங்களில் போராட்டக் குழுக்கள் முஸ்லிம்களையும், விசுவாசத்துடன் இணைத்துக் கொண்டோ அல்லது முஸ்லிம்களுக்காகவும் போராடிய காகவோ எங்களால் நம்ப முடியாத லையே இங்கு வரலாறாக எஞ்சியிருக றது.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புலிகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், "போராட்டம் முஸ்லிம்களுக் குமுரியதுதான்; முஸ்லிம்களுக்குரிய உரிமைகளுக்கு நாங்கள் உத்தரவாதம் வழங்குகிறோம்: முஸ்லிம்களுக்கு தனியான அலகு அவசியமற்றது" என்ற கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள்.

தமிழ் பேரினவாதம் முனைப்பெடுத்து வரும் முஸ்லிம் மக்களது உரிமைக் குரலை உருத்தெரியாமற் செய்ய மேற்கொள்ளப்படும் சதியேயன்றி இது வேறென்ன? தமிழ்த் தலைமைகளின் வாக்குறுதிகளுக்கும். உத்தரவாதங்களுக்கு முள்ள பெறுமதி என்ன என்பதை வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் நன்கறிவார்.

இதுவரை தமிழ்த் தேசியத் தலைமையும், முஸ்லிம் தேசியத் தலைமையும் சோந்து வழங்கிய உறுதிமெழிகளுக்கு என்ன நோந்தது என்பதை இந்த அமைதிச் சூழலிலேயே கண்டு கொண்டோம். ஒவ்வொரு தேசிய இனமும் தனது தலைவிதியை, தனக்கான தீர்வு என்ன என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்வதும் அதற்கு ஏனைய இனங்கள் ஒத்துழைப்பதுமே "சமஷ்டி" என்ற தீர்வை அர்த்தமுள்ளதாக்கும்.

- ஆசிரியர் ஏ.ஜீ.எம்.ஸதக்கா.
வாழைச்சேனை

(உணர்வுகள் தொட(ரும்)

உள்ளூராட்சித் தேர்தல் - முஸ்லிம் காங்கிரசை நம்ப முடியாது

என்று முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து அதனை ஆதரித்து அதற்காகவே வாழ்ந்து வருபவர்கள் வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம்கள். 2000, 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தோதல்களின்போது அளிக்கப்பட்ட பெருவாரியான வாக்குகளே அதற்குச் சான்று. அஷ்ரஃப்பின் மரணத்தைத் தொடர்ந்து கட்சி பிளவுபட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முரண்பட்ட போது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் தங்கியிருந்த பலா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில்

காவத்தமுனை ஷஹீத் இஸ்மாயில்

இருக்கவில்லை எனும் ஒரேகாரணத்திற்காய் மக்களிடம் தோற்றுப் போனார்கள். 12 வது பாராளுமன்றத் தோதலில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களது அமோக ஆதரவைப் பெற்றது. இது எதைச் சுட்டிக் காட்டுகின்றதென்றால் முஸ்லிம் காங்கிரஸை நாம் எப்போதுமே ஆதரிப்போம் என்பதையே. ஆனாலும், முஸ்லிம்கள் அளித்த இந்த ஆதரவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் ஏனைய உறுப்பினர்களும் தவறாகப் பிரயோகித்து முஸ்லிம்களுக்கான நியாய உரிமைகளைப் பெறுவதில் வெறும் வாய்ச்சவாடல், அறிக்கை என்பதோடு சுருக்கிக் கொண்டனர். அத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தையில் கூட தன்னிலை மிகவும் மோசமாக முஸ்லிம்களுக்கு எவ்வித்திலும் பிரயோசனப்படாத வேண்டாத பங்களிப்பினையே நல்கியுள்ளது. மொத்த முஸ்லிம்களும் இதன் மூலம் ஏமாற்றப்பட்டு விட்டனர். முஸ்லிம் காங்கிரஸின் அத்தனை நடவடிக்கைகளும் முஸ்லிம்களால் அச்சத்தோடு நோக்கும் நிலை உருவாகி விட்டது. நமது மக்கள் விழித்து விட்டார்கள். இன்னுமொரு முறை ஏமாறத் தயாராகவில்லை. மீண்டும் முஸ்லிம் காங்கிரஸை நாம் ஆதரிப்பதானால் பிளவுபட்டு நிற்கும் அனைத்து எம்.பிகளும் ஒன்றுபட்டு மக்களுக்கு சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்: அதிகார வெறிதுறந்து தமது நலனை விட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொள்ள வேண்டும். பிரிந்து சென்ற நூஆ உறுப்பினர்களும் சேர்ந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாது தோதல் காவத்தில் வெறும் பித்தலாட்டம் போட முனைந்தால் நடப்பது வேறு. இறுதியாக இதுவிடயத்தில் நம்பிக்கைக்குரிய விதத்தில் பணிகளை மேற்கொண்டு வரும் முஸ்லிம் குரல் கவனஞ் செலுத்த வேண்டும். அத்துடன் தென்கிழக்கு வளாக மாணவர் சமூகம் முஸ்லிம் அரசியல் தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்படல் வேண்டும். எமது மக்களின் அரசியல் விடிவுக்கான நறுகீற்று லேசாக அங்கு தென்படுவதாய்த் தோன்றுகிறது.

திருமலை கண்காணிப்புக் குழு பிரதிநிதி
எக்கவுண்டன்ட் அக்பர் நானாவுக்கு....!

அஸ்ஸலாமு அலைக்கும்!
அக்பர் நானா,

நீங்கள் அன்று "மக்கள் பிரச்சினைக்காக" ஊர்வந்தபோது, மக்களே உங்கள் கொலரைப் பிடித்தெல்லாம் அடிக்கப் போனார்கள் என்று அறிந்தேன். உண்மையில் எனக்கு வேதனைதான். என்றாலும் மக்கள் உணர்வுகள் மதிப்பளிக்கப் படுவதில் உங்களைப் போன்றோர் கரிசனையாய் இருக்க வேண்டும்.

எனக்குத் தெரியும். இந்தப் பதவியை நீங்கள் தேடிப்போகவில்லை என்று. உங்களை யாரோ சங்கடத்தில் மாட்டிவிட்டிருக்கிறார்கள். நீங்கள் தானுண்டு தன் பாடுண்டு என்று இருப்பவர். உங்களை யாரோ "மாட்டி விட்டிருக்கிறார்கள்" போலும்!

மூதூர் கொதிக்கிற ஊர்! மக்களும் வேகமானவர்கள்! அவர்களுக்கு உடனடித் தீர்வுகள்தான் தேவை. நின்று நிதானித்து அணுகத் தயாரில்லை. பார்த்திருப்பீர்கள் தானே. பொலிஸ்மா அதிபர். கண்காணிப்புக்குழுத் தலைவர், இராணுவ ஜெனரல், ஏனைய அரசியல்வாதிகளெனப் பார்க்காமல் புனிதமான பள்ளிவாலுக்குள் வைத்தே அரசியல்வாதிகளை நையப்புடைத்திருக்கிறார்கள். தலைவர்களை தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அந்தளவுக்கு "வேகம்". அதுமட்டுமா, சந்தர்ப்ப அரசியல் ஆட வந்திருப்பவர்களையும் இனங்கண்டு விட்டிருக்கிறார்கள். இங்கு வந்து பாருங்கள் சுவர்களை. "எங்களில் இருவர் உயிருக்குப் போராட நீங்கள் சோற்றுக்கா போராடுகிறீர்கள்?" என்று சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள்!! என்ன சொல்ல வருகிறேன் என்றால், மூதூர் மக்கள் உடனடிப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வேண்டுகிறார்கள். இங்கு இப்போது தாமதிக்கிற ஒவ்வொரு கணமும் மக்களை கொதிப்பேற்றிக் கொண்டிருக்கிறது.

சமாதான ஒப்பந்தத்தின் பின் மூதூரிலும் பிற ஊர்களிலும் நடக்கிற முஸ்லிம்களுக்கெதிரான அத்துமீறல்களை அறிந்திருப்பீர்கள். பொதுவாக எல்லாவற்றிற்குமாக

கண்காணிப்புக் குழுக்களை அமைத்து இன, பிரதேச ரீதியான உள்ளூர்ப் பிரதிநிதிகளையும் நியமித்தார்கள். உங்களோடு மூதூரிலிருந்து இன்னொரு இளம் சட்டத்தரணியின் பெயரையும் பிரேரிக்க. வயது முதிர்ச்சி பார்த்து உங்களை நியமித்தார்கள். நீங்களும் ஏற்றிருப்பீர்கள். சமாதான காலம் தானே.... பிரச்சினைகள் வராது சும்மாயிருந்து கிடைக்கிற முப்பதாயிரத்தையும் எடுத்துக் கொண்டிருக்கலாம் என்று நினைத்திருப்பீர்கள். ஆனால் பாருங்கள். உங்கள் எதிர்பார்ப்பில் மண்ணையல்லவா அள்ளிப் போட்டுவிட்டார்கள்!

புலிகள் முஸ்லிம்களுடன் "நொட்டாமல்" இருக்கிறார்களில் லையே பாருங்கள். மூதூரில் எத்தனை சம்பவங்களென்று! இவற்றின் போதெல்லாம் இப்போது கண்காணிப்புக் குழுவைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்குத் தான் இப்போது அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அரசின் நேரடி அங்கீகாரத்துடனான பிரதிநிதித்துவமும் எஸ்.எல்.எம்.எம். உள்ளூர்ப் பிரதிநிதிகளுக்கே கிட்டுகிறது. இப்படியான எதிர்பார்ப்பில் மண் அள்ளிப்போடப்படும் போது சும்மாயிருப்பார்களா மக்கள். எஸ்.எல்.எம்.எம். மூதூரில் பேருக்கு ஒரு அலுவலகம் வைத்திருக்கிறது. பேருக்கு நீங்களும் இருக்கிறீர்கள். இப்படி எல்லாம் பேருக்கு இருந்தால் என்ன லாபம்? அதுதான் உங்கள் மீது கொதிப்பு!

உங்களுக்கு நான் இரண்டு வகையான எதிரும் புதிருமான ஆலோசனைகளைச் சொல்கிறேன். கண்காணிப்புக்குழுவில் இருந்த இருக்கின்ற இரண்டு நபர்களைச் சொல்கிறேன் 1. பொறியியலாளர் அப்துல் ரஹ்மான் (காத்தான்குடி) 2. சட்டத்தரணி கா. சிவபாலன். முதலாமவர். எஸ்.எல்.எம்.எம். இயங்கா நிலையை. பக்கச் சார்பைச் சாடி. துணிச்சலாக விமர்சித்து இராஜினாமாச் செய்தவர். இரண்டாமவர். திருமலையில் தமிழர் தரப்பில் அல்லது தமிழர் தரப்புக்கு எது நடந்தாலும் முன்னின்று வாதாடி வெற்றி காண்பவர். நீங்களும் இவர்களில் யாராவது ஒருவராக இருக்க வேண்டும். எதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளது என்று நீங்களே பாருங்கள். அல்லது ஊர் "மஹ்ரா" வைக் கேட்டுச் செயற்படுங்கள். நீங்கள் ஏதாவது முடிவெடுத்தாக வேண்டும். இல்லையேல் நஷ்டம். கஷ்டம் உங்களுக்கில்லை. ஏற்கனவே நாம் பல உயிர்களைப் பறிகொடுத்து இன்றும் பல உயிர்களை இழப்பதற்காய் காத்துக் கொண்டிருக்கிறோம்.

-மஹல்லா வாசி, மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பிரச்சினைக்கான தீர்வு!

முஸ்லிம்களை ஆக்கிரமிப்பாளர்களாகக் காட்ட முயற்சி!

பெப்ரவரி 07, 08, 2003 Berlin இல் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் நல்லுறவைப் பாதிக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட 27 மார்ச், 2003 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையே கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

கண்காணிப்புக்குழு தலைவர் Mr. Troels Jakobson அவர்களின் தலைமையில் மட்டக்களப்பிலுள்ள மாவட்டக் காரியாலயத்தில் இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் சதாசிவம், ஏ. உவைஸ் அவர்களின் உதவியுடன் நடைபெற்றது.

முஸ்லிம் சமூகம் சிறீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸ் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமாகிய ஜனாப் பஷீர் சேகுதாவூத், ஜனாப் U.L.M.N. முபீன், M.M.Y. ஆதம்லெவ்வை, ஜனாப் M.T.M. பரீத், ஜனாப் M.L.M. ஹுஸைன், ஜனாப் S.H.அபூ ஹனீபா ஆகியோர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்பட. மட்டு - அம்பாறை விசேட தளபதி திரு. T.ரமேஸ், மட்டு - அம்பாறை அரசியல் பிரிவின் தலைவர் திரு. கௌசல்யன், திரு. சுபி, திரு. நிசாம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராஜசிங்கம், திரு. ராஜன் சத்தியமூர்த்தி போன்றோர் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவம் செய்தனர். முஸ்லிம் தரப்பு பிரதியமைச்சர் ஜனாப் பஷீர் சேகுதாவூத் அவர்களாலும், தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பு மட்டு - அம்பாறை விஷேட தளபதி திரு. T. ரமேஸ் அவர்களாலும் தலைமைதாங்கப்பட்டது. அவ்வமையம் மட்டு. அரசாங்க அதிபர் திரு. மோனகுருசாமியும் மட்டு. நகர் கண்காணிப்புக் குழுவினரும் பிரசன்னமாகியிருந்தனர்.

புணானையும் அதன் புறநகர அத்துமீறலும்

01. யுத்தப் போர்வையின் கீழ் முஸ்லிம் தலைமையின் ஆதரவுடன் மூதாதைய தமிழ்க் கிராமங்களான புணானையும் அதன் புற நகரமும் முஸ்லிம் சமூகத்தினரால் பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்டன.

02. 1950க்கு முன்பிருந்தே அங்கு வாழ்ந்த தமிழர்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்காக மந்தைகளையும் நெற்காணிகளையும் கொண்டிருந்தனர்.

03. மட்டு நகர் கச்சேரி L.D.C. உத்தரவுப் பத்திரங்களை வழங்கியும் அவர்களது பெயர்களை P.L.R இலும் பதிவு செய்துள்ளது.

04. "புணானை - மயிலாந்தைக் கண்டம் என்ற பெயரின் கீழ் வாகரை, வாழைச்சேனை விவசாய சேவைகள் நிலையங்களால் P.L.R. பராமரிக்கப்பட்டு வந்தன.

05. புணானையிலும் அதன் புற நகரிலும் இந்து கிறிஸ்தவ மத ஆலயங்கள் 1960க்கு முன்பிருந்தே இருந்துவந்திருக்கின்றன.

பிள்ளையார் கோயில்
முருகன் கோயில்
மாரியம்மன் கோயில்
கத்தோலிக்க மத ஆலயம்

1990 வரை இவ்வணக்கத்தலங்களுக்குரிய அனைத்துத் திருநாள்களும் எதுவித இடையூறுமின்றி ஆண்டுதோறும் நடைபெற்று வந்தன. 1990இல் நிகழ்ந்த யுத்தக் கொடூரம் காரணமாய் இப் பிரதேச தமிழர்கள் அகதிகளாகி வாழைச்சேனை முகாமிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் குடிகொண்டனர். இதன் விளைவாய் மேற்கூறிய வணக்கத்தலங்கள் கைவிடப்பட நிலையிலுள்ளன.

06. 'ஜிஹாத்' எனப் பெயர் பூண்ட முஸ்லிம் அமைதிகாப்புக் குழுவினர் இக் கிராமத்திலிருந்து பெருமளவு தமிழர்கள் வெளியேறியமைக்குக் காரணமாயிருந்தனர்.

07. இந் நிலைமையை சாதகமாக்கி காத்தான்குடி, வாழைச்சேனை, ஏறாவூர் போன்ற இன்னும் பல பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்கள் தமிழர் நிலங்களை தமது உடமையாக்கியும் அச் செழிப்பான நிலங்களைப் பாவனைக்குட்படுத்தியும் வருகின்றனர்.

08. தமிழருக்கேயுரித்தான முதாதையர் நிலங்கள் மீண்டும் உரியவர்களுக்கே கையளிக்கப் படல் வேண்டும்.

2002 இல் ஆக்கப்பட்ட கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகம் சட்டத்திற்கு முரணான ஒரு செயற்பாடு

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 5 கிராம சேவையாளர்கள் பிரிவுகளை வேறாக்கி கோறளைப்பற்று மத்தி என்ற பெயரோடு 2002ல் பிரதேச செயலகப் பிரிவொன்று வார்த்தெடுக்கப்பட்டது. இக் கிராமசேவையாளர்கள் பிரிவிலுள்ள பாரம்பரிய நிலங்கள் அனைத்துமே தமிழர்களுக்கு உரித்தானது என்பதனால் இது ஒரு சட்டபூர்வமற்ற செயற்பாடாகும். இப்படியொரு செயலாளர்பிரிவு வார்த்தெடுக்கப்படவேண்டிய இன்றியமையாமை அங்கிருக்கவில்லை. அப்படியொரு பிரிவு வார்த்தெடுக்கப்பட வேண்டியிருப்பின் அவர்கள் ஆணைக்குழு ஒன்றினை நடாத்தி மக்கள் கருத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செயற்படவில்லை. புதிதாக ஒரு பிரதேச செயலகம் வார்த்தெடுக்கப்படுமளவுக்கு சனத்தொகையோ, நிலப்பரப்போ ஈண்டு விஸ்தீரணமாய் அமையவில்லை. கோறளைப்பற்று வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்குரிய பாரம்பரிய நிலங்களில் வேறு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முஸ்லிம்களை குடியேற்றியமை இரகசியமாகவே நடைபெற்றது.

இது சட்டபூர்வமற்ற குடியேற்றமாகும் என்பதனால் புதிதாக அமைக்கப்பட்ட கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவு சட்டப்படி செல்லுபடியாகாதென பிரகடனப்படுத்தப்படுவதோடு கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குக் கிராம சேவையாளர் பிரிவுகள் மீளவும் கையளிக்கப்படவேண்டும்.

வாழைச்சேனையும் பேத்தாலையும்

01. 2002இல் வாழைச்சேனையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது தமிழர்களுக்குச் சொந்தமான 199 கடைகள் முஸ்லிம்களால் எரிக்கப்பட்டன.

02. 1990லிருந்து எல்லைப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் முஸ்லிம்களால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வந்ததனால் தங்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேறும் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டனர்.

பிறைந்துறைச்சேனை

பிறைந்துறைச்சேனை என்பது வாழைச்சேனையின் ஒரு பகுதியான ஒரு தமிழ்க் கிராமமாகும். அது முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டு ஓட்டமாவடியின் ஒரு பிரதேசமாக்கப்பட்டது.

காவத்தமுனை

வாழைச்சேனையிலுள்ள ஒரு தமிழ்க் கிராமம் காவத்தமுனையாகும். அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் துரத்தியடிக்கப்பட்டு ஓட்டமாவடி முஸ்லிம்கள் முழு நிலப்பரப்பையும் கைப்பற்றி அதனை ஓட்டமாவடியின் ஒரு பகுதியாக்கினர். காவத்தமுனை தமிழ் மக்கள் என்று யாரும் இங்கு கிடையாது.

ஏறாவூர்

01. 1985 இல் இருந்து 2002 வரைக்கும் குறிச்சி 5,6, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தரவை போன்ற இடங்களில் வாழ்ந்த தமிழர்கள் முஸ்லிம்களால் கொல்லப்படும் துரத்தியடிக்கவும்பட்டனர்.

தாக்குதல்கள், பயமுறுத்தல்கள், கற்பழிப்புகள் அங்கே இடம்பெற்றன. தமிழர்களுக்குரிய வீடுகளும், உடமைகளும் அழிக்கப்பட்டதோடு தீக்கும் இரையாக்கப்பட்டன.

பூநொச்சிமுனையும் - மஞ்சந்தொடுவாயும்

01. 1985 இலிருந்து இன்றுரை காலத்திற்குக் காலம் காத்தான்குடி எல்லையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் முஸ்லிம்களால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் அவர்கள் நிலத்திலிருந்து பலாத்காரமாகத் துரத்தப்பட்டுமுள்ளனர்.

02. தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் மீதான அத்துமீறல்களை முதன்மை முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்னெடுத்துச்சென்றனர். அவ்வப்போது அச்சுறுத்தல்களையும் அவர்கள் மேற்கொண்டனர்.

03. தமிழர்களிடமிருந்த சில நிலங்கள் வற்புறுத்தல்கள் மூலம் வாங்கப்பட்டுள்ளன.

ஆரையம்பதி

01. முஸ்லிம் அரசியல்வாதிகளும் காத்தான்குடி முதன்மைப் பிரஜைகள் சிலரும் ஆரையம்பதி கிராமத்தின் வடக்கு எல்லையில் அத்துமீறிக் குடியேறி (80741 இலக்க வர்த்தமானி அறிவித்தல் 1934இல் வெளியிடப்பட்டது.) கிணறு ஒன்றைக் கட்டியும் தமிழருக்குரிய 55 ஏக்கர் நிலத்திலும் இடங்கொண்டனர்.

02. 1985 இல் முஸ்லிம் தலைவர்களாலும் அரசியல்வாதிகளாலும் 'கர்பலா கிராமம்' என்ற பெயரில் வீட்டுத் திட்டம் ஒன்று ஆரையம்பதி இரண்டாம் குறிச்சியில் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் அத்துமீறல் காரணமாய் எழுந்த இனக்கலவரத்தின்போது பல தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

கோயில் குளம்

கோவில் குளம் பழம்பெரும் தமிழ்க் கிராமமாகும். 'சிகரம்' என்று அழைக்கப்படும் இந்துக் கோயில் ஒன்று இடிபாடுகளுக்கு உட்பட்டு இன்னும் அடையாளம் தெரிகின்ற கோயிற்குள் பாடசாலைக்கு அருகில் அமைந்திருந்தது. அப் பிரதேச மக்களால் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஸ்பதிகலிங்கம், எண்ணெய் விளக்கு மணி போன்ற அழிவுச் சின்னங்கள் அங்கு காணப்படுகின்றன.

தமிழர்களால் பராமரிக்கப்பட்டுவரும் இடுகாடு ஒன்று அங்குள்ளது. அனைத்துப் பிணங்களும் கொண்டுசெல்லப்படும் இவ் இடுகாடு முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு ஒரு வழக்கும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. புதைவெளியில் போடப்பட்ட வேலியொன்று ஒரு சாராரினால் அகற்றப்பட்டதனால் இனக் கலவரமொன்றிற்கான அறிகுறியும் தென்படுகின்றது.

02. ஒல்லிக்குளம்

தமிழ் மக்களோடு 35 முஸ்லிம் குடும்பங்கள் மட்டும் கொண்ட ஒரு கிராமமே ஒல்லிக்குளமாகும். தற்போது 150 முஸ்லிம் குடும்பங்களை காத்தான்குடி 1ஆம், 2ஆம் குறிச்சியிலிருந்து அங்கு குடியேற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

03. 'கர்பலா'

'கர்பலா' என்ற பெயரில் ஏதும் கிராமமிருக்கவில்லை. அது ஆரையம்பதியின் ஒரு பகுதியாகவே இருந்தது. 'கர்பலா'வின் ஒரு பகுதி ஆரையம்பதியிலுள்ள கதிர்காமத் தம்பி எனபவருக்கு உரித்தானதாயிருந்தது. மாற்று நிலங்கள் வழங்கப்படும் என்ற ஒப்பந்தத்தின் பெயரில் இந் நிலம் கையேற்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தப் பிரகாரம் ஏதும் இடம் பெறவில்லை. எஞ்சிய நிலம் ஆரையம்பதி தமிழர்களின் அரச காணிகளாகும். திட்டமிடப்பட்ட வகையில் அது முஸ்லிம் கிராமாக ஆக்கப்பட்டது.

04. ஏத்துக் கல்

ஏத்துக் கல் எனப்படுவது கடற்கரையோரமாய் ஆரையம்பதியின் கிழக்கே அமைந்த ஒரு புராதன கிராமமாகும். தற்போது இந்தக் கிராமம் பூரணமாக அழிக்கப்பட்டு பாலமுனை வடக்கின் ஒரு பகுதியாக ஒரு முஸ்லிம் கிராமமாக மாற்றப்பட்டுள்ளது.

05. பாலமுனை

பாலமுனை என்ற பெயரில் எந்த ஒரு கிராமமும் கிடையாது. தனித் தமிழ்க் கிராமமான 'நடுவோடை' என்று அழைக்கப்படுகின்ற ஆரையம்பதி கிராமத்தின் ஒரு பகுதியாக அது அமைந்திருந்தது. ஆரையம்பதி (நடுவோடை)யில் பெருமளவு அரச காணிகள் இருந்தன. காத்தான்குடி 1ஆம், 2ஆம் குறிச்சி முஸ்லிம்களுக்கு இக் காணிகள் பிரித்து வேறாக்கப்பட்டு பாலமுனை முஸ்லிம் கிராமம் எனப் பெயர் கொண்டது. ஆரையம்பதியின் கடற்கரையோர முழுப் பிரதேசமும் காத்தான்குடி முஸ்லிம் மக்களால் குடியேற்றமாகி பாலமுனை வடக்கு முஸ்லிம் கிராமமாக ஆக்கப் பட்டது.

'நடுவோடை'யில் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையொன்று அமைந்திருந்தது. அது இப்போது முஸ்லிம் பாட சாலையாக மாற் றப்பட்டுள்ளது. கொலரா நோ யாளிகளுக்கான வைத்தியசாலை ஒன்றும் அங்கு அமைந்திருந்தது. இவைகள் அழிக்கப்பட்டு முற்று முழுதான தமிழ்க் கிராமமாயிருந்த நடுவோடை முஸ்லிம் கிராமமாக ஆக்கப்பட்டுள்ளது.

நிலவளவை படத்தின் பிரகாரம் ஆரையம்பதி கிராம சபையின் தெற்கெல்லை கோயில் குளமாகும். பாலமுனை என்ற ஒரு கிராமமே கிடையாது. வடக்கு எல்லையாக உள்ள 'உடல் நல சபை' (Sanitary Board) காத்தான்குடி கடற்கரை வீதியாகும்.

06. காங்கேயன் ஓடை

காங்கேயன் ஓடை ஒரு தமிழ்க் கிராமமாகும். இன்னும் தமிழர்கள் அங்கு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். காங்கேயனோடைக்கு அருகிலுள்ள அனைத்து அரச காணிகளும் காத்தான்குடி மக்களுக்கு வழங்கப்பட்டு அது முஸ்லிம் கிராமமாக ஆக்கப்பட்டுள்ளது. இன்று தமிழர்கள் குறைந்த அளவிலேயே வாழ்ந்துவருகின்றனர். வறிய தமிழ் மக்களுக்குரிய நிலங்கள்கூட பணக்கார முஸ்லிம்களால் பெருவிலைக்கு வாங்கப்பட்டு நச்சரிப்புக்குள்ளாக்கப்பட்டும் அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

07. பூநொச்சி முனை

கல்லடி வேலர், மஞ்சந்தொடுவாயிலுள்ள ஒரு கிராமமே பூநொச்சி முனையாகும். இங்குள்ள அனைத்து அரச காணிகளும் காத்தான்குடி மக்களுக்கு உடமையாக்கப்பட்டு அது முஸ்லிம் கிராமமாக ஆக்கப்பட்டது. முஸ்லிம் தனவந்தர்களால் பெருமளவு பணம் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்ட இந் நிலங்கள் இன்று அரிசி ஆலைகளையும் தென்னந்தோப்புகளை யும் காண்கின்றன. முழு கரையோரப் பிர தேசங்களும் முஸ்லிம்களால் சுவீகரிக்கப்பட்டு அது முஸ்லிம் கொலனியாக உருப்பெற்றது.

08. மஞ்சந்தொடுவாய்

மஞ்சந்தொடுவாயின் எல்லைப் பிரதேசம் காத்தான்குடி தனவந்த முஸ்லிம்களால் வாங்கப்பட்டு மஞ்சந்தொடுவாயின் ஒரு பகுதி காத்தான்குடியாக மாறியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களால் அத்துமீறி எடுக்கப்பட்ட தமிழர்கள் காணிகள்

துரித மகாவலித் திட்டம் 'B' பிரிவில் கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் குடியேற்றம்.

1. கோறளைப்பற்று வடக்கு செயலாளர் பிரிவில் மகாவலித்திட்ட 'B' பிரிவில் 50வீத காணிகள் அமையப்பெற்றுள்ளன.

2. கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மகாவலித்திட்ட 'B' பிரிவில் 90வீத காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

01. 'B' பிரிவில் குடியேற்றப்பட்ட 255 குடும்பங்கள் அனைத்துமே முஸ்லிம்களாக உள்ளமை ஆச்சரியப்படத்தக்கதே.

02. உண்மையில் கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து மகாவலி 'B' பிரிவில் உள்வாங்கப்பட்ட அனைத்து நிலங்களும் அப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளாகவேயுள்ளன.

03. அத்துடன பிரிவு 'B'யில் தமிழ் மக்களைக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் அரசியல் காரணங்களால் அது செயலுருப்பெறவில்லை. மட்டு. நகர் அரசாங்க அதிபர் காணிக் கச்சேரி நடாத்தி குடும்பங்களைத் தெரிவுசெய்து பட்டியலை மகாவலி காணி முகாமையாளருக்கு அனுப்பிவைத்திருப்பினும் ஆளும் கட்சியில் அங்கத்தவராயுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அழுத்தம் காரணமாக இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது கவனிப்பாற்ற நிலைக்குள்ளாகியிருக்கிறது. இதனால், கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர்கள் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கும் பாரம்பரிய நில உரிமையாளர்களுக்கும் குடியேறுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. இது இம் மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்.

04. ஏறாவூர், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்த முஸ்லிம்கள் பிரிவு 'B'யில் இரகசியமாகக் குடியேறி நெதிதென்ன, ஜெயந்தியா, றிஸ்விபுர போன்ற கிராமங்களின் வாசிகளாயினர்.

ஓட்டமாவடி

ஓட்டமாவடிச் சந்தையிலுள்ள தமிழர்களின் பழங்கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு வற்புறுத்தலின் பெயரில் காணிகள் முஸ்லிம்களால் வாங்கப்பட்டன. இப் பிரதேசத்திலுள்ள பழமைவாய்ந்த இந்துக் கோயில் ஒன்று முஸ்லிம்களால் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் இறைச்சிக் கடையொன்று தற்போது உள்ளமை வருத்தத்துடன் அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

அதிர்ச்சி

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இவ்வறிக்கை மட்டக்களப்பு மாவட்ட நிலப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் போது புலிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட அறிக்கையாகும். பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட முஸ்லிம் தரப்புக்கு இவ் ஆவணம் கையளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இதுபற்றி பேச்சுவார்த்தை மேசையிலும், மக்களிடமும் மூச்சு விடவே இல்லை! பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிய பசீர் சேகுதாவூத் இவ்அறிக்கை பற்றி என்ன சொல்கிறார்? பதில் சொல்வாரா?

முஸ்லிம் குரலிடம் ஆதாரத்துடன் இவ்வாவணம் உள்ளது.

கொள்ளையடித்தவர்களையாவது இனம் காணலாமல்லவா?

மூதூரில் இரு முஸ்லிம்கள் கடத்தப்பட்டதும் அதனை தொடரில் ஏற்பட்ட கலவரத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும், சமாதான முன்னேற்றத்துக்கு கிடைத்த பாரிய அடியாகும்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் நிகழ்ந்த கலவரம் காரணமாக முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டதோடு அவர்களின் உடமைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா ஈராக்கின் பெற்றோலை கொள்ளையடிக்க யுத்தத்தை மேற்கொண்டது போல முஸ்லிம்களின் உடமைகளை கொள்ளையடிப்பதற்காக இத்தகைய கடத்தல்கள் ஏற்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. கடத்தல்காரர்கள் யார் என்பது தெரியாது விடினும் கொள்ளையடித்தவர்கள் யார் என்பது தெரியாது எனக் கூறுவதை ஏற்கவே முடியாது.

ஆகவே, எதிர்காலத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமாயின் சமபல பாதுகாப்பு இரு சமூகத்துக்குள்ளும் ஏற்படுத்துவதே சிறந்ததாகும்.

முபாரக் மௌலவி
கல்முனை

கற்பிட்டியில் உள்ள தீவுகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம்

கற்பிட்டி கலப்பு பகுதியில் உள்ள பல தீவுகள் அரிக்கப்பட்டு அழிவுக்குள்ளாகி வருவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். இதனால் கடந்த 20 வருட காலத்துக்குள் ஏறத்தாழ 10 தீவுகள் முழுமையாக அழிந்து விட்டது. இலங்கையின் கலப்பு பகுதிக்குள் அதிக தீவுகள் இருப்பது கற்பிடியிலேயே உள்ளது.

இந்நிலைமை ஏனைய தீவுகளுக்கும் ஏற்படும் அபாய நிலைமை தோன்றியுள்ளது. தற்பொழுது கற்பிட்டியிலுள்ள தீவுகளின் எண்ணிக்கை 25 - 30 ஆகும். புத்தளம் நகருக்கு மிக அண்மையில் அமைந்திருந்த தீவுகளில் ஒன்றென குறிப்பிடப்படும் "அஞ்சி தீவு" என்ற பெயருடைய தீவு முழுமையாக அழிக்கப்பட்டு விட்டது. இதற்கு சொந்தமாக 5 தீவுகள் காணப்பட்டது எனவும் கூறப்படுகிறது. புல்லுபிடிய, நெடுந்தீவு, திக தீவு, கொக்கு தீவு, மாட்டு தீவு, ஆமக்களம் போன்ற தீவுகள் கொஞ்சம் கொஞ்சமாக அரிப்புக்குள்ளாகி வருகிறது.

(புத்தளம் செய்தியாளர்)

எனக்கொரு துப்பாக்கி கொடு

கொடு எனக்கொரு துப்பாக்கி கொடு
இப்போதே. எனக்கொரு துப்பாக்கி கொடு.
துப்பாக்கி உனக்கெதற்கு? யாரைச் சுடுவதற்கு
எதைச் சுடுவதற்கு.
எங்கள் எதிரிகளை சுட்டுப் பொசுக்கப்
போகிறேன். எனக்கொரு துப்பாக்கி கொடு.
எமது வடபுலத்து மக்களின் பொன்னையும்
பொருளையும், மண்ணையும் மன நிம்மதியையும்
அபகரித்து, அவர்களை அகதிகளாக வீதிக்கு
விரட்டியடித்த விடுதலைப்புலிகளையா? இல்லை!
காத்தான்குடிப் பள்ளிவாயலைக் கர்பலா
ஆக்கிய காட்டுமிராண்டிகளையா? இல்லை!
பள்ளிவாயலில் பச்சை பச்சையாகக் கொன்று
குவித்த கொடுங்கோலர்களையா?
இல்லை!
அழிஞ்சிப்பொத்தானையிலும், அஹமட் புரவிலும்,
பள்ளியகொடவிலும் ஊருறங்கும் வேளையில்
உதவிக்கு அபயக்குரலெழுப்பி உதவிசெய்ய
வந்த முஸ்லிம்களைக் கொன்றுகுவித்த வீர
மறவர்களையா? இல்லை!
நிறைமாதக் கர்ப்பிணியின் வயிறு கிழித்து
இன்னும் விழி திறக்கா இளஞ் சிசுவை
வெளியில் எடுத்து தரையில் அறைந்து கொன்ற
தமிழீழப் போராளிகளையா? இல்லை!
நாம் தெம்மாங்கு பாடிமகிழ்ந்த எம்
தென்னந்தோப்புக்களை புயலாய்ச் சூறையாடிய
பனங்காட்டு வேங்கைகளையா? இல்லை!
எமது மூளைசாலிகளைத் திட்டமிட்டு
தீர்த்துக்கட்டிய தீவிரவாதிகளையா? இல்லை!
எமது ஸெய்த்தூன்களைக் கடத்திக்
கொண்டுபோய்க் கற்பழித்து கொங்கை துறித்து
கொலைசெய்த கொடும் புலிகளையா? இல்லை!
இல்லை!! இல்லவேயில்லை!!!
ஆயின் யாரைச் சுடுவதற்கு அவசரப்படுகிறாய்?
இத்தனை கொடுமைகள் நடந்துமும்கூட ஒரு
சிறுதுளி கண்ணீரும் சிந்தாத நமது நம்பச்சப்
பதர்களை நான் சுட்டுப் பொசுக்கப்போகிறேன்
சிங்கங்கள் சீறும்போது புலிகளுக்காகப்
புலம்பியவர்கள், வேங்கைகளுக்கு வெறிபிடித்த
போது வெள்ளாடுகளை மறந்துபோனார்கள்.
இத்தனை கொடுமைகள் நடந்துமும்கூட இதுவரை
இவர்கள் வெள்ளாடுகளுக்காக
வேதனைப்படவில்லை.
இன்றும்கூட இந்த நபும்சகப் பதர்கள்
புலிகளுக்காகத்தான்
புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.
யார் இவர்கள்?
இவர்கள்தானடா இஸ்லாமியப் பெயர் சுமந்த
ஈனப் பிறவிகள்
கவிதைக் கோமான்கள் புதுக்கவிதைச்
சீமான்கள் மெத்தப்படித்த மேதாவிகள்
முதுகெலும்பில்லா மூதேவிகள்.
அட! தன்மனைவி வயிற்றில் புலிக்குட்டி
வளர்கின்றதென்று பூரித்துப் போவார்கள் இந்த
மலட்டுச் சோனிகள்.
கொடு! எனக்கொரு துப்பாக்கி கொடு.
இப்போதே எனக்கொரு துப்பாக்கி கொடு.
பிரபாவைப் பிறகு பார்க்கலாம். இந்த மலட்டுச்
சோனிகளை நான் சுட்டுப் பொசுக்கப்
போகுறேன்.
கொடு! எனக்கொரு துப்பாக்கி கொடு
இப்போதே எனக்கொடு துப்பாக்கி கொடு.

உஸ்மான் மரிக்கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் ! மின் முற்றுகைப் பதிவுகள்

புலிகளின் சமாதான அழைப்பு

திருமலை மாவட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலக், முஸ்லிம் பிரதிநிதிகளை SLMM ஊடாக 'சமாதானத்திற்கு' அழைத்திருந்தது பெரும்பாலும் சாதகமான தன்மைகளையே வெளிக்காட்டியிருக்கிறது. இவர்கள் தாங்களாகவே முன் வந்து கை நீட்டியதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் பிரதானமானவை:

1- புலிகளும் எதிர்பார்த்திராத வகையில் முஸ்லிம்களுக்குச் சாதகமான பல விடயங்கள் சர்வதேச அளவில் அரங்கேறியமை. அவற்றில் புலி வக்காலத்து வாங்குகிற ஊடகங்களின் செய்திகளை பொய்யாக்கிய உண்மை நிகழ்வுகள் ஊடகவியலாளர்கள் பலரால் தேசிய, சர்வதேச அளவில் தெரியப்படுத்தப்பட்டமை. புலிகளின் நேரடிச் செயற்பாடுகள் மறுக்கப்பட முடியாத அளவிற்கு அம்பலத்திற்கு வந்தமை. (கவனிக்க: அனைத்துத் தாக்குதல்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தவர்களால் நடந்தேறியுள்ளது)

2- க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு மூதூருக்கு வரும் தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

21ஆந் திகதி பரீட்சையைக் கருத்திற்கொண்டு 19ஆந் திகதி அளவிலேயே நேசக்கரங்களை நீட்டத் தொடங்கியது கவனிப்புக்குரியது.

இது தொடர்பில் கவனிக்கவேண்டிய இன்னொரு முக்கிய விடயம், முஸ்லிம் பரீட்சார்த்திகளின் நிலைமை. இம்முறை முஸ்லிம்களின் கல்வியை இலக்குவைத்தும் இத்தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கிறது. சம்பவ ஆரம்ப தினத்திலேயே மின்சாரத்தைத் துண்டித்துவிட்டார்கள். அத்தினத்திலிருந்தே முஸ்லிம்கள் கிடைத்ததை கையில் எடுத்துக்கொண்டு முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தார்கள். மின்சாரமின்மையும் அலைக்கழிச்சலும் தாக்குதல் அச்சுறுத்தலும் ஒரு மாணவனை உள, உடல் ரீதியாக முடங்கச் செய்வதற்குப் போதுமானவை. சில முஸ்லிம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவில்லை. அத்துடன் அனேகர் வெயிழ்களில் தங்கியிருந்து ஆயிரக் கணக்கான ரூபாய்களை பரீட்சைத் தயார்படுத்தலுக்குச் செலவிட்டுக்கொண்டு வந்து சிக்கல்பட்டிருக்கிறார்கள்!

3- மூதூரை மையப்படுத்தியிருக்கின்ற தமிழ்ப் பகுதிகளின் நுகர்வுப் பிரச்சினை. இதை பின்னர் குறிப்பிடப்படும் இடம் பெயர்ந்தோர் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான குறிப்பிலிருந்து விளங்கலாம்.

முஸ்லிம் தரப்பு முன்மாதிரி

மூதூர் பள்ளிவாயல்கள் சம்மேளனத்தையும் உள்ளடக்கியதான மஜ்லிஷுஷ் ஷூறாவின் நடவடிக்கைகள், மிக முன்மாதியானதாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. புலிகளின் சமாதான அழைப்புக் கிடைத்த நேரம் முதலே மிக நிதானமாக எல்லாவற்றையும் அணுகியது. முதலில் மூதூரின் பொறுப்புவாய்ந்த பிரதிநிதிகளையும் பள்ளிவாயல் நிருவாகிகளையும் ஏனையோரையும் அழைத்து ஆலோசனை செய்தது. அழைப்பை ஏற்பதா? இல்லையா? ஏற்றுப்போனால் எதைப்பேசுவது? கதைப்பது? எல்லாவற்றையும் முதல் யார் பிரதிநிதியாய் மக்கள் அங்கீகாரத்துடன் போவது? என்பது போன்றவை பேசுபொருளாயிருந்தன. மஜ்லிஷுஷ் ஷூறாவுக்கு பிரதிநிதி அந்தஸ்து ஏகமனதாக வழங்கப்பட்டு தோப்பூரையும் உள்ளடக்கியதான குழு 21ஆந் திகதி திருமலை S.L.M.M.ல் கூடியது. நிறைய விடயங்கள் திறந்த மனதுடன் பேசப்பட்டு சிலபோதுகளில் வாயடைக்கச் செய்யப்பட்டு இறுதியாக ஆறு அம்சங்களில் சமாதான ஒப்பந்தம் முதற் தடவையாக பிரதேச ரீதியில் கைச்சாத்தானது. (இப் பேச்சுவார்த்தை 22 ஆந் திகதியும் இரண்டாவது நாளாக நடைபெற்ற வேளையில்தான் தோப்பூர் செல்வ நகரில் முஸ்லிம் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார்)

பொதுவாக மூதூரில் நடந்தவற்றை இரு தரப்பின் பரஸ்பர மோதலாகவே பலரும் காட்ட முனைகின்றனர். ஆனால், உண்மை எனன்வென்றால் பலம் பொருந்திய தமிழ்த் தரப்பு முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட திட்டமிட்ட தாக்குதல் இது. இந்த நிலைப்பாடு பேச்சுக்களின் போது தெளிவுபடுத்தப்பட்டு அதன் அடிப்படையிலேயே ஆலோசனைகள் பெறப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

6 அம்சங்கள் சமாதான சக வாழ்வுக்காகப் பிரேரிக்கப்பட்டு திலக்கினாலும், மௌலவி சரீஃபினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த இரு தரப்பு பிரதிநிதித்துவம் வெவ்வேறு முனைகள் கொண்டவை என்பது புரிந்துகொள்ளப்படவேண்டும்.

இயல்பு நிலைக்கு மக்களைத் திருப்புதல்

கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகளின் பிரதான நோக்கம் மக்களை இயல்பு நிலைக்குத் திருப்புவதாகும். புலிகளைப் பொறுத்தவரை அவர்களின் ஒவ்வொரு நகர்வுக்குப் பின்னாலும் ஓராயிரம் உள் நோக்கங்கள் இருக்கும். ஆனால் முஸ்லிம்கள் எவ்வளவுதான் இழந்தாலும் உள் வஞ்சகங்கள் வைத்துப் பழி தீர்ப்பதில்லை.

கைச்சாத்திடப்பட்ட ஓரளவு நம்பிக்கை தரும் ஆறு அம்சங்களும் முஸ்லிம் தரப்பில் மீண்டும் ஒரு ஆலோசனைக் கூட்டம் மூலம் எத்திவைக்கப்பட்டன. அத்துடன் மேலதிக முஸ்லிம்களைக் கருத்திற்கொண்டதான சில மஷூராக்களும் எடுக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்பட்டன.

அதிகரித்த அரச இராணுவம்: பாதுகாப்பா? அச்சுறுத்தலா?

மூதூர் முற்றுகைக்கும், தாக்குதலுக்கும் உள்ளாகுவதற்கு இராணுவ அசமந்தம் ஒரு காரணம் என்பது பொதுவான அபிப்பிராயம். இதனைக் காரணம் காட்டியும் வேறும் பல நோக்கங்களுக்காகவும் யுத்த காலத்தில் இல்லாத இராணுவப் பிரசன்னம் மூதூரில் நிலைகொண்டிருக்கிறது. கடற்படை தனது முகாமொன்றை மூதூரின் மத்தியிலுள்ள கலாசார(கொஞ்சக் காலமாக 'கழிசடை மண்டபமாக' அழைத்து வந்தார்கள்) மண்டபத்தில் அமைந்துள்ளது. இறங்குதுறை முகாமும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல மினி முகாம்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் உடனடிக் காரணங்கள் சுருதி பாதுகாப்பாகத் தோன்றினாலும் எதிர்கால நிலைமையைக் கருத்திற்கொள்கையில் அச்சமாகவே இருக்கிறது. புலிகளின் பேச்சுவார்த்தை தற்காலிக விலகல் மூலம் பொதுவான அச்சம் எழுகிறது. அடுத்தது. மூதூர் நகரத் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்பான தமிழ் பகுதிகளுக்குச் செல்வது இங்கு குறிப்பான அச்சத்தைத் தருகின்றது.

அத்துடன், பாதுகாப்புப் படையினருடன் மனஸ்தாபமான முறையிலும், தன்னிச்சையாகவும் முஸ்லிம் தரப்பு புலிகளுடன் உடன்பாடுகள் செய்துகொண்டதும் படைத்தரப்புக்கு நெருடலாகவும் இருக்கக்கூடும். மேலும், மூதூர் நகரப்பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றுகிற ஒரு பாதுகாப்பு உத்தியாகவும் இராணுவ முகாம் அமைப்புக்களைக் கொள்ளவேண்டியிருக்கின்றது. சிங்களக் குடியேற்றங்கள் இராணுவ முகாமை அண்டிய சூழலில் நிலைகொள்வன என்பது யதார்த்தம்.

முஸ்லிம் தரப்பு சுமூக நிலை உத்தரவாதத்தைக் காரணம் காட்டி தமிழ்த் தரப்பு (விடுதலைப்புலிகள்) எங்களையே இராணுவ முகாமை அகற்றுமாறு கோரச் சொல்லி சிண்டுமுடித்துவிடலாம். இப்படி இது தொடர்பில் நிறையச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மூதூர் ஏன் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகிறது?

இதற்கு இரு தரப்புப் பிரதான காரணங்கள் இருக்கின்றன.

1- முஸ்லிம் தரப்புக் காரணம்:

அதாவது, மூதூர் முஸ்லிம்களை பொருளாதார ரீதியாக முடக்கி, அதன் மையமுக்கியத்துவத்தை தமிழ் பகுதிக்குள் மாற்றுவது. இதன் அடிப்படையில் பல இரகசிய வேலைத் திட்டங்கள் (தமிழ் பிரதேச வர்த்தக இறங்குதுறை, முற்றிலும் தமிழ் பகுதிகளை ஊடறுத்து நெடுஞ்சாலைத் திட்டங்கள்) நடைபெற்று வருகின்றன.

2- மூதூர் நகரில் வாழ்கின்ற தமிழர் தரப்புக் காரணம்:

மூதூர் நகர மத்தியில் கணிசமான எண்ணிக்கையான தமிழ் மக்கள் (கிறிஸ்தவர்கள் அதிகம்) வாழ்கின்றார்கள். எப்போதும் மூதூர் முஸ்லிம்களுக்கும் இவர்களுக்கும் இடையே மோதல்கள் தோன்றுவதில்லை. ஆனால், முஸ்லிம்கள் புலிகளாலோ அல்லது வேறு பகுதித் தமிழர்களாலோ தாக்கப்படும்போது முதலில் முஸ்லிம்களின் தாக்குதலுக்கு உள்ளாவது இப்பகுதித் தமிழர்களே. இதைப் பு' கள் நன்கு உணர்ந்தே செய்கிறார்ச . காரணம், இவர்கள் தாக்கப்பட்டால் பாதுகாப்புத்தேடி சம்பூர், சேனையூருக்கு வருவார்கள். அதிகம் போராட்டத்திற்கு பங்களிக்காதவர்களிடமிருந்து நிறையப் பணத்தினையும் பிள்ளைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பது புலிகளின் எதிர்பார்ப்பு. இதைப் பல தமிழர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் மீள மீள அடிவாங்கியும் தேவாலயத்தில் சில நாட்கள் தஞ்சமடைந்து சுமூகமாகிறார்கள். ஒரு சிலரே அங்குபோய் பணத்தையும் பிள்ளைகளையும் கொடுத்துவிட்டு வருகிறார்கள்.

அதுபோலவே, மறுபுறத்தில் முஸ்லிம்களுக்கிடையே வாழும் சில தமிழ் ஒற்றர்களும் இவ்வாறான தாக்குதலுக்கு காரணமாயும் அமைந்துவிடுகிறார்கள். முஸ்லிம்களின் பொருளாதார வளங்களைக் காட்டிக் கொடுப்பது, வங்கியிருப்புகளை கணக்கிலக்கத்தோடு தெரியப்படுத்துவது, தனிப்பட்ட பிரச்சினைகளை பூதாகரமாக்கிவிடுவது என இவர்கள் பிரச்சினைகளுக்கு உரமிடுகிறார்கள்.

மொத்தத்தில் பொதுவாக "சோனி உங்களை அடிக்கிறான் இங்கால வாங்க, தாங்க" என்ற நோக்கமும் புலிகளின் மூதூர் மீதான தாக்குதலுக்கு இன்னொரு பிரதான காரணம்.

இதை மூதூர் தமிழ் மக்கள் உணர்ந்திருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் விரக்தியிலிருக்கிறார்கள். பாதிக்கபட்ட இத் தரப்பிலிருந்து சமாதானப் பேச்சுக்காக யாரையும் புலிகள் அழைக்காததிலிருந்து இவர்கள் எவ்வளவு தூரம் பகடைக்காய்களாக்கப்படுகிறார் கள் என்பது தெரியவரும்.

நிவாரண நடவடிக்கைகள்

தற்போது பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறியிருப்பது நிவாரண நடவடிக்கைகள். மூதூர் முஸ்லிம்கள் தாக்குதல்களின் பின்னர் இடம் பெயர்ந்திருந்தாலும் அவர்களில் அனேகர் நிலையான முகாம்களில் இல்லாதது நிவாரண நடவடிக்கைகளைச் சிக்கல் படுத்துகின்றது. பொதுவாக வெளிநாட்டு உதவிநிறுவனங்கள் 'உள்ளக இடம்பெயர்ந்தோர்' பற்றிய வரைவிலக்கணங்களை கொண்டிருக்கிறது. அதன்படி இல்லையானால் அவைகள் உதவி வழங்க முன்வருவதில்லை. ஆனால் யதார்த்தத்தில் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் யார் பாதிக்கப்பட்டவன், யார் தாக்கியவன் என்று. மூதூர் முஸ்லிம்கள் பெரும்பாலும் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்து பகலில் வீடு திரும்புவர்களாகவே இருக்கின்றார்கள். இது கணிப்பீட்டு, பங்கீட்டுச் சிக்கல்களை ஏற்படுத்தி இப்போது பல இணைப்பு நிலையங்களூடாக ஓரளவு சீராகியிருக்கிறது.

வேடிக்கையான விடயம் என்னவென்றால், மூதூர் முஸ்லிம்கள் புலிக் கட்டுப்பட்டுப் பிரதேச தமிழர்களாலும், ஏனைய பெரும்பான்மை இனத் தமிழர்களாலும் தாக்கப்பட்டது பகிரங்க உண்மையாக இருக்க - இந்த தாக்கியவர்களின் ஊர் களிலேயே அதிகளவான தமிழர்கள் அகதி முகாம்கள் இருப்பது! இந்த ஊர் கள் ஒரு சதமேனும் முஸ்லிம்களால் கிட்ட நெருங்க முடியாத ஊர்களாகும். ஆனாலும், இப்பகுதி கிராம சேவகர்கள் அரசுக்கும் உதவி நிறுவனங்களுக்கும் அகதிப்பட்டியல் கொடுத்து வெட்கங் கெட்டதனமாய் தின்றுகொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு முற்றிலும் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சேனையூரில் 155 குடும்பங்கள் கொண்ட அகதி முகாம் இருப்பதென்றால் பார்த்துக் கொள்ளுங்கள் (தமிழர் தரப்பு காட்டியுள்ள மொத்தமான 9 முகாம்களில் இரண்டைத் தவிர மற்றவை எந்தவித்திலும் நியாயப்படுத்த முடியாதவை.) இவ்விடயத்தை முன்பு குறிப்பிட்ட நுகர்வுப் பிரச்சினையுடன் சம்மந்தப்படுத்தி விளங்கிக் கொள்ளவும்.

இதற்கான இன்னொரு 'மொஸாட்' காரணம், முன்பு சொல்லப்பட்டு வந்த 'இருதரப்பு' (மூன்றாந் தரப்பு) மோதல்கள் என்பதை நிறுவுவதாகும். சம அளவு முகாம்களைக் காட்டினால்தானே இரண்டு பேரும் சண்டைபிடித்துக் கொண்டார்கள் என்று சொல்லி 'தாக்கினோம்' என்பதை மறைக்கலாம்.

(பல முஸ்லிம் ஊர்களிலிருந்து மூதூர் முஸ்லிம்களுக்கு தாராள மனதுடன் நிவாரணங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.)

"மூன்றாந் தரப்பு" : உள்நோக்கம் கொண்ட உருவாக்கம்

மூதூர் பிரச்சினையில் மட்டுமல்ல, அரசு புலிகளின் அவ்வப்போதைய யுத்த நிறல் சம்பவங்களின் போது இவ்விரண்டு தரப்பாலும் உருவாக்கப்பட்ட ஒரு விடயமே இந்த 'மூன்றாந் தரபபு! இது புலிகளை நாறடித்த விமர்சனங்களுக்குட்படுத்தியது என்பது எல்லோருக்கும் தெரிந்தது! (உ-ம்: புலிகளின் லெப்டினன்கள், கேர்ணல்கள், எஞ்சினியர்கள், கடலட்டை பிடிக்கச் சென்றவர்கள் போன்றவை!) மூதூர் பிரச்சினையிலும் திட்டமிட்டவகையில் 'மூன்றாந் தரப்புக்கள்' 'பலசாலிகளால்' உருவாக்கப்பட்டன. 'தமிழ் மூன்றாந் தரப்பு' புலிகள் சம்பந்தப்படவில்லை என்று காட்டுவதற்காகவும், 'முஸ்லிம் மூன்றாந்தரப்பு' சாமர்த்தியமான முறையில் சமாதான முன்னெடுப்புகளுக்கு குந்தகமில்லாத வகையில் (அரச படைகளினால் இராணுவம் - பொலிஸ்) புலிகளுக்கு அனுகூலமான முறையிலும் தோற்றுவிக்கப்பட்டது. இதைத் தமிழ் ஊடகங்களின் மூலமும் பொலிஸ்மா அதிபரின் B.B.C. நேர்காணல் மூலமாக உத்தியோக பூர்வமாகவும் அறியலாம். இதை நிலைநிறுத்தும் இன்னொரு வடிவம் மூதூர் படையதிகாரி ஒருவரின் 'சமாதானக் கூட்டம்' என்ற பெயரால் எடுக்கப்பட்டது.

கடந்த 30 ஆந் திகதி மாலை மூதூர் பிரதேச படையதிகாரி ஒருவர் சமாதானக் கலந்துரையாடல் ஒன்றுக்காக பள்ளிவாயல் பிரமுகர்களை 64ஆம் கட்டைப் பகுதிக்கு '64ஆம் கட்டை - (ஜஸ்நகர்) முஸ்லிம்கள் குடிபெயர்ந்த ஓர் எல்லைக் கிராமம். இதற்கடுத்துள்ளவை - தொடர்ச்சியான தமிழ்க் கிராமங்கள். இவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றாலும், யுத்த நிறுத்தத்தின் பின் புலிகளின் மறைமுக ஆதிக்கத்திற்குற்பட்ட கிராமங்கள்" அழைத்துச் சென்றார். மலையடிவார மரத்தின் கீழ் கூட்டத்திற்காகக் குந்தியிருந்தார்கள். தமிழ் பகுதியிலிருந்து 150க்கும் மேற்பட்டோர் தமிழ்த் தரப்பாலும் கலந்து கொள்ள வந்தார்கள். வந்தவர்கள் தங்களை இளைஞர் அணியாக அடையாளப்படுத்திக் கொண்டதுடன், இப்பக்கத் தமிழ் பிரதேசங்கள் தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியது என்றும் கூறியிருக்கிறார்கள். அதாவது, இவர்கள் தங்களை 'தமிழ் மூன்றாந் தரப்பாக' பல்வேறு தரப்புகளின் திட்டமிடலூடாக முன்காட்ட முனைந்ததுடன், தாங்கள் பள்ளிவாயல் பிரதிநிதிகளுடன் அல்ல 'முஸ்லிம் மூன்றாந் தரப்புடன்'தான் பேச விரும்புவதாக அல்லது, அவர்களை எதிர்கொள்ள விரும்புவதாகக் கூறி பெயர்ப்பட்டியல் ஒன்றையும் கொடுத்துள்ளார்கள். ஆனால், அவ்வாறு இனங்காட்டப்பட்ட மூன்றாந் தரப்பு முஸ்லிம்களிடையே இல்லை என்பதை மிக சாணக்கியமாக பள்ளிவாயல் பிரதிநிதிகள் நிலை நிறுத்தியிருக்கிறார்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்த இராணுவ அதிகாரி முஸ்லிம் பிரதிநிதிகளிடம் இவ்வாறான ஒரு கூட்டத்திற்காக மனவருத்தப்பட்டு வருந்தியதுடன், நிலைமையை முஸ்லிம்களின் சார்பில் தெளிவாகப் புரிந்துமுள்ளார்.

மூன்றாந் தரப்பு என்ற முடிச்சுப்போடல் அப்பட்டமாக முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் சுபத்தனம் என்பதை எல்லோரும் கவனமாக உணர்ந்து செயற்படவேண்டி இருப்பதை இங்கு விஷேசமாக உணர்த்தவேண்டும்.

சுமூக நிலையை அச்சுறுத்திய துண்டுப் பிரசுரம்

மூதூரின் சுமூக நிலை ஓரளவு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளையில்தான் நினைவஞ்சலி என்று ஒரு துண்டுப் பிரசுரம் ஊருக்குள் உலவி கிலியேற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதுவரை இது ஏற்படுத்திய கிலி தீரவில்லை. அத்துடன் நகருக்குள் இருந்த பெருமளவான தமிழ்க் குடும்பங்களும் வெளியேறியுள்ளமை முஸ்லிம்களுக்கு மேலும் அச்சத்தைத் தந்துள்ளது. கூடவே A/L பரீட்சையை முடியவிட்டு மூதூரை ஒரு கை பார்க்கவுள்ளார்கள் என்ற எந்த அடிப்படையுமற்ற வதந்தியும் சுமூக நிலைக்கு ஆப்பு வைத்துள்ளது. வாய்ப்புள்ள சில முஸ்லிம் குடும்பங்கள் ஊரைவிட்டு வெளியேறவும் தெடங்கியுள்ளன. இந்த ஒரு அச்ச நிலையை நீக்கும்பொருட்டு பள்ளிவாயலை உள்ளடக்கிய ஷூரா சபை அடிக்கடி கூடி மக்களுக்குத் தெளி வை வழங்கிக் கொண்டிருக்கிறது.

எட்டாம் நாள் நினைவஞ்சலி - 2003 சங்கர் 23.04.2003 (குட்டி)

முஸ்லிம் அரசியல்வாதிகளே, குஞ்சர்களே! கர்ணடயாதளே! தமிழர்கள் போரென்றால் புதுமனமாக சுவாசிப்பவர்கள். வணிகம் செய்ய வந்தவர்களல்ல! ஆட்சி வேண்டுமென்றால் அங்கு அரசின் வாலைப் பிடி எமது உரிமைகளுக்கு அழுத்தம் தர முயன்ற சிங்கள பேரினவாதத்தின் நிலைப்பாட்டை எண்ணிப் பார். நாங்கள் மக்களாயினும் எமது தேசியத் தலைவர்களின் நேரிய பாதையில் வளர்க்கப்பட்டவர்கள் புல்லர் களுக்கு புறங்காட்டுபவர்களல்ல. சங்கரும் குட்டியும் என்ற விதைகள் முஸ்லிம் களே! உம் மை மூதூரை விட்டுச் செல்ல நீங்களே போட்ட விதைகள்தான். அவர்கள் வழித் தோன்றலில் விழித்தவர்கள் நாம். மூதூர் எமது தாயகம் என்பதை வலியுறுத்தி எமது இரு வீர புருசர் களின் ஆத்மா சாந்தியடைய இறை வனை வேண்டுகிறோம்.

வெளியீடு:
மூதூர் கிழக்கு தமிழ் மக்கள்

மறவர் படை +ராஜு அணி

இவை பற்றி இன்னும் குறிப்பிட்டாக வேண்டும். மறவர் படையணி புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேச தமிழாகளை வயது பேதமின்றி உள்வாங்கி பயிற்றுவிக்கப்படும் ஒரு படையாகும். இதன் உத்தியோகபூவ வெளிப்பாடு ஏப்ரல் 18 இல் 2000 க்கும் மேற்பட்டோர் மூதூரைத் தாக்க வந்து அம்பலப்படுத்தப்பட்டதில் தெரிந்தது. பொதுவாக புலிகள் தற்போது முழுத் தமிழ் மக்களையும் ஆயுதபாணிகளாக்கிவிட்டு தங்களை அமைதி விரும்பிகளாக காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த "மக்கள் ஆயுதக் குழு" எந்தளவு புலிகளையும் மீறிச் செயற்பட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம். புலிகளின் திருமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திலக் மின்சார திரு த்த வேலைக்கு கடித உத்தரவு அனுப்பியபோது, அதை இறால்குழி "மறவர்கள்" கிழித்தெறிந்துவிட்டு "யாருடா அந்த திலக்?" என்று கேட்டது. அத்துடன், ஊழிதப்படுத்தப்படாத செய்தியொன்று திலக் இந்த மறவர்களால் சம்பூரில் தாக்கப்பட்டார் என்று கூறுகிறது. இந்தப் பின்ன ணிதான் பாணந்துறை பிரதேச சபை தலைவர் அம்ராஸை "புலிகளையும் விட சக்திவாய்ந்த குழு மூதூரில் இயங்குகிறதா? அப்படியானால் புலிகளை விடுத்து அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத் துச் செல்லுங்கள்" என்று பேச வைத்தி ருக்கிறது.

ராஜு அணி (தமிழ் இளைஞர் அணி எனச் சொல்கிறார்கள்) புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டிலில்லாத தமிழ் பிரதேசங்களின் தமிழ் இளைஞர்களை உள்வாங்கிய அணி. இதனைத் தலைமை தாங்குபவர்தான் "மல்லிகைத் தீவு ராஜு" இந்தக் குழுதான் 64 ஆம் கட்டையில் இராணுவ ஏற்பாட்டில் பேச்சுக்கு வந்தது. (கவனிக்க : 150 க்கும் மேற்பட்டோர் சமாதானப் பேச்சுக்கு வந்திருக்கிறார்கள்)

இந்தக் குழுக்களே மூதூரில் தொடர்ந்தும் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற குழுக்கள் மூதூரில் நடந்த வன்முறைகளுக்கு புலிகளின் ஆசிர்வாதத்தோடு காரணமாயிருந்தவர்கள்.

திருமலை மாவட்ட எஸ்.எல்.எம்.எம். தலைவர் Jon Ledang "மூதூரைச் சூழவுள்ள சில தமிழ் பிரதேசங்கள் புலிகளால் உள்ளூர் மக்களை பயிற்றுவிப்பதற்கான தளங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன" என்று கூறி தனது விசனத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க : Daily Mirror 08.05.03)

அகதிகளாய்ப் போனவர்கள் வராதது ஏன்?

மூதூரிலிருந்த பல தமிழ்க் குடும்பங்கள் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குப் போயிருந்தன. அவர்கள் மீள வர இன்னும் புலிகள் முஸ்லிம் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி அனுமதிக்கவில்லை. ஆனால், உண்மை அதுவல்ல. போனவர்கள் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். மறவர் படை பயிற்சி முடியும் வரை அவர்கள் திரும்பமாட்டார்கள். அத்துடன் இளம் வயதினரும் வரமாட்டார்கள். புலிகளின் நீண்ட காலத் தந்திரோபாயங்களில் ஒன்று இப்போது நிறைவேறுகிறது போலுள்ளது.

இன்னும் களை கட்டாத மூதூர் நகர்!

பிரச்சினைக்குரிய பிரதேசங்களிலிருந்து இன்றுவரை இராணுவ பாதுகாப்புடன் (08.05.03) தமிழ் மக்கள் நகருக்குள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அலுவலக, தொழில் நிமித்தமே இவர்கள் பெரும்பாலும் வருகிறார்கள். இவ்வாறு வருபவர்கள் முஸ்லிம்களிடம் எதையும் வாங்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவுக்கு அடிபணிந்துதான் வருகிறார்கள். இதனால் வியாபாரம் டல்லடித்திருக்கிறது. உள்ளூர் மக்களிடமும் உழைப்பில்லை. சாமான்கள் வாங்கிச் சோக்கும் விருப்பமும் அற்றுப் போய்விட்டது. சம்பூரில் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு புலிகளின் அறவீட்டுடன் கட்டாய வியாபாரம் நடந்ததாக அறிய முடிகிறது. உதாரணத்திற்கு ஒரு கிலோ சீனி 45 ரூபாவிற்கு விற்பனையாகிறது. மூதூர் முஸ்லிம்களை பொருளாதார வீழ்ச்சிக்கு உட்படுத்தும் இன்னொரு நீண்ட நோக்கமும் இந்த முறையில் இடம் பெற்று வருவதை அறிய முடிகிறது.

இதன் ஒரு தொடர்சியாக மூதூருக்குள் கடைகள் (மரக்கறிக் கடை, சலூன்) வைத்திருக்கும் தமிழர்களை, கடைகளை மூடிவிடும்படி உத்தரவிட்டு கடிதங்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவும் மூதூர் மக்களை சுமுக நிலைக்கு வரவிருப்பதைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், பின்னர் இது புலிகளால் மறுக்கப்பட்டிருக்கிறது.

யசூஷி அகாஷி

செவ்வாய்க்கிழமை (06.05.03) மூதூர் வந்திருந்தார். அரபிக் கல்லூரியில் முஸ்லிம்களையும் தேவாலயத்தில் கிறிஸ்தவர்களையும் சந்தித்தார். மு.கா. தலைவரும், 4 மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட வந்திருந்தார்கள். நிலைமைகள் எடுத்துச் செல்லப்பட்டது. தகவலறிக்கையும் கொடுக்கப்பட்டது. அகாஷி தன் சிறிய தலைக்குள் எத்தனை விஷயங்களை எந்தெந்த விதமாய் போட்டிருப்பாரோ தெரியாது. ஆனாலும், இலங்கை வந்த மறுநாளே புலிகளைச் சந்திக்க முன்னரேயே அவரை இங்கு அழைத்து வந்து பாதிக்கப்பட்டவர்களை பார்வையிட வைத்து. ஆறுதலை வழங்கியமைக்கும், நிதிவளப்பங்கீட்டில் மூதூரின் பக்கமும் கவனத்தைத் திரும்பும்படி கோரியமைக்கும், சம்பந்தப்பட்ட மு.கா. பிரமுகர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இந்தநிகழ்வில், வெளியே இருக்க வேண்டியவர்கள் உள்ளேயும், உள்ளே இருக்க வேண்டியவர்கள் வெளியேயும் இருந்தார்கள். உள்ளே இருந்தவர்கள் கூட மிகப் பருத்த புகைப்படக்காரர்களின் முதுகையும். புட்டத்தையும் தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். (இக்கமராக்காரர்களுக்கு கொமன்ஸன்ஸ் பற்றி விளங்கப்படுத்த வேண்டும். எம்.பி.மார்களும் தங்கள் ஊடக உதவியாளரை குனிந்து, நிமிர்ந்து எழும்பு கிற மாதிரியான உடல் பருமனுள்ளோரை நியமித்தல் நல்லது.)

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் சக்தி டி.வி மின்னல் புகழ் ஸ்ரீரங்காவும் இவர்களோடு வந்தது. பதிவுக்கான ஒரு குறிப்பு!

-ஊர் சுற்றி

ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும்.
தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு ஃபீனிக்ஸ் பறவை போல....

அரபுப் பாலைவெளியில் அறுநூறு ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒரு பெரிய பறவை ஃபீனிக்ஸ். ஒரு சமயம் தன்னையே எரித்துக் கொண்டது. மீண்டும் பிறவி எடுத்தது. எரிந்த சாம்பலிலிருந்தே! "லைட் ரீடிங்"கும் ஒரு ஃபீனிக்ஸ் பறவை தான்!

அது, 30.04.1989 இல், ஜே.வி.பி. யின் அடாவடிக் காலத்தில் தைரியமாகப் பிறந்தது. கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் வாரா வாரம் தென்கிழக்கிலிருந்து தென்னிலங்கை வரையில் துள்ளி விளையாடியது.

திடுதிப்பென்று 16.01.1994 லில் மடிந்தது. ஒரு முஸ்லிம் அரசியல்வாதி "அந்தக் கொலையை"ச் செய்தார். மீண்டும் அதே ஆண்டு பிற்பகுதியில் பிறந்த பொழுது அரசியல் ரீதியாக அப்பொயின்ட்மெண்ட் (நியமனம்) பெற்ற ஆசிரியரான அந்த ஆனந்தமானவர் - சமூகத்தில் கத்தியை வைத்தார். மறுபடியும் 2002 ஆரம்பத்தில் பிறக்கச் செய்ய பல இதழாளர்கள் இதய சுத்தியாக முயன்றனர். பழையபடி அதே முஸ்லிம் அரசியல்வாதி இறைச்சிக்கடைக் கத்தியுடன்! திரும்பவும் ஏன் அவர்கையால் இறப்பு என்று மாளிகாவத்தை "குருவிக் கூட்டு"க்குள்ளேயே "லைட் ரீடிங்" முடங்கிக் கொண்டது. இப்பொழுது மறுபடியும் பிறப்பு!

எதிர்காலத்தில் ஏதாவது நடக்கும் வரை உயிர் இருக்கும் என எதிர்பார்ப்பு. அனைத்தும் ஏகனின் எண்ணப்படியும். திட்டப்படியும். அல்ஹம்துலில்லாஹ்.

- மானா மக்கீன்

நல்ல தமிழ் அறிவோம்

இரு சிறுவாகளுக்கிடையே தெருவில் ஒரு தகராறு.

"என்ன தகராறு இங்கே?" என்றார். அவ்வழியாகப் போன ஒரு பெரியவா.

"தகராறு பற்றித்தான் தகராறு" என்றாகள் சிறுவாகள்.

"விளங்கச் சொல்லுங்கோடா தம்பிகளா" என்றது பெரிசு.

"ஐய்யா, தகராறு என்ற வார்த்தையில் வருவது "ர"வா, "ற"வா என்பதில் எங்களுக்குள் தகராறு" என்றான் ஒரு தம்பி.

"இங்க பாருங்கோ, தகராறு சின்னதா இருந்தா சின்ன "ர" போடுங்கோ! அதுவே பெரிய தகராறாய் இருந்தால் பெரிய "ற" போடுங்கோ!" பெரியவா சொல்லிவிட்டுப் போய் விட்டா.

எப்படி வேடிக்கை! தமிழில் சின்ன "ர", பெரிய "ற" என்றெல்லாம் இல்லை. நாம்தான் அப்படிப் பழக்கிக் கொண்டோம். இடை யில் ரகரம், வல்லின றகரம் - இரண்டையும் தான் அப்படிச் சொல்கிறோம்.

தகராறு என்னும் வார்த்தை யில், இடையிலும், வலலினம் இரண்டும் உள்ளன. (தகா + ஆறு) ஒன்றைத் தகாக்கும் வழிதான் தகராறு. (ஆறு - வழி)

இவருக்கு உதவுங்கள்

ஏழையானால் "அப்பாவி"
பணக்காரனானால் "அயோக்கியன்"
தாமம் செய்தால் "டம்பம்"
செய்யாவிட்டால் "கஞ்சன்"
ஆசார சீலனாக இருந்தால் "கபடன்"
அப்படி இல்லாவிட்டால் "பஞ்சமா பாதகன்"
எல்லோரையும் நேசித்தால் "மகா கோழை"
யாரையும் மதிக்காவிட்டால் "திமிர்பிடித்தவன்"
பணம் சேர்த்தால் "உலோபி"
செலவழித்தால் "ஊதாரி"
கஷ்டப்பட்டு உழைத்தால் "வெறும் யந்திரம்"
உழைக்காதிருந்தால் "உதவாக்கரை"

பின்னர் எப்படித்தான் வாழ்வது?

இப்படி கேட்டிருந்தார். மன்னார எருக்கலாம்பிட்டி, எம்.ஏ.சி.முாஸிதா, பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்! இவா இப்பொழுது எங்கிருக்கிறாரோ? இருப்பிடம் தெரிந்தவாகள் சொல்லுங்கள், எப்படியாவது தெரியப் படுத்தி விடுகிறேன்.

இந்த இளந்தளிரின் எதிர்பார்ப்பு என்ன?

இந்த இளந்தளிரின் எதிர்பார்ப்பு
எந்தச் சந்தேகத்திற்கும் இடமின்றி
ஒரு சிலவற்றையே சுற்றிச் சுற்றி வரும்
தனக்கென நல்லதொரு எதிர்காலம்
இனக் குரோதமற்ற
பகை உணர்வு அற்ற
மதங்களுக்குள் வேலி அமைத்துக் கொள்ளாத
ஒருமைப்பாட்டு வாழ்வு

- இவற்றை அமைத்துக் கொடுப்பதில் இந்தக் "குட்டித் தீவு"க்குக் கஷ்டம் எதுவுமில்லை. வேண்டியதெல்லாம் இறைவன் படைத்திட்ட அந்த சின்ன மனத்தினைப் பெரிதாக விசாலப் படுத்திக் கொள்வதே!

அப்பணியில் தன் பங்களிப்பையும் அர்ப்பணிக்க முன்போல் இப்பக்கமும் களத்தில்!

அபிமானிகள் துணை வேண்டும்.

இந்தக் குரலுக்கு வயது 46!

காலத்திற்குக் காலம் முஸ்லிம் சமூகத்திற்காகக் "குரல்"கள் ஒலிப்பது அவசியத்திலும் அவசியம்.

இலங்கையில் அந்தக் குரலை ஒரு "முஸ்லிம் குரல்" மூலம் இப்பொழுது கேட்கிறோம்.

தமிழ் நாட்டிலோ ஒரு "குரல்", 45 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

அது தமிழ் வளர்த்த மதுரையிலிருந்து *"குர்ஆனின் குரல்"* எனக் கடல் கடந்தும், ஒலித்வண்ணம் உள்ளது.

முஸ்லிம் மாத இதழ்களில் அதிக விற்பனையுள்ள முதல்தர சஞ்சிகையான "குர்ஆனின் குரல்", அல்லாமா அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி அவர்களை நிறுவனராகக் கொண்டது. (1958) அவருக்கு அப்போதையத் தோன்றாத்துணை, அல்ஹஜ் ஜாஹல்வா, பீவி அம்மாள் அவாகள்! வேறு யாருமல்ல! அன்னாரது துணைவியாரே!

இப்பொழுது பெற்றோர்களின் அடிச் சுவட்டில் மவ்லானா மு.ஃப்தீ அல்ஹாஜ் *அஸ் அதுல் மில்லத்* அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறாகள்.

குழந்தை மனமும், சிறந்த மார்க்க அறிவும் சீரிய சேவை மனப்பான்மையும் கொண்ட அன்னாரா முஸ்லிம் இதழாளர்களிடையே முதன்மை இடத்திலிருப்பவர்.

அவாகளுக்குத் தோன்றாத் துணைகளாக மவ்லவி அல்ஹாஜ் எஸ்.எஸ். நூரா முஹம்மது பாஸில் மன்பஈ அவாகளும், புரட்சி எழுத்தாளா, பழம் பெரும் பத்திரிகையாளா எம்.ஜே.அன்வரி அவாகளும் உள்ளனர்.

"குர்ஆனின் குர்" - லின் விசேஷங்கள் பல. மாதத்தின் முதலாம் தேதியன்றே தன் குரலை ஒலிக்கவைக்கும்! மார்க்கம், சமூகம், இலக்கியம், அரசியல் என்று அனைத்தினதும் பதிவு இருக்கும். தொடாந்து 128 பக்கங்களில் குறைந்த விலையில் வருகிற ஒரே முஸ்லிம் மாத இதழும் தமிழகத்தில் அதுவே!

அத்தோடு, எழுதுகிற எழுத்தாளாகளுக்கு "குழுதம்" பாணியில் நல்ல சன்மானத்தை உடனே அனுப்பி வைக்கிற முஸ்லிம் சஞ்சிகையும் அதுதான்!

எனது அபிமானிகள் மதுரை மண்ணை மிதித்தால், 38, தாசில்தார் பள்ளிவாசல் தெரு அலுவலகத்திற்குள் நுழைந்து பாருங்கள் கிடைக்கிற வரவேற்பை.

அதிலும் ஆசிரியரைச் சந்திக்கக் கிடைத்தால் ஓா அற்புதமான அனுபவம் கிடைக்கும். எனக்குப் பல தடவை. அல்ஹம்துலில்லாஹ்.

"முஸ்லிம் சமூகப் பண்புகள்" - வைபவம்

தென்னிலங்கையில் நூல் வெளியீட்டு விழாக்கள் மிகமிக அபூர்வம். இப்பொழுது ஒன்று. மே - 4 ல் பேருவளையில்.

ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எம். எம். ஸியாது அவர்கள், அவ்வக் காலங்களில் சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய நல்ல சில கருத்துக்களை இதழ்களில் பதித்தார். இப்பொழுது அவற்றைத் தொகுத்து "முஸ்லிம் சமூகப் பண்புகள்" என்னும் நூலாக சமூகத்திற்கு அர்ப்பணித்திருக்கிறார்.

(ஓர் அடிக்குறிப்பு: அரசியல்வாதிகளை ஓரங்கட்டிவிட்டு நடக்கிற வைபவத்திற்கு சபாஷ் போடுகிறேன்)

இந்து மன்னனின் தோன்றாத் துணைகள்!

"இந்து சாம்ராஜ்யம் அமைத்த அரசன்" என்றால் யாருக்கும் புரியாது. ஆனால் "சிவாஜி கணேசன் நடித்த சிவாஜி" என்றால் புரியும். காலம் அப்படி இருக்கிறது!

அந்த மாபெரும் மராட்டிய மன்னனுக்குத் தூணகளாக இருந்தவர்கள் இவர்கள்:

* மௌலவி ஹைதர் அலி - அந்தரங்கச் செயலர்.
* இப்ராஹிம் கர்டி - பீரங்கிப் படைத் தளபதி
* மாதரி மெக்தார் - சிவாஜி ஆக்ராச் சிறையிலிருந்து தப்பித்த போது உறுதுணை.

அமெரிக்க ஆக்கிரமிப்பு - ஒரு பயங்கரமான எதிர்விளைவு!

ஈராக் ஆக்கிரமிப்பு இந்த மிலேனிய ஆண்டில் ஒரு முக்கிய பதிவு.

அதையொட்டிய இன்னொரு பதிவும் ஏற்படப் போகிறது.

எதிர்பாாக்கப்படும் சிரிய நாட்டு ஆக்கிரமிப்பை விட!

அனைத்துலக அளவில் பாலியல் தொழில் (விபசாரம்) பெருகுமாம். ஈராக்கில் தங்கி நிற்கும் அமெரிக்க வீரர்களது உடல் பசியைத் தீர்க்கத் தேவைப்படுமாம்! வலுக்கட்டாயமாக பெண்களும் சிறுமிகளும் உட்படுத்தப்படுவாகளாம். ஒரு நாட்டில் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு சீாகுலைந்தால் இந்தத் தொழிலே மேலோங்கும் என்பது ஆய்வாளா கருத்து.

இப்பொழுது ஈராக்கில் இதுதானே சீரழிந்திருக்கிறது. ஈராக் நாணயம் இருக்கிற இடம் தெரியவில்லையே. வீரனிடம் விளையாடும் டொலாகளால் கண்ணாமூச்சு காட்ட முடியும்.

(ஓர் அடிக்குறிப்பு : செக்ஸ் தொழிலுக்காக ஒவ்வொரு ஆண்டும் 49 நாடுகளிலிருந்து 50 ஆயிரம் பெண்கள் அமெரிக்காவுக்கு அழைத்து வரப்படுகிறாாகள். அதுவொரு தனிக்கதை.)

பள்ளிமுனைக் குறுநாவல்
கிராமத்தின் கதை

-என்.ஏ.தீரன்-

1

அத்தியாயம் 1

அம்பாறையிலிருந்து பஸ் ஏறி, முப்பது கிலோமீற்றர் தொலைவு பிரயாணித்து காரைதீவு முச்சந்திக்கு வந்து, மறுபடி தெற்கு நோக்கி வயல்வெளிகளூடே ஊடறுத்துச் சென்றால் திடீரென பூமாதுத் சந்தி வந்துவிடும். அங்கு நமக்கென்றே காத்துக் கிடக்கும் மூன்றே மூன்று முச்சக்கர வண்டிகளில் ஒன்றில் ஏறி இருபது ரூபா கொடுத்து சில்லென்ற குளிர்காற்றுத் தொடர இரும்புப்பாலம் கடந்து மூன்று கிலோ மீற்றர் கிறவல் பாதையில் சென்றால் பள்ளிமுனைக் கிராமம் வந்துவிடும்.

இதைவிட்டு இலங்கைத் தேசப் படத்தில் பள்ளிமுனைக் கிராமத்தைக் கர்ணமாட்டர்கள், அடர்த்தியான மரத்தோப்புகளை போர்த்திக் கொண்டு அமைதியாக பசுமைக்குள் ஒளிந்திருந்தது பள்ளிமுனைக் கிராமம்.

பூமரச்சந்தியின் தொடக்கத்திலேயே பிரதேச சபைத் தேர்தலில் ஆரம்பகாலப் பரபரப்பு பூசியிருந்தது. முச்சக்கர வண்டி மூன்றிலும் சந்தியிலிருந்த நெய்னாரின் அஷ்ரப் ஹோட்டலிலும், சுவர்களிலும், பூமரத்திலும் இஸ்லாமியக்கட்சித்தலைவர் ஒட்டப்பட்டு புன்முறுவலுடன் மக்களைப் பார்த்துக், கொண்டிருந்தார்.

"ஒரே அமைப்பின் கீழ் ஒன்று படுவோம்"

"ஒரணி திரள்வோம்! பேரணி ஆவோம்"

பூமரத்தின் பாரிய கிளைகளில், "தங்கத்தலைவரே வருக" என்று தங்க நிறப்பதாகை மினுமினுத்தது. தலைவரின் விழிகளில் தரிசனம் தரக் காத்திருந்தது. தங்கத் தலைவர் இன்னும் வரவில்லை. மாலை ஐந்து மணியாகிவிட்டிருந்தது.

பள்ளிமுனைக்கு நுழையும் பாதை முகப்பில் பிரமாண்டமான ஈரானிய உயர தோரணம் மினாரா வடிவில் உயரே குவிந்திருந்தது. உச்சியில் தலைவர் பத்தடி உயரத்தில் கைகாட்டினார். கீழே "ஒரே மதம்! ஒரே கட்சி!! ஒரே தலைமை!!! அடுத்த வரியில், "தனித்துவம் காக்க வந்த தலைவரே வருக!.

மினாராவின் இருபுறமும் "பள்ளிமுனை ஜூம்ஆப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை" யைக் காவல் காத்துக் கொண்டு பள்ளி அதிகாரி, சந்தியிலிருந்து உள்ளே செல்லும் கிறவல் பாதை நெடுகவும் பச்சையும் மஞ்சளுமாக பொலித்தீன் கொடிகள் காற்றில் உற்சாகமாய் ஆடின. வாலிபர்கள் கட்சித் தொப்பிகளுடன் சைக்கிள் பேரணிக்காக தயாராய் இருந்தனர். பெண்கள் தங்கள் வேலைகளைப் புறந்தள்ளி தலைவருக்காக் காத்திருந்தனர். ஆராத்தி எடுத்து குரவை எழுப்ப மாதர் அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர். வெற்றிலை வாயுடன் கிழப் பெண்கள் "மகனாரு வரல்லியா இண்ணம்?" என்று அன்பு மீக்குற்று சைக்கிள் வாலிபரிடம் கேட்டனர்.

பள்ளிமுனை முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்கள் வெள்ளைத் தொப்பிகளுடன், கட்சிச் சிறுகொடிகள் அசைத்து அணியாய் அநியாயமாய் நிற்க வைக்கப் பட்டிருந்தனர். பக்கத்திலிருந்த மகாவித்தியாலய மைதானத்தில் ஊரே கூடிநின்றது. மைதானத்தைச் சுற்றியிருந்த மதிலில் ஏற்கனவே ஒட்டப்பட்டிருந்த வீர அஞ்சலிகள் மற்றும் இயக்க எச்சரிக்கை சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டு, இஸ்லாமியக் கட்சியின் தேசியத்தலைவர் படங்களால் வர்ணமடிக்கப்பட்டிருந்தது.

மூன்று இழுவைப்பட்டிகள் நிறுத்தப்பட்டு மேலே மஞ்சள், பச்சை வர்ணக் கூரை. உள்ளே ஜிகினா பளபளப்புக்கள், அலங்கார மேடை, மின்விளக்குகள், தலைவரின் பெரிய படம், "அஞ்சியும் வாழோம், கெஞ்சியும் வாழோம்" தேசியத் தலைவரே வருக! ப. நோ. கூ. சங்கம் பள்ளிமுனை... மேடையில் பல நாற்காலிகள்.. தலைவருக்கு மட்டும் பள்ளித்தலைவர் செய்லான் ஹாஜியார் வீட்டுச் சொகுசு சோபா.. ஒலிபெருக்கிகள் தென்னை மரங்களிலிருந்து கட்டிக் கீதம்... இடையிடையே பஸில்.. பஸில்.. பஸில்.. எலக்ரோனிக்... ஓயும்போதெல்லாம் நாகூர் ஹனிபா "நில்லுங்கள் . நிமிர்ந்து நில்லுங்கள்" என்றார். கேட்க ஆளில்லை. அனைவர் கவனமும் தலைவர் வருகை மீதிருந்தது.

பூமரச்சந்தியில் முக்கிய பிரமுகர்கள் நெய்னாரின் கடையில் சோடா குடித்து தலைவரை எதிர்பார்த்திருந்தனர். பள்ளித் தலைவர் செய்லான் ஹாஜியார் பூமரச்சந்திக்கும் மைதானத்திற்கு மிடையே தன் காரில் ஓடுபட்டுத்திரிந்தார்.

தலைவர் வந்ததும் சந்தியிலிருந்து ஊர்வலமாக இம்மேடைக்கு அழைத்துவர ஏற்பாடு. ஐஸ்பழ வண்டிகள் அத்தனை இரைச்சல்களுக்குமிடையே பூ.. பூவ்க் .. கென்றன. . பாபீஸ் வாகனத்தைச் சுற்றி ஏராளம் சிறுவர்கள் .. மைதானத்தில் ஆங்காங்கே கச்சான், கடலை கிழங்குப் பொரியல்களுடன் திடீர் கடைகள். ..

பெண்கள் தனிப்பகுதி அமைத்துக்

காத்திருந்தனர். மேடையில் ஒரே ஒரு ஆளாக முத்து முஹம்மது நின்று கொண்டிருந்தான். தலையில் கட்சித் தொப்பி.. மஞ்சள் பச்சைச் சேட்டுச்சாறன். கையில் புதிதாகக் கடிகாரம்.. மார்பில் தலைவரின் சிறிய படம்.. முத்து முஹம்மது ஒலிவாங்கியின் அருகே சென்றான். அதைப் பிடித்தான் "ஊ..வ்..ஊவ்.." என்று ஊதி, தன் குரலையும் மைக்கையும் சரிபண்ணி னான். சனங்கள் முத்து முஹம்மதை பார்க்க முத்து முஹம்மது பெருமை பொங்கி, தாடி மாஸ்டர் எழுதிக் கொடுத்து மனப்பாடம் செய்ததை மறுபடி அறிவித்தான்.

பேரினவாத விலங்கை உடைக்க வந்த உத்தமத் தலைவரும் முஸ்லிம்களின் இதய விளக்கும், தனித்துவம் காத்த தானைத் தளபதியும் இஸ்லாமியக் கட்சியின் தேசியத் தலைவருமான அல்ஹாஜ் எச். எம். ராவுத்தர் எம். பி. சட்டத்தரணி அவர்கள் இன்னும் சற்று நேரத்தில் இங்கு வருகை தரவுள்ளார்... அதுவரை பொறுமையுடன் இருக்க வேண்டுகிறோம். வஸ்ஸலாம்! இப்படிக்கு இலங்கை இஸ்லாமியக் கட்சி, பள்ளிமுனை இளைஞர் அணி.

முத்து முஹம்மதின் குரல் அடிக்கடி கேட்டது. ஐம்பத்தி மூன்றாவது தடவையாகவும் அறிவித்துவிட்டு பெண்கள் பகுதியை நோட்டமிட்டான். மைமுனாவும் வந்திருப்பாள் வெற்றிலைக்கிழவி சபூரா உம்மா .. குருட்டு மனிசி .. தாடி மாஸ்டர் பெண்சாதி.. ரைஹானா டீச்சர்.. நிசா மாமி.. கல்லூட்டுக்காரி.. கமறுன் குட்டி.. ஆலிமுட பெண்டி.. எங்கே மைமுனா..? சட்டென பீடா வியாபாரிக்கு இடப்புறமாக மைமுனா தெரிந்தாள்.

அட, மைமுனா வந்திருக்கறாள்.. நான் மைக்கில் பேசியதைக் கண்டிருப்பாள்.. முத்து முஹம்மது மைமுனாவைக்கண்டு பொங்கிய பெருமையுடன் மறுபடி ஒலிவாங்கியைப்பிடித்து, மறுபடியும் "ஊவ்..ஊவ்" .. பேரினவாத விலங்கை ...." ஐம்பத்திநாலாவது தடவை உடைக்க ஆரம்பிக்க, உடன் மைமுனாவும் அவளது தம்பி யாசீனும் மேடைக்கு அருகிலேயே வந்து நின்று முத்து முஹம்மதை அதிசயமும் ஆர்வமுமாக பார்த்தனர்.

"லாத்தா லாத்தோவ், முத்து முஹம்மது மச்சானப் பார்ஹோ. பீக்கருல பேசுராருஹோ..." என்று யாசீன் பெருங்குரலெடுக்க "சும்மாரர்ரா!" என்ற மைமுனா முத்து முஹம்மதை விசேஷமாகப் பார்த்தாள். நாணப்பட்டுச் சிரித்து கண்களால் பாராட்டினாள். முத்து முஹம்மதுக்குள் பரவசம் பாய்ந்தது.

திடீரென சனக்கூட்டம் பரபரத்து, கிறவல் பாதையில் தூரத்தே ஊர்வலம் தெரிந்தது. மொத்த ஜனமும் அல்லோல கல்லோலமாய் ஓடின. ஒரு எஸ்.ரி.எப். அதிரடிப்படை ஜீப் முன்னால் ஊர்ந்து வந்தது.. பின்னால் திறந்த டபிள் கப் வாகனத்தில்... தலைவர்! எழுந்து நின்றபடி கையசைத்து மந்தகாசமாய் புன்னகைத்தபடி வந்தார். மாலைகள் அணிந்திருந்தார்.. சிவப்பு ரீ சேட்டும் கறுப்பு லோங்கிஸும் அணிந்து வெகு கம்பீரமாக இருந்தார். மக்களுடன் மயக்கமாகச் சிரித்து.. மேலும் மாலைகள் வாங்கி பக்கத்திலிருந்த உதவியாளரிடம் கொடுத்தார்.

ஜனங்கள் நெஞ்சமெலாம் பூரிக்க, வாகனத்துடன் ஓட்டி ஓடி வந்தனர். ஒஸ்தாதுமார்கள் கற்பனை எதிரியுடன் சுருள் வாள் சீனடி சிலம்படிப் போரிட்டு வந்தனர்.

வருக வருக எங்கள் தலைவர்
வருக வருகவே .....

அண்ணாவியாரின் புராதான துள்ளிசைக்கேற்ப மல்லர்கள் பொல் லடித்தடி கோலாடி வந்தனர். .. தொடர்ந்து மெதுவான சைக்கிள் பேரணி.. ஊர்வலம் மைதானத்தை அண்மித்ததும், உடன் பத்து நிமிட நேரத்திற்கு சீன வெடிகள் பிளந்து கட்டின... வெடியோசை முடிய உடனடி உச்சஸ்தாயியில் பெண்களின் குரவை ஒலி எழுந்தது.

மாதர் அணி ஆராத்தியுடன் எதிரே வர -

தலைவர் "சட்"டென வாகனத்தை நிறுத்தி ஒரு துள்ளலுடன் இறங்கினார். ஜிகினாத் துகள்கள், பல்லிமுட்டாய், மலர்கள் சொரிய மத்தாப்பு வர்ணப் பூச் சொரிய, குரவைக் கூக்குரலுடன் பெண்கள் தலைவரைச் சூழ்ந்து ஆரத்தி எடுத்தனர்.

வாள் வீசிய ஒஸ்தாதுகள் ஒதுக்கப்பட்டனர். பொல்லடி மல்லர்கள் தள்ளப்பட்டனர்... ஜனங்களின் உணர்ச்சிப்பிரவாகத்தில் தலைவர் நடக்க முடியவில்லை. உடன் அதிரடிப்படையினர் கூட்டத்துள் பலவந்தமாய்ப் புகுந்து கேடயமாய்ச் சூழ்ந்து பாதை அமைத்தனர். மேடை அண்மித்ததும் தலைவர் விரைவாக ஏணிகளில் ஏறி வந்தார். இதோ.. கண்ணெதிரே தலைவர்!.

முத்து முஹம்மது, மைமுனாவை மறந்து, தலைவரால் உடனடி பரபரப்பாகி ஒலிவாங்கியில்.-

"இதோ எங்கள் அடிமை விலங்கொடித்த தானைத்தளபதி.. எங்கள் இதயக் கனி.. பாராள வந்த போராளிகளின் தலைவர்.. இலங்கை இஸ்லாமியக் கட்சியின் தேசியத் தலைவர் அவர்கள் வந்துவிட்டார்கள்... "நாரே தக்பீர்... நாரே தக்பீர்.... என்று கத்த அனைத்து ஜனங்களும் உணர்ச்சி மாத்திரை உட்கொண்டு அல்லாஹூ அக்பர்" என்று விண்ணதிர வைத்து மயிர்க்கூச்செரிந்தனர்.....

மேடையில் ஏறிவிட்ட தலைவர் உடன் முத்து முஹம்மதைக் கூர்மையாகப் பார்த்தார். அவனது உணர்வையும் அவனது மார்பிலிருந்த தன்னையும் பார்த்து புன்னகைத்தார். அவனது தோளில் தட்டி "தம்பி! எப்படி?" என்றார். முத்து முஹம்மதுக்குள் அயிரம் மின்னல்கள் வெடிக்க, ஆனந்தப்பரவசமாகி உடன் தலைவரின் கைகளைப் பிடித்து கொஞ்சி முத்தமிட்டான். மேலும் தழுவுவதற்கிடையில் ஒரு அதிரடிப்படை வீரன் இடையில் புகுந்து முத்து முஹம்மதுவைப் பிரித்துத் தள்ளிவிட்டான்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரிலிருந்து ஒரு துண்டுப் பிரசுரம்!

அன்பார்ந்த தமிழ்ச் சகோதரர்களே!

தமிழ் முஸ்லிம் உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தமிழுக்கு எத்தனை வயதோ தமிழ் முஸ்லிம் உறவுக்கும் அதே வயதுதான். புலிகள் யாருக்கெதிராக துப்பாக்கியைத் தூக்கினார்களோ அந்தத் துப்பாக்கிகள் முஸ்லிம்களுக்கெதிராகத் திருப்பப்பட்ட போதுதான் எமக்குள் பகைப் புலமை வெடித்தது. எமது உறவு வெட்டி வீழ்த்தப்பட்டபோது, சுட்டுப் பொசுக்கப் பட்டபோது துடிதுடித்துப் போனவர்கள் அப்பாவித் தமிழ், முஸ்லிம் மக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

1985 ஆண்டு சகோதரர் கலீல் என்பவரை மின்சும்பத்தில் கட்டிவைத்துச் சுட்டுக் கொன்றது தொட்டு குடும்பத் தோடு படுத்துறங்கிய பீடி முதலாளி அப்துல் மனாப் என்பவரை தனது வீட்டுக்குள்ளேயே சுட்டுத் தள்ளி இரத்த வெள்ளத்தை ஏற்படுத்தியது முதல் கூலித் தொழிலாளிகள் பலரை எரித்துப் பொசுக்கிக் கொன்று குவித்தது வரை பல நூற்றுக் கணக்கான மூதூர் முஸ்லிம்களை தமிழர்களின் விடுதலைப் போராட்டப் பாதையில் பறிகொடுத்துள்ளோம்.

இதன் முற்றுமோர் வடிவமாக 2003.03.31 ஆந் திகதி சம்பூர் பகுதிக்கு வியாபார நோக்கத்துக்காக சென்ற முகம்மது நயீம், முகம்மது ஜாபீர் என்ற குடும்பஸ்தர்களை புலிகள் பிடித்து வைத்துச் சித்திரவதை செய்து வருகின்றனர். இதனை நேரில் கண்ட நேயமுள்ள பல தமிழ் சகோதரர்கள் சொல்லியிருக்கின்றனர். வன்னிக்கு, அடுத்தடியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகவும் பெருந்தளமாகவும் சம்பூர் விளங்குகிறது. இந்தக் காரியத்தை புலிகள் செய்யவில்லையானால் புலிகளுக்கும் மேலான ஒரு ஆயுதக் குழு சம்பூரில் இருக்கிறதா? என்ற கேள்வி எழும்புகின்றது. இராணுவமும், சிங்கள, முஸ்லிம் மக்களும் முற்றாக இல்லாத சம்பூர் பகுதியில் புலிகளைத் தவிர வேறு எந்தச் சக்தியும் இவர்களைக் கடத்த எந்த வாய்ப்பும் இல்லை.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் தமிழர்கள் எல்லாவிதமான வியாபாரமும் செய்ய எல்லா உரிமையும் இருக்குமாக இருந்தால், முஸ்லிம்கள் தமிழ்ப் பகுதிக்குள் வியாபார நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என்று கூறுவது தாமமாகுமா? தமிழர் பகுதிக்குள் பொருட்களை வாங்கச் சென்றது, முஸ்லிம்களுக்கு குற்றமென்றால், பொருட்களை வாங்க வாருங்கள் என்று அழைத்து அதை விற்க முயன்றது தமிழர் தரப்பினது குற்றமாகாதா?

புலிகளது காட்டுத் தர்பார் ஆட்சியில் இது குற்றமென்றால் பிடிபட்டவர்கள் இன்ன குற்றம் செய்திருக்கிறார்கள், இவர்களுக்கு இத்தனை மாதச் சிறை, இத்தனை ரூபாய் அபராதம் என்று குற்றம் சுமத்தியாவது முஸ்லிம்களுக்குத் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.

பிடிபட்டவர்களது தாய்மாக்கள் யாருடைய காலைப் பிடிக்கக் கூடாதோ அவர்களுடைய கால்களைக் கட்டிப் பிடித்துக் கதறினார்கள். ஒரு முறை மட்டும் காட்டுங்கள் இவர்களைக் கொன்றிருந்தால் இவர்கள் அடக்கப்பட்ட இடத்தையாவது காட்டுங்கள், மையித்தை தோண்டி எடுத்துச் செல்கின்றோம் என்று நினைவிழந்து கீழே விழும்வரை கத்தினார்கள். இதற்குப் புலிகள் சொன்ன பதில் என்ன தெரியுமா? இவர்களை நாங்கள் பிடிக்கவில்லை, சிலவேளை கண்ணன் என்பவரது படையணி பிடித்திருக்க வேண்டும், அதில் நயீம் என்பவர் ஓடிச் செல்ல முயன்றிருப்பார். அவருக்கு ஏதாவது இவர்கள் செய்திருப்பார்கள்.இதை ஜாபீர் பார்த்திருப்பார், இவரை விட்டால் நடந்ததை வெளியில் சொல்லிவிடுவாரோ என்ற பயத்தில் இவருக்கும் ஏதாவது செய்திருப்பார்கள் என்று பொறுப்பில்லாமலும் குதர்க்கமாகவும் கூறியுள்ளனர். மூதூர் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் பலமுறை திருமலை, சம்பூர், வன்னி என்று புலிகளின் பொறுப்பாளருடன் தொலைபேசி மூலம் பேசிய போது இப்படி யானவர்களை நாங்கள் பிடிக்கவில்லை என்று கூறுகின்றனர்.

அன்பார்ந்த தமிழ் சமூகமே!

இப்போது தமிழர்களை முஸ்லிம்கள் கடத்தவில்லை. முஸ்லிம்களைத்தான் தமிழர்களது ஏக பிரதிநிதிகளான புலிகள் கடத்தி இருக்கிறார்கள். 13 நாட்களாக பொறுமை காத்திருக்கிறோம். புலிகள் இதுவரையும் காத்திரமான எந்த பதிலையும் சொல்லாமல் மௌனமாக இருக்கிறார்கள்.

தமிழர் சமூகம் "வைரங்கள் வைக்க வேண்டிய பாத்திரத்தில் உப்புக்கல்லை வைத்திருக்கிறது." இது தமிழ் முஸ்லிம் உறவை அரித்துச் செல்லுமே தவிர வளர்த்தெடுக்காது என்பதைத்தான் கடந்தகால, நிகழ்கால செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகிறது.

நேயமுள்ள தமிழர்களே! கொஞ்சம் சிந்தியுங்கள். பெரும்பான்மை சமூகம் தமிழர்களது நியாயமான கோரிக்கைகளைப் புறந்தள்ளி நகர்த்தியபோது அதை வேதனையோடு நோக்கியவர்கள் நாங்கள். உங்களது போராட்டம் படர்ந்து வளரவும் உயர்ந்து ஓங்கவும் உணவும், பணமும் வழங்கி முஸ்லிம்கள் அதற்கு கொழும்பாக இருந்தவர்கள். எங்களது முதுகுகள் மேலே படர்ந்து வளர்ந்த நீங்கள் எங்களையே அழிக்க முற்படுவதை எண்ணி வேதனைப்படு கிறோம். பெரும்பான்மை சமூகம் அடக் கியதைவிட புலிகள் முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கி அழித்து நாசமாக்கி பாசிச வெறியாட்டம் நடாத்த முயலுவது மிகப் பெரிய அடக்கு முறையாகும்.

யுத்த நிறுத்த சமாதான சூழலிலும் முஸ்லிம் சகோதரர்களை புலிகள் கடத்துகின்றார்கள், அவர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டால் முஸ்லிம்கள் மீது பாசிச வெறியாட்டம் நடாத்து வதற்குக் கூட தயங்கமாட்டார்கள். எனவே, தமிழ் சகோதரர்களே! புலிகள் பிடித்துச் சித்திரவதைக் கூடங்களில் வைத்துள்ள இரண்டு முஸ்லிம் குடும்பஸ்தர்களையும் விடுவிக்க நாங்கள் எடுத்த எல்லா முயற்சிகளும் கைகூட வில்லை. தமிழ் முஸ்லிம் உறவை விரும் பும் தமிழர் நல்லுள்ளங்கள் இணைந்து புலிகளின் பிடியிலுள்ள இருவரையும் மீட்க முயலுமாறு. வினயமாக வேண்டுகின்றோம்.

"சத்தியத்தை அழித்து வாழ்வதை விட
நாம் அழிந்தாவது சத்தியத்தை வாழவிடுவது மேல்"

சோழக்காட்டு சோழியன்

சொல்லன்பன் நசிறுதீன்

போர் மேகம் ஓய்ந்து கார் மேகம் களை கட்டத் தொடங்கி பூமி பசுமையால் பச்சை ஆடை கட்டத் தொடங்கியது. தெருவோரக் காப்பரன்களில் அத்துமீறிப் படர்ந்த கோவங் கொடிகளை எருக்கள் பசியாறிக் கொண்டிருந்தன. வெடிச்சத்த இரவுகளால் விடிந்து பழகிய ஒவ்வொரு பொழுதுகளும் பட்டாசு வெளிச்சத்தால் அந்திகளை அலங்கரிக்கத் தொடங்கியிருந்தன.

துவேஷங்களால் ஆவேசங் கொண்டு தீவை தீயால் எரித்த ஆக்கிரமிப்பாளர்களும் மேலாதிக்க உணர்வுள்ளவர்களும் ஒப்பந்த நீருற்றி ஓய்ந்திருந்தனர். துப்பாக்கி தூக்கிய தூர்ப்பாக்கிய தோள்களுக்கு மலர் மாலைகள் கலர் கலராய் குவியத் தொடங்கின. அகதி முகாம்களில் அகதி வாழ்க்கையை அனுபவித்தவர்களுக்கு விடுதலை கிடைத்த மகிழ்ச்சியில் அழிந்து போன இருப்பிடங்களைத் தேடி அலை அலையாய் அலைந்து, தடயங்களால் இடம் கண்டனர்.

காட்டாறுகள் கரை புரண்டு கடலோடு கை குலுக்கிக் கொள்ளும் மாரிகால மழையில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை விவசாயிகளான அகதி முகாம் அனாதைகள் அடிப்படை வசதிகளைக் கூட இழந்த நிலையில், பல வருடங்களாக பாழடைந்த அவரவர் பூமிகளுக்குள் முளைத்திருந்த பொட்டல் காடுகளில் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தனர். இடுப்பைச் சுற்றியிருந்த நூலில் சிறு வால் தொங்கிக் கொண்டிருக்க வயதான அபுசாலிக்காக்காவின் தலையில் கவிழ்ந்திருந்த பன் தொப்பியில் மழைத்தூறல் மத்தளம் கொட்டி களைத்தவரின் காதுவழியே கீதம் பாடியது. காட்டுக் கொள்ளியில் கொதித்த நன்னாரித் தேனீரை கூட்டுக் குடிலுக்குள் தயாரித்த மனைவி சாரா, ஆவி பறக்கும் தேனீரை சிரட்டையில் ஊற்றியபடி.

"புள்ளடவாப்பா புள்ளட வாப்போ" கணவனை அழைக்கும் குரலோடு தலையையும் சற்று வெளியே நீட்டிப் பார்த்தாள். முறுக்கேறிய முதுகினில் மழை சறுக்கிக் கொண்டிருந்தது. மனைவியின் மயக்கமான குரல் கேட்டு மண்ணில் கொத்திய மண்வெட்டியை எடுக்க மறந்தவராய் வெறுங்காலோடு வேக நடையில் வரும் கணவனை மனதால் ரசித்தபடி அவளும் தேனீரை ருசித்தபடி.

"விட்ட விடியங்காட்டில விடிஞ்சி ஒழும்பி பல்லும் தீட்டாம பச்சத் தண்ணியும் குடிக்காம மண்ணக் கொத்தினா பயிரு பச்ச நல்லா வெருமா? அடுப்புக் கரியெடுத்து பல்லத்தீட்டி தேயிலை யாகுதல் குடிங்க. காலப் பசி மூலக் கொதியாம்"

செல்லமாய் கடிந்த மனைவியின் சிரட்டைத் தேயிலை குளிருக்கு இதமாக இருக்கும் போது, காலை நேரத்தூறலுடன் காற்று வாலைச் சுருட்டி வீச ஆரம்பித்தவுடன், தம்பதிகளைத் தாங்கி இருந்த குடில் நாட்டிய மாடி சாரல் உள்ளே நுழைந்ததும் உள்ளே இருந்தவர்கள் ஆரவாரப்பட்டு சற்று நெருக்கமான போது, மின்னலும் முழக்கமும் தம்பதிகளை சுயநினைவுக்கு கொண்டு வந்தன.

வரட்சியால் கருகிக் கிடந்த மேட்டு நிலப் பூமிகளில் புரட்சி செய்த மாரி மழை, மண்ணை பொன் விளையும் பூமியாய் பூரிக்க வைத்துக் கொண்டிருந்தது. பல வருட காலம் பராமரிப்பு இன்றி பாழடைந்து கிடந்த நில புலன்களை, அகதிகளாய் அலைந்து வாழ்வு சீர்குலைந்து விவசாயிகள், யுத்தம் ஓய்ந்த ஒப்பந்த சத்தத்தில் தத்தம் இடங்களை நித்தம் கொத்தி அவரவர் இடங்களை செப்பனிட்டு சேனைப் பயிர் செய்வதற்காக யானைப் பசியும் பட்டினியுடனும் குடும்பங்களாக குடியேறி கொத்தத் தொடங்கினர்.

நாட்டி நிறுத்திய காட்டுக் கம்புகளில் வாட்டிப் போர்த்திய இழுக்குக் குடிசைகள் பாதாவில் முக்காட்டிடு கூப்பிடு தூரத்துக்கொரு கூடாரமிட்டுக் கொண்டு அவரவர் இடங்களுக்கு எல்லையிட்டு அகதி முகாம் தொல்லைக்கு முடிவு கட்டியிருந்தனர்.

இருள் நிறைந்த ஆகாயம் அருள் சுமந்து பன்னீர் தெளிப்புடன் பூமியைப் பதப்படுத்தும் வேளையில் பன்னீர் தெளிப்புடன் பூமியைப் பதப்படுத்தும் வேளையில், பரனுக்குள் அபுசாலி தம்பதிகள் தூறல் ஓயும் வரை தேயிலைச் சாறுடன் வெளிப் புளுத்து இயற்கையின் வேடிக்கையுற்றனர்.

ஒற்றையாய் உயர்ந்த மலையைச் சுற்றிலும் பற்றையாய் வளர்ந்த காடுகளில்

கொடிகள் கோலமிட்டு கனியுண்ணும் பறவைகளுக்காய் காத்திருந்தன. அன்று சோழக் குலைகளைக் கொத்தித்திரிந்த சோலைக்கிளிப் பட்டாளம் இன்று சோடிக் கிளிகளாய் சொந்தங்களைப் பெருக்கி வட்டமிடும் கட்டத்தில், மண்ணகத்திற்கு மழைத்தானம் செய்த விண்ணகம் விரைந்திருக்க... இயற்கையின் எழில் மிகு மந்தார நிகழ்வுக்குள் முறைத்திருந்த கணவனை.

"எண்ணங்க! கட்டிய பொண்டாண்டி ஒட்டிக்கிட்டு இரிக்காள் நீங்க வெட்டிய காட்டில பட்டியல் போட்டுக்கிட்டு இரிக்கீங்கள்" தாரத்தின் உசுப்புதலால் மனதின் பாரம் குறைந்து சுயநினைவுக்கு வந்த கணவனிடம்.

"மழ கொறஞ்சிரிக்கிறாப் போல கெடக்கு. மளமளவெண்டு கொத்துங்க. நாண் போய் பள்ளத்து வரலைக்க பொன்னாங் காணி எலக்கறி கிள்ளிக் கிட்டு வடிச்சல் ஓடைக்க பொடியான் மீனும் புடிச்சிக் கிட்டு வாரன். எத்தின வரிசமாச்சி இந்தக் கறி யெல்லாம் திண்டு. அவனுகள்ற அகதிமுகாம் பருப்பத்திண்டு நாக்கு நாசோட ஒட்டிட்டு! பகலைக்கி சுடச் சுட ஆக்கித் தின்பம்.

என்றபடி நாப்பது வயது நரையுடன் மழைக்கான தற்பாதுகாப்பு பொலித்தீனை கையில் பிடித்தபடி கணவனின் அனுமதிக்குக் காத்திராமல் பாத்திரங்களோடு பதுங்கத் தொடங்கிய மனைவியை, "புள்ளே. வரக்குள்ளே பூவலுக்க தண்ணி புடிச்சிக்கி வாங்க நாட்டுச் சோழக் கொட்ட இழகப் போடுவம்"

திரும்பாமல் படியிறங்கிச் செல்லும் மனைவியிடம் கரும்பான கட்டளையை அவள் காதுவரை ஒலித்துவிட்டு, குடிலுக்குள் இருந்தபடியே மண் வெட்டியுடன் வெளியே வந்தவர் கண் எட்டியவரை ஆகாயத்தை அளந்து ஆராய்ந்து இழந்த வாழ்வை எட்டிப் பிடிக்கும் மனதினால்.

"இந்த வரிசம் நெறைஞ்ச மாரி மழையாத்தான் இருக்கும் போல" என்று முணுமுணுத்துக் கொண்டு பகமைப் புரட்சிக்கான வேகத்தில் பசியையும் பாராமல் ஈரமண்ணை இரக்கம் பாராமல் வெட்டிப் புரட்டும் போது உதவியாக ஒட்டிக் கொண்டு இருப்பவள் கட்டிய மனைவி சாரா மட்டுமே! குடும்பத்தின் ஏங்க தாங்கல்களுக்கு ஈடுகொடுத்து உதவியும் ஒத்தாசையாகவும் இருந்த மக்கள் இன்று...

அபுசாலியின் விழிகளில் பெருக்கெடுத்த நீர்த் துளிகளினால் பாரவையில் பிரகாசம் குறையும் போது உ[illegible]

மறைத்திருந்த காரிருள் மேகங்கள் மெல்ல மெல்ல திரை நீக்கம் செய்து கொண்டிருக்க... அபுசாலியின் இதயத்து சந்திரனில் படிந்திருந்த கடந்த கால கறைகளை நினைவுச் சுரப்பிகள் உறிஞ்சி அசை போடத் தொடங்கின.

போராட்டத்திற்கு உயிர்கள் வித்தாகிக் கொண்டிருந்த காலகட்டத்தில், வழி இரண்டாக இருந்த போதிலும் மொழி ஒன்று என்பதால் தனது குடும்பத்தின் வறுமைச் சூழலுக்குள் போராடிக் கொண்டிருந்த இரண்டாவது மகன், அடிமைச் சூழலுக்குள் கொடுமைப்பட்ட தமிழ் மொழியின் விடுதலைப் போராட்டத்திற்காக சகோதர இனத்தினரோடு தன்னையும் இணைத்துக் கொண்டு போராடி மண்ணுக்கு வித்தான அபுசாலியின் சொத்தான இளைய மகனின் இழப்பால் ஏழைக் குடும்பம் விடுதலை இயக்கங்களுக்கு துடுப்பாக செயல்படுவதை இரகசியமான முறையில் துப்புத் துலக்கிய அரசாங்கத்து படைகள் விசாரணை என்ற பெயரில் சேனையில் புல் கொத்திக் கொண்டிருந்த மூத்த மகனை கத்தக் கதற இழுத்துச் சென்று இந்த நிமிடம் வரை மகனின் முகம் காணாமல் இதயம் பொத்தல் விழுந்ததுடன், விவசாயத்தில் ஒத்துழைப்பும் குடும்பத்தின் உணவுக்கான வருவாயில் தடையும் ஏற்பட்டு வறுமை பொறுமையை சோதிக்கத் தொடங்கின.

துணிவுடன் துணிவியாபாரத்திற்காக துவிச்சக்கர வண்டியில் தனிமையில் சென்ற தனது ஒரே மகளின் மாப்பிள்ளையை வியாபாரப் பொருள்களோடு கடத்தி வைத்துக் கொண்டனர்.

பணயக் கைதியாகப் பிடிபட்ட அபுசாலியின் மாப்பிள்ளையை மீட்பதற்கு பணமின்றி பலியான போது, சேனைகளிலும் எல்லைப்புற கிராமங்களிலும் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திற்குட்பட்ட அன்றாடம் பிழைப்பு நடத்துபவர்களும் பயம் காரணமாக அகதிகளாய் வெளியேறியவர்களில் அபுசாலியும் ஒருவர்.

அத்தனை வருடகால நரக வாழ்கை அனுபவத்தை எத்தனை யுகம் கழிந்த போதிலும் மறக்கவும் முடியாமல் அசைபோடவும் முடியாமல் தனிமை நேரங்களில் அபுசாலி தத்தளிக்கும் போது.

"எண்ணங்க ஓலகத்த மறந்த கலக்கத்தில குந்திக்கிரிக்கீங்க" செவிப்புலனுக்குள் ஊடுருவிய சில்லறை சத்தத்தால் பக்க வாட்டில் தலையை தனியாகத்திருப்பியதும், நினைவுகளுக்கு தூண்டில் இட்ட அபுசாலியின் கனவு தேவதை பகல் கறிக்கான கீரையும் ஆத்து மீனுமாய் வந்து கொண்டிருந்தாள். வாழ்க்கையில் இருக்கும் ஒரே பிடிப்பு இவள் மட்டும் தான் என்று தனது மனதிற்குள் சாராவை நினைத்துக் கொண்டார் அபுசாலி.

ஷெல் மழை பொழிந்து சேதமான தேசத்தில் நிர்ப்பந்த சமாதான ஒப்பந்தத்தால் சில்லென்ற சீரான குளிர் மழை பெய்து இறுகப் போர்திய ஆடைக்குள் சோழக் குலைகள் அறுவடைக்குத் தயாராகிக் கொண்டிருந்தன.

அகதி முகம்களில் அனாதைகளாய் ஆதரவற்றவர்களாய் உலா உணவுக்காக

சிறுகதை

பலபேரின் படித்தரங்களில் பார்வையால் இயலாமையை வெளிப்படுத்தி அடங்கி ஒடுங்கி அடிமையாய் கிடந்த விவசாயிகள் மனதில் சுதந்திரமாய் உழைத்த திருப்தியில் புன்னகை பூத்து அறுவடைக்கான நாளைத் தெரிவு செய்ததுடன், குறித்த தினத்தில் பாத்திகா ஓதி ஒட்டு மொத்த விவசாயிகளும் அறுவடைக்கு தயாரான போது, கட்டக்கால் றவுசரும் வட்டக் கழுத்து ரீசேட்டும் அணிந்து ஹீரோ ஹொண்டா பைசிக்கலில் மிடுக்காக வந்திறங்கிய இரண்டு இளைஞர்களில் ஒருவரின் கையில் ஆவணங்களைப் வைத்திருந்தார். அறுவடைக்குத் - தயாராக கும்பலாக நின்ற விவசாயிகளுக்கு தலை கால் புரியாத சந்தோஷத்திற்கான காரணம் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அதிகாரிகளென நினைத்து புன்னகையுடன் வரவேற்றவர்களை நெருங்கிய இளைஞர்களில் ஒருவர் வாய்க்குள் சிறைப்பட்ட சுவிங்கத்திற்கு விடுதலை வழங்கி விட்டு, "ஆங், மொத்தம் எத்தின பேர் இதில சேனப்பயிர் செய்கிறீங்க" பார்வையை பைலுக்குள் புதைத்துக் கொண்டதும், விவசாயிகள் ஒருவருக்கொருவர் முணு முணுத்துக் கொண்டிருக்கும் போது, "தம்பி இந்த அடப்புல அகதி முகாமிருந்து வந்த பதினெட்டுப் பேர் கெடக்கம்" காவிபடிந்த குறைப் பற்களோடு குனிந்து நின்ற அபுசாலியிடம்.

"காக்கா! இந்த மண்ணின் விடுதலைக்காக உயிரைப் பணயம் வைத்து எங்கட பொடியன்கள் போராடினதால விடுதல கெடச்சி சமாதானம் மலந்திடிச்சி. ஆனா சீரழிஞ்சி சிதறிக் கெடக்கிற நிர்வாகத்த சீரசெய்கிறதிற்காக அவரவர் செய்கிற தொழில்ல இருந்து ஒரு தொகைய ஒதுக்கித்தான் ஆகணும். இது மேலிடத்து உத்தரவு" என்றபடி ஆதிக்க உணர்வுடன் பில் கொடுத்தான் இளைஞன். தொகை போட்டு எழுதியிருந்த பில்லைப் பார்த்து ஏளனச் சிரிப்புடன் ஏனைய விவசாயிகளைப் பார்க்கும் போது அவர்கள் இதற்கு உடன்பாடு இல்லாதவர்கள் போல ஏற்கனவே சோழம் முறிக்க ஆரம்பித்திருந்தனர். வயதான காலத்திலும் எதிர்காலம் பற்றி சிந்திக்கத் தொடங்கினார் அபுசாலி.

(முற்றும்)

மருதமுனையிலிருந்து மருதமுனை மக்கள் அமைப்பால் சேகரிக்கப்பட்ட, 5 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் உடுதுணி வகைகள் மூதூர் அறபுக் கல்லூரி அதிபரிடம் மருதமுனை மக்கள் அமைப்பின் சார்பாக கையளிக்கப்பட்டன.

படம்: *அகாஷா*

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 180/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 360/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 720/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

சாசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்க லாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடி யாக கையளிக்கலாம். காசுக் கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslimkural Publication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

அல்லாஹுஅக்பர்

நெஞ்சில்
ஈமான் ஒலிமுழங்க
நிமிர்ந்து நில்லுங்கள்
நாம்
இன்று இருப்பது
நவீன கர்பலாவில்
உங்கள்
பாதச்சுவடுகள்
முன்னால் பதிந்து
முன்னேறட்டும்
பின்னோக்கிச்சென்றால்...
நம்
வரவாற்றுக் கிரீடத்திற்கு
மாசு படிந்து விடும்

முதலில்
உங்கள் வாழ்வுடலை
தியாக ஹெளளில்
வுளூச் செய்து
தக்வா ஆடையை
அணியுங்கள்
அப்போதுதான்
எம் பாதப்பதிவுகள்
தீன் போஷாக்கினால்
உரமேறும்

தலைமைப் போர்வையுள்
ஒளிந்திருந்து
தன்மானக் கரங்களுக்கு
விலங்கிடமுனையும்
சமூகத் துரோகிகளின்
கால்களையும் கட்டிவைத்து
முன்னேறுங்கள்

ஜாஹில் சமூகத்தின்
அசுத்தக் கும்பல்களின்
விஞ்ஞான ஆயுதத்தை
விஞ்சுமாயுதம்
எமது
குரல்களி லொலிக்கும்
தக்பீர் நாதம்தான்
முன்னேறுங்கள்

கர்பலாக் களத்திற்கு
அடிக்கல் நாட்டிய
வீர வுஸைனாரின்
தீரத்தியாகங்களை
எமது
எழுச்சிகளுக்கான
விதைகளாக்குவோம்

-மருதூர் ஜமால்தீன்

முதலாவது சமாதான கிராமம் பொலன்னறுவையில் அமைக்கப்படும்

இலங்கையில் வதிவிடமின்றி கஷ்டப்படும் குடும்பங்களுக்கான முதலாவது சமாதான கிராமம் பொலன்னறுவையில் (இலுக்பிடிய) பகுதியில் உயாமட்ட வியாபார பெண்கள் ஒற்றுமை அமைப்பு கட்டுவதென முடிவு செய்துள்ளது.

வெளிநாட்டு உதவிகளின் மூலமே இக்கிராமத்தில் 100 வீடுகள் கட்டப்படும். ஒரு வீட்டுக்காக 50,000 ரூபா செலவு செய்யப்பட விருப்பதாக அந்த பெண்கள் அமைப்பின் தலைவா ஜானகி குணவாதன கூறியுள்ளார். வெளிநாட்டிலுள்ள நன்கொடையாளர்கள் உட்பட சாவ தேச வியாபார தொழிற் சங்கத்தின் உதவியுடன் இதுவரை 5 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதே போன்றே எஞ்சிய வீடுகள் கட்டப்பட இருப்பதா கவும் நீர்பாசன வசதி உட்பட சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தங்களுக்கான பொறுப்பை புலிகள் ஏற்பதில்லை!

-எம்.எல்.எம். அன்ஸார்.

கடந்த 31.03.2003 ஆம் திகதியன்று மூதூரைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் குடும்பங்கள் சம்பூர் என்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு ஊரில் வைத்து கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள். சம்பூர் கிராமத்தைச் சேர்ந்த சாதாரண தமிழ் மக்கள், முஸ்லிம் நபர்கள் விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதைக் கண்டு மூதூர் மக்களிடம் தெரிவித்துமுள்ளனர். ஆனால், புலிகள் இக்கடத்தலுக்கும் தங்களுக்கும் எதுவிதத் தொடர்புமே இல்லையென்று இன்றுவரை பலமாக மறுத்தே வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தாங்கள் செய்த வன்முறைகளை மறுப்பதும், பின்னர் பல ஆண்டுகள் கழித்து அவற்றை ஏற்றுக் கொள்வதும் முஸ்லிம்கள் விடயத்தில் பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளன.

1990 ஆம் ஆண்டு காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளி வாயல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்களை புலிகள் சுட்டும், கிரணைட் வீசியும் கொன்றனர். இச்சம்பவத்தை உடனடியாக மறுத்த புலிகள் அரச படைகளின் மீது பழியைப் போடவும் முயன்றனர். உச்ச கொடூரமான இச்சம்பவத்தை புலிகள் ஏற்றுக் கொள்ள நான்கு ஆண்டுகள் சென்றன. 1994 ஆம் ஆண்டு புலிகளின் அப்போதைய சாவதேசத் தொடர்பாளர் திலகர், பிரான்ஸில் வைத்து அந்நாட்டு தொலைக்காட்சிப் பேட்டியொன்றில், கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் இக்கட்டான சூழ்நிலையில் பள்ளிவாயலில் சுட்டதை ஒப்புக்கொண்டார்.

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் புனித ஹஜ் கடமையை முடித்து விட்டு கொழும்பிலிருந்து கல்முனை மார்க்கமாக காத்தான்குடிக்கு ஊதிரும்பி வந்து கொண்டிருந்த ஹாஜிகள் உட்பட 75 க்கும் மேற்பட்ட முஸ்லிம்களை (இதில் பெண்கள் - வயோதிபர்களும் அடங்கும்) அம்பிளாந்துறைச் சந்தியிலும், கிரான்குளத்திலும் வைத்து விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று கொன்று குவித்தனர். இதனையும் அப்பிரதேச தமிழ் பொதுமக்கள் நேரில் கண்டு காத்தான்குடி வாசிகளுக்கு தகவல் தந்தனர். ஆனால் இவ்வன்முறையை புலிகள் "தாங்கள் செய்யவில்லை" என்று மறுத்ததோடு, மாற்றுத் தமிழ்க் குழுக்களின் மீது பழியைப் போடவும் முயற்சி செய்தனர். மட்டக்களப்பு

அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் கரிகாலன் 1996 ஆம் ஆண்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் இச்சம்பவத்தை பொய்க் காரணங்கள் கூறி நியாயப்படுத்தி ஒப்புக் கொண்டார்.

1990 ஆம் ஆண்டு ஏறாவூரில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் பெண்களையும், வயோதிபர்களையும், பச்சிளம் பாலகர்களையும், காப்பிணிகளையும் விடுதலைப் புலிகள் வாளால் வெட்டியும், பொல்லால் அடித்தும், சுட்டும் கொன்றனர். இச்சம்பவத்தையும் மறுத்த புலிகள் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து இதை ஒப்புக் கொண்டனர். முஸ்லிம் ஆயுதக் குழுவொன்று தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த காரணத்தினாலேயே ஏறாவூரில் தாக்குதல் நடத்தியதாகவும். இத்தாக்குதலை அப்பாவி முஸ்லிம்கள் மீதல்லாமல், ஆயுதம் தரித்த முஸ்லிம் ஊர் காவல் படையினர் மீதே தாக்குதல் மேற்கொண்டதாகவும் புலிகள் உண்மைக்குப் புறம்பாகக் கருத்துத் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டு வடமாகாண முஸ்லிம்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட போதிலும் அதைத் தாங்கள் மேற்கொள்ளவில்லையென புலிகள் சாவதேச சமூகத்துக்குக் காட்ட முற்பட்டனர். பின்னர் வடமாகாண முஸ்லிம்களை வெறியேற்றியது சரியானது என்பதை நிரூபிக்கவும் புலிகள் கடும் பிரயாசைப்பட்டனர். இரண்டு செயற்பாடுகளும் வெற்றியளிக்காத நிலையில் இறுதியில் 1993 அல்லது 1994 ஆம் ஆண்டு "யுத்த சூழலுக்குள் முஸ்லிம்கள் பாதிப்புக்குள்ளாகக் கூடாது என்ற பாதுகாப்புக் கருதியே வடமாகாண முஸ்லிம்களை அவர்களின் நலன் கருதி வெளியேறச் சொன்னோம்" என்று அண்டன் பாலசிங்கம் லண்டன் பீபீஸி பேட்டியில் குறிப்பிட்டு, வடக்கு முஸ்லிம்களை புலிகள் விரட்டியடித்ததை ஒப்புக் கொண்டார்.

சம்பூரில் மூதூரைச் சேர்ந்த இரு முஸ்லிம்கள் கடத்தப்பட்டதை தமிழ் பொதுமக்கள் நேரில் கண்டுமுள்ள போதிலும் அதைப் புலிகளே செய்தது பல்வேறு வழிகளில் தெரியவந்துள்ள போதிலும், புலிகள் இச்சம்பவத்தை ஏற்றுக் கொள்ள வழமை போன்று பல ஆண்டுகள் செல்லும் என்பதையே கடந்தகால நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

நமது ஆளுமைகள் 8

மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும்.

அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

4. அவிகாரிலும் இலங்கைச் சிந்தனை

எவ்வளவுதான் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தாலும் இந்தியாவில் அலிகாரில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாலும் இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலத்தைப் பற்றி மட்டும் சிந்திப்பதற்கும் சிந்தனைகளைத் தூண்டுவதற்கும் அவர் மறப்பதேயில்லை. இலங்கையிலே அக்காலத்தில், சிலோன் முஸ்லிம் ஸ்டாண்டட். என ஒரு பத்திரிகை வெளியாயிருந்து, தனது கருத்துக்களை மிகவும் ஆணித்தரமாகவும் விளக்கமாகவும் எழுதுவதில் வல்லவராகக் காணப்பட்ட ஜனாப் பதியுத்தீன் அப்பத்திரிகை ஆசிரியராக ஜனாப் அப்துல் கப்பார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அது ஆசிரியருக்கான கடிதமாக மட்டுமே இருந்தது. எனினும் பல கருத்துக் களும் தீர்க்கதரிசனங்களும் நிறைந்ததா கவே அக்கடிதம் காணப்பட்டது. எனவே இக்கடிதத்தால் கவரப்பட்ட ஆசிரியர் அதன் மதிப்பை உணர்ந்து வெளியிட்டமை ஜனாப் பதியுத்தீன் அவர்கள் தூய்மையான கருத்துக்களுக்குச் செய்யும் மரியாதையாகவும் இருந்தது. 1933 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத சஞ்சிகையில் அக்கடிதம் மக்களுக்காப் பிரசுரிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் அவரால் எழுதப்பட்ட கடிதத்தின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு...

தங்களது பத்திரிகையின் ஆறு பிரதிகளை எனது நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். அதற்காக நான் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன். ஈழ நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழுகின்ற ஆங்கிலங் கற்ற முஸ்லிம் இளைஞர்களின் மத்தியிலே இஸ்லாத்தைப் பற்றி சரியான தகவல்களையும் அறி வையும் ஊட்டக் கூடிய அரியதொரு சாதனமாக உங்களது பத்திரிகை அமைந்துள்ளது. அதனால் உங்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

கடந்த ஆறுமாத காலமாக எந்தத் தடையுமின்றி வெளிவருகின்ற இந்தப் பத்திரிகை எதிர்காலத்திலும் அங்கு தடை இன்றி தொடர வேண்டுமென்பதே எனது பேரவாவாகும். எனது தாய்நாட்டைப் பொறுத்தவரையில், எத்தனையோ இயக்கங்களாலும் தனிப்பட்டவர்களாலும் இதுவரை வெளியிடப்பட்ட முஸ்லிம் சஞ்சிகைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் ஏற்பட்ட கதியை நான் சொல்லத் தேவையில்லை.

என்னோடு பல இடங்களில் ஒத்துழைத்த ஒரு நண்பரினால் ஆங்கிலத்தில் இத்தகைய உயர்ந்த ரகமான பத்திரிகையொன்று. எனது சொந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் கண்டு நான் பெருமைப்படாமல் இருக்க முடியாது. அதனால் இரட்டிப்பு மடங்கான நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் எந்தச் செயலையும் ஆதரிப்பவன் நான். எனது சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் எந்தச் சமூக - கலாசார முன்னேற்றத்திற்காகவும் இதய சுத்தியுடன் சேவையாற்றும் ஒருவர், எந்தத் துறையைச் சாந்தவராய் இருப்பினும் நான் அவரை நன்கு மதிக்கிறேன். எனது வாழநாளில் சில முக்கியமான வருடங்களைப் பொதுப் பணிக்காகவும், எனது சமூக மக்களின் சன் மார்க்க வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்துள்ளதை நீங் கள் அறிவீர்கள். அத்தோடு நான் திருப்தி அடையமாட்டேன். "எனது தாய்நாட்டுக்கும் அங்கு வாழும் மக்களின் முன்னேற்றத்திற்கும் மென்மேலும் சேவையாற்றச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென்பதே எனது முழுமையான ஆவலும் அவாவுமாகும்." காருண்ய மனப்பான்மையுடன் ஏனையோரது கருத்துக்களைப் பக்கச் சாய்பின்றி நோக்குந் தன்மை கொண்ட மனத்தினனாக நான் என்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறேன். அப்பொழுது தான், நானும் எனது சமூகமும் எனது நாடும் நலன் பெற்று வாழ முடியும்.

ஒருவரை ஒருவர் பொறாமைக் கண்கொண்டு நோக்குவதே, முன்னைய நமது முஸ்லிம் சமூகத்திடம் காணப்படும் பெருங்குறைகளுள் ஒன்றாகும். ஒரு முஸ்லிமின் முன்னேற்றத்தை இன்னொரு முஸ்லிம் விரும்புகின்றானில்லை. முன்னேறும் ஒருவனைச் சொல்லாலும் செயலாலும் அவமதித்துத் தடைகளை உண்டு பண்ணி, அவனை வீழ்த்த வேண்டுமென்பதே பலரது நோக்கமாகும். இப்படியான இழிந்ததோ அத்திவாரத்திலிருந்து பலம் பொருந்தியதொரு முஸ்லிம் சமுதாயத்தை நான் எப்படிக் கட்டியெழுப்ப முடியும்? தேவையற்ற மனப்போக்குகளை முஸ்லிம்களிடமிருந்து நீக்குவதே உங்களது பத்திரிகையின் முக்கியமான முதன்மையான குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

உங்கள் சஞ்சிகையில் மாறுபட்ட கருத்துக்களையும், அபிப்பிராயங்களையுங் கொண்ட கட்டுரைகளை வெளியிடுகின்றீர்கள். அது உங்களின் பாரபட்சமற்ற பக்கஞ்சாராக் கொள்கையைத் தெளிவாகக் காட்டுகின்றது. ஓர் உண்மை முஸ்லிம் மாற்றானின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பவனாகவே இருப்பான்.

இஸ்லாத்தைப் பற்றி எழுந்துள்ள பல்வேறு வகைப்பட்ட கொள்கைகளைப் பற்றியும் கருத்து வேறுபாடான குழுக்களைப் பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். பெரியதோர் இஸ்லாமிய எழுச்சி எமது எதிர்காலத்தை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றது. அதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் தனது பங்கை அது எத்தகைய சிறிய பங்காயினுஞ் சரியே. அதனைச் செய்தே ஆகவேண்டும். சிறுசிறு துளிகளான அத்தகைய பணிகள் தான் பெருஞ் சமுத்திரமாக மாற்றமடையும். முஸ்லிம் உலகையும் முஸ்லிம் அல்லாதோர் உலகையும் இணைக்கக் கூடிய இப்படியான பிரமாண்டமானதொரு எழுச்சி எதிர்காலத்தில் ஏற்படத்தான் போகிறது. அதற்கான அறிகுறியே உங்களது சஞ்சிகை என்று கூடக் கூறலாம்.

பாதாப் பிரச்சினையைத் தள்ளிவிட்டு, முஸ்லிம் பெண்களுக்கான கல்வியின் அவசியம் பற்றிய அறைகூவலை ஆரம்பியுங்கள். முஸ்லிம் அல்லாதா உமது கருத்துக்களை ஏற்கச் செய்வதற்கு முன்னர், முஸ்லிம்களை உண்மையான முஸ்லிம்களாக வாழ வழிசெய்வதே மேலானதாகும். முஸ்லிம்களின் மத்தியிலே பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டு பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது இயக்கங்களை நீக்கிவிட்டுச் சக்தி வாய்ந்த தனியானதொரு முஸ்லிம் இயக்கத்தைக் கட்டி எழுப்புதல் வேண்டும். அரசியலில் எனக்கு நம்பிக்கையில்லை. நாம் கல்வியறிவு பெற்றவர்களாக - ஒற்றுமை உடையவர்களாக - வாழ முற்படும் போது, அரசியல் பூரணத்துவம் எங்களைத் தானாகவே தேடிக்கொண்டு வந்துவிடும்.

தங்களுக்குள்ளே சச்சரவுபட்டுக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் நமது சமூகத்துக்குத் தேவையில்லை. அதிகமான கலவிமான்கள் தான் இன்று தேவைப்படுகின்றனர். அத்துடன் சமூக சீர்திருத்தவாதிகளும் தேவை. சரியான முறையில் கலவி அளிக்கப்படாமையால் நல்ல தலைவர்களை உற்பத்தியாக்குவதில் நின்றும் நாம் தவறிவிட்டோம். ஆதலினால் கல்வியதான எமது முச்சாகும். அதற்கான வசதியும் வாய்ப்பும் வேண்டுமென்பதே எமது முழுமையான கோரிக்கையாக இருத்தல் வேண்டும்.

ஒரு சில மாணவர்களையாவது அலிகாருக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு இந்தியாவையும் ஏனைய நாடுகளையும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அப்போது தான் அவர்களிடத்திலே கடமையுணர்ச்சி - தேசியப் பற்று- சேவை மனப்பான்மை - தாய் நாட்டுப் பற்று என்பன ஏற்படவும் அவற்றை அறிந்து பயன் பெறக் கூடிய நல்லுணர்வைப் பெறவும் முடியும். வகுப்புத் துவேசம் எமக்குத் தேவையில்லை. மற்றவர்களிடத்தில் காணப்படும் நல்ல விடயங்களை நாம் ஏற்றுக் கொள்வோம். நாமும் நல்லவர்களாக வாழ முற்படுவோம். இலங்கைத் திருநாட்டின் அன்புப் புதல்வர் என்ற பெருமையைப் பெறுவோம்.

உங்கள் பத்திரிகையின் மீது எனக்குள்ள கடமையுணர்ச்சியினாலும், பற்றுதல் காரணத்தினாலும் மேலும் சில சந்தாதாரர்களை அலிகார் சர்வகலாசாலையில் இருந்து சேர்த்தனுப்ப முயற்சி எடுக்கிறேன். அத்துடன் சில கட்டுரைகளையும் அனுப்ப எண்ணியுள்ளேன். நான் ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற போது, அந்த நாடு மாமனனா நாதிர் ஷாவின் தலைமையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை நேரடியாகவே கண்டும், அவதானித்தும் உள்ளேன். அது சம்பந்தமாகக் கல்கத்தாவில் இருந்து வெளியாகும் "ஸ்டார் ஒப் இண்டியா" (star of India) என்ற பத்திரிகைக்கும் சில தகவல்களைக் கொடுத்துள்ளேன். நீங்கள் விரும்பினால் நான் அனுப்பும் ஒரு சில புகைப்படங்களோடு கட்டுரைகளையும், உங்கள் பத்திரிகையில் பிரசுரியுங்கள்

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் விருந்தினராக நான் ஒரு மாத காலம் அங்கு தங்கியிருந்தேன். ஒரு முஸ்லிம் நாடு என்ற வகையில் அந்த நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தை முஸ்லிம்கள் அறிந்து கொள்வது அவசியம்.

முஸ்லிம்களுக்குரிய ஆங்கில சர்வகலாசாலையான அலிகார் சர்வ கலாசாலையைப் பற்றியும், உங்களது பத்திரிகையில் முக்கியத்துவம் அளித்துப் பிரசுரியுங்கள். ஏனெனில் அலிகாரில் கல்வி பயில வரும் இலங்கை முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும். சுருங்கக் கூறினால் இலங்கையிலிருந்து அங்கு கல்வி பயில வந்திருக்கும் ஒரேயொரு முஸ்லிம் நான் மட்டும்தான். அதனால் அலிகார் சர்வகலாசாலையைப் பற்றியும் சில கட்டுரைகளை அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளேன்.

இஸ்லாமிய அன்பன்
எம்.எஸ்.எம்.பதியுத்தீன்.
அலிகார் சர்வகலாசாலை,

இக்கட்டுரைக் கடிதம் அவரது தேசப்பற்றையும், சமூகப் பற்றையும் எடுத்துக் காட்டுவதோடு எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை முன்கூட்டியே கொண்டுள்ளார் என்பதையுமே விளக்குகின்றது.

(தொடரும்....)

ஏன் மகனே! இப்படி ஏனானாய் நீ?

பாமரனாய் விரல் நீட்டி ஒப்பமிட்ட என்
பரிதாப தீர்க்கவுன்னைப் பள்ளி சேர்த்தேன்
பாலர் வகுப்புகளில் திறமையென்றார்
படிப்படியாய் வகுப்பேறி முதன்மை பெற்றாய்
பன்னிரெண்டாம் வகுதினிலே புலமை பெற்று
படிப்பதற்கு இலவசமாய் சலுகை பெற்றாய்
முன்னணியிப் பள்ளியிலே முதன்மைபெற்று
முழுமதியாய் ஒளி வீசிப் பேரு பெற்றாய்!

2

கூலிக்கு உன் தந்தை வேலை செய்து
கொண்டு வந்த பொருளெல்லாம் உனக்களித்தேன்
புத்தகமும் புது உடுப்புமரசு நர
புனை செருப்பு கைச்செலவு கொப்பி பேனா,
'மைசிக்கிள்' வாங்கு தற்குத் தோட்டை விற்றேன்
வளமுடனே நீ வாழப் பசித்திருந்தேன்
கண்விழித்து மெய் வருந்திக் கற்பாயானால்
கட்டாயம் நீயுயரும் காலம் வரும்!

3

மூவாறு வயதுனக்கு வந்தபோது
முன்பிருந்த திறமையெல்லாம் மங்கிப்போக
பள்ளியிலே தரும் கல்வி காணாதென்றாய்
பகலிரவாய் 'ரியூசனுக்கு' சென்று வந்தாய்
நண்பருடன் தெருத்தெருவாய் அலைவுற்றாக
நான் கேள்வியுற்றதனால் மனமுடைந்தேன்
கண்ணாகக் கல்வியை நீ போற்றி வந்தால்
களங்கமில்லை நீயுயர்வாய் கண்ணேயென்றேன்!

4

உயர் வகுப்பில் சித்தி பெற்றாய் ஊரேபோற்ற
உளம் குளிர்ந்து மனமகிழ்ந்தேன் உலகையுற்றேன்
நம்நூரில் படிக்க வொண்ணா மேற்படிப்பு
நாமென்ன செய்வதென்று விழித்து நின்றோம்
குடியிருந்த வளவு தனில் பாதிவிற்று
கொண்டு வந்து தந்தேனுன்கையில் காசை
பல்கலைக்கழகம் செல்ல லங்கி (யி) விட்டு
பக்குவமாய் செலவு செய்ய புத்தி சொன்னேன்!

5

காசோடு பல்கலைக் கழகத்திற்கு
காற்றாகப் பறந்து சென்றாய் படித்துமீள
ஆசையோடங்குற்ற உன்னையந்த
அநியாயம் பிடித்த முஸ்ரு கற்றவர்கள்
வசைபாடி வம்பு செய்து வகுத்திட்டார்கள்
வழமையென்று நீ பொறுத்துச் சகித்துக் கொண்டாய்
இருவருடமொருவாறு கழிந்த பின்னர்
எனை வந்து சந்தித்து நீயும் மீண்டாய்!

6

புதுவருட மாணாக்கர் வந்ததினால்
புல்லரித்துக் கிளர்ந்தெழுந்து நீயும் சேர்ந்து
'அன்பு வதை' யென்றுவொரு பெயரைவைத்து
ஆதரித்து அணைத்தெடுக்க எண்ணங்கொண்டாய்
அவன் பொடியன் தாங்கவொணா வேதனையால்
அலறியே வீழ்ந்து விட்டான் மாடியின் கீழ்
அவனுடலை விட்டாவியகன்ற தனால்
அனைவருமே நொந்து கொண்டார் வதுதையெண்ணி!

7

உன்னோடு ஆறுபேரை அழைத்துச் சென்று
உயர்கல்வி லெட்சணமா யென்றார் 'பொலிஸ்'
சிறைபட்ட உங்களுக்கு கல்வியென்ன
சீரான ஒழுக்க மின்றேல் எதற்குக் கல்வி
நீ வாழ்ந்து வழிகாட்டா விட்டாலுமக்
கேனிந்தக் கல்வியடா பாவி மக்காள்
ஆசானை அவமதிக்கத் துணிந்து விட்டால்
அவனியிலே யுங்களுக்கு மீட்சியுண்டோ

8

உயர் கல்வியொழுக்க மெனும் விழுமியத்தை
உமிக்காந்தல் போல நீங்கள் சுருக்கிவிட்டீர்
நம்முன்னோர் உயர்கல்வி கற்ற திலை
நாடுபோற்று மரசர்களாய் வாழ்ந்து சென்றார்
தாய்மாரே தந்தையரே இது தானெங்கள்
தலைவிதியை நிர்ணயிக்கும் கல்வியென்றால்
தேவையில்லை சந்ததிக்கு இந்தக் கல்வி
சீராகக் கிராமத்தில் வாழ்ந்தால் போதும்

வை.பி.அஹ்மத்,
அக்கரைப்பற்று - 01

உறவுகளில் உயர்ந்த உறவுடைய அன்புப் பெற்றோர்களுக்கு, தங்களிடம் சற்றுச் சிந்தனைக்காக

இன்றைய இயந்திரமயமான வாழ்வுக்குள் உங்கள் குழந்தைச் செல்வங்களின் மனநிலைகளைப் பற்றி புரிதல்களோடு நடந்து கொள்கிறீர்களா.... ஜாக்கிரதை! வார்த்தைகளையும் கண்டனக் கட்டளைகளையும் ரொம்பவும் அதிகமாகத்தான் பயன்படுத்துகிறீர்களே. குழந்தைகளை எதிர்காலம் ஒன்றிற்கு தெளிவுடன் ஒப்படைக்கும் பொறுப்பு உங்களுக்குரியது என்பதை அவ்வப்போது மறந்து விடுகிறீர்கள். நீங்கள் தாமதித்தும் தூங்கியும் விட்டீர்கள். (சிந்தியுங்கள்) உங்கள் சூழலும் உங்கள் நடைமுறைகளும் T.V இலும் வீணவிவாதங்களிலும் இப்போது சிக்குண்டுள்ளமையை! பல பிரச்சினைகள் பாடமாய் சொல்கிறது.... முக்கியமாகப் பெற்றோர்களே! பெற்றோர் - பிள்ளைகளின் இடையே உளநிலைப்பகிர்வுகளை சுமுகமாக அமைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்க்கதிகமுண்டு (இவற்றையெல்லாம்) வேலைப்பழு, மற்றும் நாளாந்த சிரமங்களின் காரணமாக அன்றேல் குழந்தைகளின் தேவைகளை யதார்த்தபூர்வமாகவும் சிநேகபூர்வமாகவும் அணுகித்தீர்ப்பது பற்றி மேலும் மேலும் பாதிப்புகள் தோன்றுவதையே இன்னும் காண்கிறோம். ஆனால் பெற்றோர்களே குழந்தை தன் துயரமான விடயங்களைப் பற்றிப் பேச முற்பட்டால் அவற்றை செவிசாய்த்துக் கேளுங்கள். தட்டிக் கழிக்காதீர்கள். பிள்ளையின் முக பாவத்தையும் அங்க அசைவுகளையும் கொண்டு பிள்ளைகளுடன் சுமுகமாக உரையாடுங்கள். பிள்ளை பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளுக்கேற்றாற் போல் உங்கள் கருத்துக்களையும் விளக்கங்களையும் தெரிவியுங்கள். சிலவேளை பிள்ளை பொறுமை. வெட்கம். துயர்தாங்கமை போன்றவற்றின் காரணமாக உரையாடலைத் தொடர்ந்து கொள்ள உங்களிடம் தாமதிக்கையில் பொறுமை இழக்காதீர்கள். பிள்ளையின் உணர்வுகளின் எதிர் கொள்ளல்களை நாளும் காண்கிறீர்கள். ஆனால் அவற்றுக்கேற்றாற் போல் நடைமுறைகளில் உள்பாதிப்புகள் தாக்கங்கள் ஏற்படா வண்ணம் சுமுகமாக்குவதை அன்றேல் பெற்றோர் - பிள்ளைகளிடையே தேவைப்படும் ஆரோக்கிய நடைமுறைகளை மறந்து விடுவீர்கள்.

இவைகளெல்லாம் தெரியாமலும் இல்லை. நீங்கள் அறியாமலும் இல்லை. ஆனால் சுவனவீனக் குறைகாரணமாகவே ஆங்காங்கே இப்பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருக்கிறன.

பெற்றோர் - பிள்ளைகளிடையே உளநிலைப் பகிர்வுகள் எப்பொழுதும் சுமுகமாக இருக்க வேண்டுமெனக் கூறி விடை பெறுகிறேன். என்றாலும் பின்வரும் நடைமுறைகளை நாளாந்தம் நடைமுறையில் எடுத்துக் கொள்ளுங்கள்.

பிறிதோர் சந்தாப்பத்தில் சந்திக்கும் வரை

-முஹம்மதிஸ்மாயில் சித்தி றபீக்கா,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு உதவிகள் மூலம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமா?

வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்வதனை ஒரு நாடு தனது வெற்றியாகவோ, சாதனையாகவோ கருதக் கூடாது. காரணம் அவைகள் உதவிகள் என்ற பெயரில் வழங்கப்படும் கடன் தொகைகளாகும். அவற்றை மீள செலுத்தப்பட வேண்டிய நிலைக்கு மத்தியில் தமது நாட்டை எவ்வாறு தொடர்ச்சியான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்?

தற்போதைய உலகில் தனித்து நின்று ஒரு நாடு அபிவிருத்தியடைவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். ஆகவே ஒவ்வொரு நாடும் தனது உறவுகளை பிற நாடுகளுடன் பலப்படுத்துவதனூடாக அபிவிருத்தியடைய முயற்சிப்பது உலக சுபாவமாகி விட்டது. குறிப்பாக 3 ஆம் உலக நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் தமது உறவுகளை ஏற்படுத்தியும் பலப்படுத்தியும் வருகின்றன. இந்த நடவடிக்கைகளூடாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பலத்தை 3 ஆம் உலக நாடுகளில் திணிக்கும் நிலை தோன்றியுள்ளது. தற்பொழுது இலங்கை பாரிய கடன் சுமைகளை சுமந்திருக்கும் நிலையில் அதிலிருந்து விடுபடுவதற்கு முயற்சிப்பதை விடுத்து மென்மேலும் கடனுதவிகளை பெறுவதன் மூலம் இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியுமா? என்ற விடயம் குறித்து இருமுறை சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

இன்னும் சில வாரங்களில் உதவி வழங்கும் மாநாடு நடைபெறவிருக்கின்றது. ஏற்கனவே பெறப்பட்டுள்ள கடன் தொகைகளை விட, இம்முறை அதிகமான தொகை பெறப்படவிருப்பதாக கூறப்படுகிறது. இந்த கடன் உதவிப் பணத் தொகை கிடைப்பதானது அரசுக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது. இங்கு வியப்புக்குரிய விடயம் என்னவென்றால் அதிகாரித்திருக்கும் கடன் பழு தொடர்பாக எவரும் கதைக்காமல் கடன் உதவிகள் பற்றியே கதைக்கின்றனர். கடன் உதவிகளை வெற்றியாக கருதும் அரசு, வரவு செலவு திட்ட அறிக்கையிலும், அதனை சமர்ப்பிக்கும் போது பெறப்பட்டுள்ள கடன் தொகைகள் எமது நாடு சுமந்துள்ள சுமக்க முடியாத சுமையென்றும் அதனை மீளச் செலுத்துவது மிகப் பெரிய சவால் என்றும் கவலையோடு கூறும். இந்த கடன் தொகைகள் மூலம் தற்போதைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். எதிர்கால சமூகம் இந்த கடன் தொகைகள் மூலம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும்.

ஆகவே, கடன் தொகைகளை விரும்பி வேண்டும் அரசு அன்று முதல் இன்று வரை கூறி வருவதெல்லாம் நாட்டு மக்கள் சகலரும் கடன் பழுவை குறைக்கும் முயற்சியில் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டுமென்பதாகும். இந்த முரண்பட்ட கருத்துக்கள் மூலம்

பொதுமக்கள் குழம்பிப் போயுள்ளனர். கடன், உதவிகள் தொடர்பாக இன்னமும் எமக்குத் தேசிய கொள்கை இல்லாமை கவலைக்குரிய விடயமாகும். இன்று வெளிநாட்டு கடன் உதவிகளை பெறுவதே எமது கொள்கையாக மாறியுள்ளது.

ஒரு நாடு கடன் உதவிகளை பெறுவதன் மூலம் அதனை செலுத்த அந்நாட்டு மக்கள் சகலரும் நிர்பந்திக்கப்படுவதாக இருந்தால் இந்நிலையில் திட்டமிட்ட அடிப்படையில் செயல்படுவது அவசியம்.

அரசு இந்நிலையில், தான் தோன்றித்தனமாக செயற்படாமல் ஒரு பொது உடன்பாட்டின் அடிப்படையில் எதிர்க் கட்சி உட்பட ஏனைய மக்கள் பிரதிநிதிகளுடனும் ஒருங்கிணைந்த அடிப்படையில் செயற்பட வேண்டும்.

ஒரு நாட்டின் பலம், சக்தி என்பன அதன் பணப்பலத்திலேயே தங்கியுள்ளது. இத்துறையில் பலமாக இருந்தால் தொடர்ச்சியாக நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லல முடியும். நாம் தொடர்ச்சியாகக் கூறி வருவதெல்லாம் நாம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பதேயாகும். ஆனால், கடந்த 30 வருட காலத்தில் தேசிய உற்பத்தியின் அபிவிருத்தியானது இந்தியாவை விட விகிதாசார அடிப்படையில் கீழ் மட்டத்திலேயே உள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுக்குள் தேசிய உற்பத்தியை 8 வீதம் - 10 வீதம் வரையில் விருத்தி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யப்பட்டால் வருமானத்தை இரட்டிப்பாக்க முடியும். ஆனால் இது கஷ்டமான பணியாகும். காரணம் அவ்விலக்கை அடைவதாயின் எமது பொருளாதாரம் பலமானதாகவும், வெற்றிகரமானதாகவும் அமைய வேண்டும்.

பல்வேறு திட்டங்களை அமுல்படுத்துவது மாத்திரமல்லாமல் அவற்றை முறைப்படி சரியான திட்டமிட்ட அடிப்படையிலான முகாமைத்துவம் மூலம் செயற்படுத்துவதும் அவசியம். நாம் நிகழ் காலத்தின் நிலைகுறித்து கவனம் செலுத்தி வருகிறோம். மேலும் அவற்றை தீர்ப்பதற்காக உடனே தீர்வொன்றையும் முன்மொழிகிறோம். ஆனால், அதனால் ஏற்படும் பிறிதொரு பிரச்சினை மீண்டும் மற்றுமோர் நாளில் ஏற்படும் போது அதற்கென மீண்டும் தீர்வொன்றை முன்வைக்கிறோம். இவ்வாறு நாள்தோறும் தோன்றும் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வுகளையே காண்பதோடு அவற்றின் மூலம் குறுகிய காலம் திருப்தியடைகிறோம். இந்த அடிப்படையிலேயே கடன் பிரச்சினை மிகவும் பயங்கர பிரச்சினை என்ற வகையில் அது குறித்தும் கவனம் செலுத்துவது மிக மிக அவசியமாகும். இது குறித்து தேசிய கொள்கையொன்றை வகுப்பது அவசியம். இத்தகைய கொள்கை பல நாடுகளில் காணப்படுகின்றது. இதன் மூலமே தனது செயற்பாடுகளை அந்நாடுகளில் வெற்றிகரமாக செயற்படுத்துகின்றன.

இது அரசினதும், எதிர்கட்சியினதும் பிரதான கடமையாகும். இது தொடர்பாக பற்றுதலுடனும், பொறுப்புடனும் நடக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்ப்பது சாதாரண விடயமே.

ஆகவே கடனுதவிகளை பெற்றுக் கொள்ளும் போது தமக்கு கிடைக்கும் தொகையை அதிகப்படுத்தி பெற்றுக்

தமிழில் : எம்.ஐ.எம். ஷீராஸ்

கொள்வதும், அதனை தனது வெற்றியாக காண்பிப்பதும் அரசுக்கு இன்று சகஜமாகி விட்டது. மறுபுறம் பெறும் கடனுதவிகளின் போது, கடன் வழங்கும் நாடுகளினால் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் குறித்து போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனால் அந்நாடுகளுக்கு அடிமைப்படும் நிலையும் ஏற்படுகிறது. அந்நாடுகளுக்கு தனது கடன் தொகையை மீள வழங்கும் நிலை ஏற்படும் போதே இதுகுறித்து கைசேதப்படும் நிலை அரசுக்கு ஏற்படுகிறது.

ஏலவே, கடன் பெற்ற அரசை பின்னர் ஏசுவதோடு தாம் மக்களுக்கு சேவை செய்ய ஆட்சிபீடமேறியவர்கள் என்பதை காட்டும் நோக்கில் மீண்டும் கடன் பெற முயல்வார்கள். இந்நிலை தொடரும் பட்சத்தில் கடன் மேல் கடன் அதிகரித்து இறுதியில் பாதிக்கப்படுவதெல்லாம் பொதுமக்களே.

அடுத்த விடயம், கிடைக்கும் கடன்களை உரிய முறையில் பயன்படுத்துவதாகும். இந்த விடயம் குறித்து இலங்கை அரசு பலம் குன்றிய நிலையிலேயே காணப்படுகிறது. கடன் பெறுவது இலகுவான விடயம் ஆனால் அதனை பொருத்தமான திட்டங்களுக் காக பயன்படுத்துவதே கடினமானதும், இன்றியமையாததுமாகும்.

கடன்கள் பெறும் போது விதிக்கப்படும் உலக நாடுகளின் நிபந்தனைகள் குறித்து கவனம் செலுத்துவது அவசியம். இங்கு பக்கச்சார்பு, அரசியல் ரீதியாக சிந்திக்காமல் நடுநிலை கண்ணோட்டத்தினூடாக நோக்கப்படுவது அவசியம்.

இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் 88.000 ரூபா கடன் சுமையை தாங்கி உள்ளதாக கடந்த வருட வரவு செலவு திட்டத்தின் போது நிதியமைச்சர் குறிப்பிட்டார். இந்த தொகை இவ்வருட வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தலின் போது அதிகரித்த நிலையிலேயே காணப்படும். இந்நிலைமை இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை பாதிக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. நிரவாக முறை சீர்கேட்டின் விளைவு காரணமாக பொது மக்கள் இன்று நாளுக்கு நாள் கஷ்டங்களை அனுபவித்து வருவதோடு, வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றது. ஆனால், நாட்டை ஆண்ட ஆளுகிற எந்தவொரு அரசும் இந்நிலையை கட்டுப்படுத்தி, மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதோடு, தனி நபர் கடன் தொகையை குறைக்க முற்பட்டனர் என்பதை காணக் கிடைக்கவேயில்லை.

கடன் தொகைகளை பெறுவது வெற்றியல்ல, மாறாக பெறப்பட்ட தொகை மக்களுக்கு சுமையாக அமையாமல் மீள செலுத்தும் சக்தியும் ஆற்றலுமே மிகப் பெரிய வெற்றியாகும். இவ்விடயம் குறித்து அரசும், பொதுமக்களும் கவனம் செலுத்த வேண்டும். ●

சாளரம்

— இப்னு அஸுமத்

மூதூர் பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.வி.கூட்டணி செயலாளர் இரா. சம்பந்தனிடம் பி.பி.சி.யின் சந்தேஷய சிங்களச் சேவை கேட்ட கேள்வியும், அதற்கான அவரது பதிலும் பின்வருமாறு:

கேள்வி : இவ்விரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக அறிய வருகிறது. வேறு எவராலும் இத்தகைய செயலை செய்திருக்க முடியாது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளாரா....?

பதில் : கொழும்பில் ஆட்கடத்தல்கள் இடம்பெறுவதில்லையா? கம்பஹா மாவட்டத்தில் இல்லையா? நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் ஆட்கடத்தல்கள் கொலைகள் எல்லாம் இடம்பெற்று வருகின்றனவே!

பி.பி.ஸி. சந்தேஷய 18.04.2003

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மட்டுமல்லாது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அதனது பங்காளிக் கட்சிகளான முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளாலும் சமாதான நடவடிக்கைகள் குறித்த நம்பிக்கைகள் பழுதடையக் கூடும். இந்த முறுகல் நிலையானது கடந்த காலங்களில் வரவர வளர்ந்து வருகிறதே தவிர தீரக் கூடிய வழிவகைகளைக் காணமுடியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக அவை வளர்ச்சி பெறுவதற்கு இடமளித்துவிட்டு பார்த்துக் கொண்டிருப்பதையே விரும்புவதாகக் கூறினால் அது தவறல்ல என்றொரு நிலை இன்று உருவாகியுள்ளது.

முஸ்லிம்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆரம்பந்தொட்டே அரசு தெளிவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. புலிகளால் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இடையூறுகளை நிறுத்துவதற்கு தீர்மானமான நிபந்தனையொன்றை கொண்டு வர அரசு தவறியுள்ளது. ஆகையால் இன்று சுயாதீனமான முஸ்லிம் அரசியல் எழுச்சி தலை நிமிர்ந்துள்ளது. ஆகவே, இந்த எழுச்சிக்கு பதிலளிக்கும் முகமாக நேரடியாக அரசுடன் மோதும் நிலை ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்டுள்ளது.

-சுனந்த தேசப்பிரிய (பத்திரிகையாளர்), லங்காதீப

சதாம் ஹுசைனுக்குப் பின்னர் ஈராக்கில், ஈராக் என்ற பெயர் மாத்திரமே இல்லாது போகும். ஈராக்கை ஒரேயொரு நாடாக முன் நடாத்தி வந்தவர் சதாம் ஹுசைன் ஆவார். அவர் சர்வாதிகாரி எனில் அவரை நீக்க வேண்டியவர்கள் ஈராக்கின் மக்களே அன்றி, வாக்குப் பெட்டிகளைக் கூட கணக்கிட்டுப் பார்க்காமல் ஜனாதிபதியான ஜோஜ் புஷ் அல்ல.

-திவயின.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தனித்துவமான அடையாளங்களைக் கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர். முஸ்லிம்களுக்கென்று கேந்திரமாக ஓரளவு பூமிப் பகுதி கிழக்கு மாகாணத்திலேயே இருந்து வருகிறது. பிரதேச அரசியல் அதிகாரத்தில் குறிப்பிட்டதொரு பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளும் பலம் அப்பகுதி முஸ்லிம் மக்களுக்கு உண்டு. அதேநேரம் அவர்கள் வாழ்க்கை முறைமை என்ற வகையில் விவசாய பின்னணியில் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய பகுதிகளில் வாழ் முஸ்லிம்கள் வர்த்தகத்தை தமது வாழ்க்கை முறையாகக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்துதான் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தனித்துவப்படுகின்றனர்.

இந்தப் பின்னணியில் இருந்துதான் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்து நிற்கிறது. அதுவரை முஸ்லிம் மக்கள் ஏனைய இரு பிரதானக் கட்சிகளையே சார்ந்திருந்தனர். அவர்களது தலைமைத்துவங்கள் கூட கொழும்பையே தளமாகக் கொண்டிருந்தன. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கான தலைமைத்துவம் கருதியே மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். அவரது மறைவுக்குப் பின்னால் இன்று அக்கட்சி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளது.

ஹக்கீமுக்கு தனிப்பட்ட ரீதியில் கிழக்கு மாகாணத்தில் சக்தி மிக்க அடிப்படை எதுவும் கிடையாது. முஸ்லிம் காங்கிரஸுக்கு கிழக்கு மாகாணத்தில் பலம் இருந்து வருகின்ற போதிலும், அம்மாகாணத்தின் பிரதேச தலைமைத்துவங்கள் ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்தை ஏற்பதில் பின்னடைவு கொள்கின்றனர் என்ற போதிலும் ஹக்கீமுக்கு சவால் விடக்கூடிய பிரபலமான தலைவரொருவர் கிழக்கு மாகாணத்தில் இருந்து இன்னும் தோற்றம் பெறவில்லை.

-சி.ஜே. அமரதுங்க, லங்காதீப.

முஸ்லிம்களது கிராமங்கள் ஒவ்வொன்றாக அச்சுறுத்தலுக்குள்ளாகிறது

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டானது ஒரு சந்தர்ப்பவாத கூட்டாகும். முஸ்லிம் மக்களுக்காக இருந்து வந்த முக்கிய தலைவரான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் எனும் ஜனநாயகக் கட்சி இந்தக் கூட்டணியால் ஐந்து பகுதிகளாக சிதைவடைந்து முஸ்லிம் மக்கள் அரசியல் சூதாட்டத்தின் சிறைக் கைதிகளாக்கப்பட்டுள்ளனர். தான்தான் முஸ்லிம்களது பெரிய தலைவர் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே ரவூப் ஹக்கீம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இவை அனைத்துமே முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதற்கோ அல்லது நாட்டின் தேசியப் பாதுகாப்பை காப்பாற்றுவதற்கோ அல்ல. நாயும், நாய் வாலும் வொலிபோல் விளையாடிக் கொண்டிருக்கும் போது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களது கிராமங்கள் ஒவ்வொன்றாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. நூற்றுக் கணக்கான மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

-தினகர.

முஸ்லிம்களது பலத்தை விழுத்தும் வரை.....!

மூதூர் சம்பவமானது கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி திருகோணமலை ஜமாலியா வீதி வரைக்கும், மறுபுறம் அம்பாறையில் அக்கறைப்பற்று வரைக்குமாக வியாபித்திருந்தது. இவை அனைத்தினதும் பின்னணியில் புலிகள் இருந்து வருவதாக புதிதாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களது பலத்தை வீழ்த்தும் வரை புலிகளது தமிழீழக் கனவு சரிப்பட்டு வாராது என புலிகள் அனுமானித்துள்ளனர் என்பது இச்சம்பவங்களின் மூலமாகத் தெரிய வருகிறது.

-லங்கா.

புலிகளது புதிய பலிப் பூஜை மிகவும் வெற்றிகரமாக தற்போது நடைபெற்று வருகின்றது. மூதூர் உட்பட கிழக்கு மாகாண முஸ்லிம்களது உயிர்களைப் பறித்துக் கொண்டும் அவர்களது உடைமைகளுக்கு தீவைத்தும் இப்பூஜை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முஸ்லிம்களது தலைகளை வெட்டிக் கொண்டு செல்லும் அளவுக்கு அவர்கள் கொடுமையான மனதைக் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்பதில் இருந்தே இதன் பயங்கரம் புரிகின்றது. "தேதுன்ன" (வானவில்) எனும் அவர்களது பத்திரிகை மூலமாக சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் புலிகளது இரத்த தாகம் இன்னும் எவ்வகையிலும் குறைந்து விடவில்லை என்பதையே இச்சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வனைத்து சம்பவங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது ரவூப் ஹக்கீமினால் எதுவுமே செய்து கொள்ள முடியாதுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான காலகட்டத்தில் மகிழ்ச்சியுடன் ஓடோடிச் சென்று பிரபாகரனைச் சந்திக்க சென்றவர்களுள் ரவூப் ஹக்கீமும் அடங்குவார். அன்று பிரபாகரனின் உத்தரவின் பேரில் ஹலால் முறையிலான உணவு வகைகளும் ரவூப் ஹக்கீமுக்கு கிடைத்தன. முஸ்லிம்களது பிரச்சினைகள் தொடர்பாக நியாயமாக நடந்து கொள்வதாக புலிகள் அன்று கூறினார்கள். ஆனால், இன்று நடப்பது என்ன?

-லங்கா.

ஐயலத் ஐயவர்த்தன சொன்னது!

மூதூர் சம்பவங்களுக்கு தமிழ் - முஸ்லிம் அரசியல் காரணங்கள் மாத்திரம் அடிப்படையல்ல. மேலும் மறைக்கப்பட்ட காரணங்களும் உள்ளன. மீனவ ஆக்கிரமிப்புகள். இவர்கள் (முஸ்லிம்கள்) ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று வருதல் போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன. அடுத்ததாக முஸ்லிம் மக்கள் மிக அதிகமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் ஒரு சிறு பிரச்சினை என்றாலும் அது ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் மாபெரும் யுத்தமாக மாறிவிடுகின்றது. இது மூதூரில் மட்டுமல்ல கொழும்பு, மாளிகாவத்தையிலும் சில மாதங்களுக்கு முன் நடந்துள்ளது.

அமைச்சர் டொக்டர் ஐயலத் ஐயவர்த்தன.
-திவயன.

இந்த அமைதி பயங்கரமானது!

மூதூர் பகுதியில் இப்போது இறுக்கமானதொரு அமைதி நிலவி வருகிறது. இது மயான அமைதியாகும். ஆனால் இவ்வமைதி பயங்கரமானது.

-லங்காதீப.

ஈராக் மீதான தாக்குதல் தொடர்பில் நிரஞ்சலா திலகரத்ன எனும் பெண்மணி ஞாயிறு லங்காதீப பத்திரிகையில் வாசகர் பகுதியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதிலிருந்து சில பகுதிகள்...

"என்ன இருந்தாலும் புஷ் ஐயா அவர்களே அமெரிக்காவின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லெபனான் பிரதமர் பதவி விலகிய போது ஏனைய நாடுகளது தலைவர்கள் எதுவுமே நடக்காததைப் போல் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தனர். நீங்கள் அந்தத் தலைவர்களை பொம்மைகளாக்கி விட்டிருந்தீர்கள். எமது நாட்டின் ஆளுங் கட்சி எமது நாட்டில் யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு ஈராக் மீதான யுத்தத்திற்கு பக்கச் சார்பாக இருந்தது. எமது நாட்டின் எதிர்க்கட்சிகள் இலங்கையில் யுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறியவாறு ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இந்த முரண்பாடுகள் எதற்காக என்பது புரியவில்லை. நீங்கள் கூறியதைப் போல் அணுவாயுதங்கள் எதையுமே ஈராக்கில் இருந்து உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே. இந்த யுத்தம் யாருக்காக...?

இதன் போது, யுத்தம் தொடர்பில் பல வருடங்களுக்கு முன்பாக பர்னோல்ட் ப்ரேஷ்ட் எழுதிய சில வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

"இனிமேல்,
பிரித்தளிக்க இயலும் -
வெளிநாடுகளில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்டு
மொத்தமாகவே சமாதானத்தை!

உடைந்து விழுந்து அழிந்த
கட்டிடங்களை
புனரமைக்க இயலும்
தொகையாகக் கொண்டு வந்து
வழங்கலாம் நிவாரணம்
என்றாலும்
யுத்தத்தால் உடைந்த
இதயங்களை
புனரமைக்க இயலுமா?

நூல்:
சூபித்துவத்தின் உண்மை நிலை
மூல நூலாசிரியர்:
அஷ்ஷெய்க் ஸாலிஹ் பின் பௌஸான் பின் அப்துல்லாஹ் அல் பௌஸான்
தமிழில்:
ஓட்டமாவடி அறபாத் (ஸஹ்வி)
வெளியீடு:
சுஹா பப்ளிகேஷன்
M.P.C.S. முன் வீதி, வாழைச்சேனை.
பக்கம்: 40 விலை: 30 ரூபாய்

சுஹா பப்ளிகேஷனின் ஐந்தாவது வெளியீடாக "சூபித்துவத்தின் உண்மை நிலை" எனும் தலைப்பிலான நூல் வெளிவந்திருக்கின்றது.

"இபாதத் அல்லாஹ்வும், அவனது நபியும் வரையறுத்துத் தருவது மட்டுமே" என்பதையும், "இபாதத்தில் சூபித்துவம் என்ற பெயரில் பிழையான அனுஷ்டானங்கள் நுழைக்கப்பட்டிருக்கின்றன" என்பதையும் கருப் பொருளாகக் கொண்டதே இந்நூலாகும்.

இபாதத்தின் இஸ்லாமிய வரையறைகளை சூபியாக்களும், அவர்களின் கொள்கைகளும் எந்தளவிற்கு பாதித்து, சிதைத்திருக்கின்றதென்பதை கோடிட்டுக் காட்டுவதில் அதிக அக்கறையை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

அதேநேரம் மூல நூலாசிரியர் இப்னு தைமிய்யா சூபித்துவம் பற்றி கண்டித்த பகுதிகளை மட்டும் உள்வாங்கி, தமது கருத்தை நிலை நிறுத்துவதில் கரிசனை கொண்டிருப்பதை இந்நூலின் பெரும் பகுதி நம் முன் வைக்கின்றது.

"யூத, கிறிஸ்தவ இந்து மத துறவிகளின் வணக்க வழிபாடுகளிலிருந்து பெறப்பட்டதே சூபிஸமாகும்" (பக்கம் 13) "சூபித்துவமானது குறிப்பாக பிற்காலத்தில் தமது முன்னோர்களின் தூய்மையான தீன் மற்றும் வணக்க வழிபாடுகளுக்கு முரணாக தோற்றம் பெற்றகொள்கையாகும்." (பக்கம் 14)

"மித மிஞ்சிய இறையன்பின் மீது மட்டும் தம் வணக்கங்களை வரையறுத்துக் கொண்டனர்" என்றும். இதனால் பயக்கி, இறை அதரவு போன்ற மார்க்கத்தின் ஏனைய பகுதிகளை புறக்கணித்தனர்" என்றும் இந்நூல் பேசுகின்றது.

"சூபியாக்கள் நஸாராக்கள் போன்றோர்" என்றும். "சூபியாக்கள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்" என்றும், "சூபியாக்கள் வழிகெட்ட பிரிவினர்கள்" என்பனவும் போன்ற சொற்களினால் வர்ணிப்பதிலும், வகைப்படுத்துவதிலும் முழுமையான மையத்தை மூல நூலாசிரியர் கொண்டிருப்பதை இந்நூலை வாசிக்கும் எவரும் இலகுவில் அடையாளங் கண்டு கொள்ளலாம்.

இந்நூல் கூறும் கருத்துக்கள் சூபித்துவத்தின் உண்மை நிலை என முற்று முழுதாக நம்பி விடுவது சாத்தியமற்றதொன்று. ஏனெனில், மூல நூலாசிரியர் தமது வாதத்திற்கு பெரிதும் துணையாகக் கொள்ளும் இப்னு தைமிய்யா, சூபித்துவத்தை முற்று முழுதாக புறக்கணிக்க வேண்டியதில்லை. என்பதை ஒப்புக் கொள்கின்றார்.

இப்னு தைமிய்யாவின் "மஜ்மூஅதுர் ரஸாஇல் மஸாஇல்." "பதாவா செய்குல் இஸ்லாம்." "கிதாபுர் ரத்து அலல் மன்திகியின்" ஆகிய நூற்களில் தலவ்வுப் பற்றி காணப்படுகின்றன. அவரது பதாவாவின் பத்தாம் பாகம் இல்முல் - ஸுலூக் என்னும் ஆத்மீக வழி முறைகள் பற்றியும், பதினோராம் பாகம் தலவ்வுப் பற்றியும் விளக்குகின்றது. சூபித்துவத்தின் ஏற்றுக் கொள்ளும் பகுதிகளும் உண்டென்பதையும் அவை எடுத்துக்காட்டுகின்றன.

இறை மீதான காதலினால் பேணப்படும் அனுஷ்டானங்களில் இறைபக்தியும், இறை ஆதரவும் பெருகி உணர்வாகப்படுவதாகும் என்பதே யதார்த்த நிலை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், மூல நூலாசிரியரின் இலக்குக்கு ஏற்ப சூபித்துவத்தை விளக்கி அதனை ஒரு தீண்டத்தகாதது போல் சித்தரித்திருப்பது உண்மைக்குப் புறம்பானதாகும்.

அபூ பாத்திமா பர்வீன்

நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும். -பிரதம ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுண்டுகளை வெறும் துப்பாக்கியால் எதிர்கொள்ளலாமா?

ஒரு இஸ்லாமியர் பார்வை

இஸ்லாம் மனித உணர்வுகளை மதிக்கின்றது. அதற்கு உரிய பெறுமானத்தை கொடுக்கின்றது. அந்த உணர்வுகளை நெறிப்படுத்துகிறது. இதனூடாக அவனது உணர்வுகள் உயிரோட்டமுள்ளதாக மாறி விடுகின்றன. மனித உணர்வுகளை ஒடுக்க முறபட்டதன் விளைவாக முன்னைய மதங்கள் தோற்றுப் போயின. இதன் காரணமாக மதத்தினையும் மனித உணர்வுகளையும் பிரித்து நோக்கும் நிலை ஏற்பட்டது. மதம் மனிதனை விட்டு தூரமாகியது. மனித உணர்வு ஒரு வெறுமை நிலையை அடைந்தது. இதனூடாக மனிதனை அவனது உணர்வுகள் சீர்கேட்டின்பால் இட்டுச் சென்றன.

மனிதன் இயல்பிலேயே அழகுணர்ச்சி கொண்டவனாகக் காணப்படுகிறான். கலையார்வம் மிக்கவனாகக் காணப்படுகிறான். அதனால் அவன் அழகை விரும்புகிறான். இயற்கையை ரசிக்கின்றான். இனிமையை உணர்கிறான். மென்மையை நேசிக்கிறான். இயற்கையோடு உறவாடுகிறான். மொத்தத்தில் அவன் மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்கிறான். இவ்வாறான இயல்புகளைக் கொண்ட மனிதனது உணர்வுகளை நெறிப்படுத்தாதபோது அது பாரிய விளைவுகளை தந்து கொண்டிருப்பதை நாம் காணகிறோம்.

மனிதனது அழகுணர்ச்சி, கலையார்வம் பலவாறு வெளிப்படுகிறது. இந்த இயல்புகள் ஒருவனிடம் கூடுதலாகக் காணப்படும்போது அது ஆற்றலாக மாறுகிறது. இந்த ஆற்றலை கூடுதலாகப் பெற்று அதனை சமூகத்தில் பயன்படுத்துபவன் கலைஞனாக மாறுகிறான். இவ்வார்வம் அவனிலிருந்து கவிதையாக, கதையாக, நாவலாக, நாடகமாக, வரைவதனூடாக, திரைப்படமாக, இசையினூடாக வெளிப்படுகிறது. இவை மனிதனில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமகாலத்தில் இவற்றில் கூடிய தாக்குதிறன் கொண்டதாக திரைப்படங்களும், இசையும் காணப்படுகின்றன. இந்த இசையுடன் உருக்கமான அர்த்தமுள்ள வசனங்களும் சேரும்போது அதன் தாக்கு திறன் பன்மடங்காக அதிகரிக்கிறது.

இவற்றின் விளைவுகளும் பாரியதாகக் காணப்படுகிறது. காரணம் ஒவ்வொரு மனிதனும் இயல்பிலேயே இசையார்வம் கொண்டவனாகக் காணப்படுகிறான். இந்த இசை எந்த வேறுபாடும் இன்றி அனைத்துத் தரப்பினரையும் சென்றடைகிறது. செவியினூடாக மிக விரைவாக மனித உள்ளத்தைத் தொடும் ஆற்றல் இசையுடன் கூடிய பாடலுக்கே காணப்படுகிறது.

அவன் அறியாமலேயே உதடுகள் கண்கள் நடனமாடுகின்றன. புயங்கள் அசைகின்றன. இதுதான் மனிதன்து இயல்பு நிலை. இப்பின்னணியில் நோக்கின் நவீன கால விடுதலைப் போராட்டங்கள் கலைகளினூடாக மறுவடிவமெடுத்ததை அவதானிக்கலாம். பல போராட்ட இயக்கங்கள் தமது விடுதலை கீதங்களால், கலையம்சங்களூடாக தமது கொள்கையை வெளிப்படுத்தியதன் காரணமாக பொதுமக்களை தம்மோடு அரவணைத்துக் கொண்டன. அங்கத்தவர்களை போராளிகளாக மாற்றின. அவர்களை வளப்படுத்தின. தமது கொள்கையோடு அவர்களை இறுக்கமாக இணைத்துக் கொண்டன.

இந்தப் பின்னணி, சமகாலத்தில் உரிமைக்காகப் போராடும் சமூகங்களாக இருப்பினும், போராட்டக் குழுக்களாக இருப்பினும், விடுதலை இயக்கங்களாக இருப்பினும் அவை தமது போராட்டத்தை கலைத்துவமாகவும் மனித உணர்வுகளை தொடக்கூடியவாறும் அமைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. இதனை நடைமுறை ரீதியாக பல சமூகங்கள் அனுபவித்துமுள்ளதை நாம் காண்கிறோம். தமது கொள்கைப் பிரசாரத்திற்காக தமது உரிமைக் கோரல்களுக்காக தமக்கு இழைக்கப்படும் அநியாயங்களை உலகறியச் செய்வதற்காக அவை அதனை பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளன.

எனவே விடுதலையை நோக்கி அசையும் முஸ்லிம் சமூகத்திலுள்ள போராட்டக் குழுக்களும் இஸ்லாமிய இயக்கங்களும் இதுபற்றி சிந்திக்க வேண்டும். அப்போது அவை தமது உணர்வுகளை அதற்கே உரிய பெறுமானத்துடனும் தமக்கே உரிய அடையாளத்துடனும் வெளிப்படுத்த வேண்டும். வெறுமையடைந்து சூன்ய நிலையில் உள்ள இந்த வெகுஜனப் போராட்டத்தை திசைதிருப்ப வேண்டும். இவை தற்காலச் சூழலில் முஸ்லிம் சமூகத்தின் தேவைகள்.

ஆக மொத்தத்தில் நமக்கு முன்னர் சில கேள்விகள். இப்போராட்டத்திற்கு முஸ்லிம் சமூகம் எந்தளவுக்கு தயாராகவுள்ளது? ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது நாம் எந்தளவுக்கு பின்னடைந்துள்ளோம்? இப்போராட்டத்தை முன்கொண்டு செல்ல நம்மிடமுள்ள வளங்கள் என்ன? இம்முயற்சியை நம் சமூகம் ஜீரணித்துக் கொள்ளுமா?

இக்கேள்விக்கான விடைகளை களத்திலிருந்து கொண்டுதான் பெற முடியுமே தவிர. ஆய்வுகளாகப் பெறுவது சாத்தியமற்றதாகவே தோன்றுகிறது. அதாவது இம்முயற்சியில் ஈடுபட்டு சில விளைவுகளை கொண்டு வருவதினூடாகவோ அவற்றிலுள்ள சிக்கல்களையும் ஏனைய பல தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றிற்கு சமூகத்திலிருந்து சில எதிர்விளைவுகளும் வரலாம் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இசை, பாடல்கள் பற்றி முஸ்லிம் சமூகம் கொண்டுள்ள இரண்டு முரண்பட்ட போக்குகளும் அபாயகரமானதாகவே உள்ளன. அதாவது மொத்தமாகவே அதனை கூடாது என புறக்கணிக்கும் நிலை. அடுத்தது மொத்தமாக அதற்கு அடிமைப்பட்டுச் செல்லும் நிலை. இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் மத்தியில் ஒரு நடு நிலையான கட்டத்திற்கு வந்தாக வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் சமூகம் உணராமலும் இல்லை. சமூகத்தில் பெரும்பான்மையினர் அதற்கு அடிமைப்பட்டுப் போயுள்ள நிலை மிகவும் அபாயகரமானது. இளம் சமுதாயத்தினர் மொத்தமாக கரைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். கழட்டியெடுப்பதென்பது சாத்தியமானதா என்ற கேள்வி நம்முன் எழுகிறது. மிகவும் உயர்தொழில்நுட்பத்திற்கு அடிமைப்பட்டுள்ள சமூகத்தை திடீர்மாற்றத்தினூடாக மீட்டெடுப்பது பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும். அவ்வாறு அவர்களை மீட்டெடுத்து ஒரு சூன்யமான நிலையில் விட்டுவிடுவதும் அபாயகரமானது. இதன் விளைவுகள் மோசமாக அமையலாம்.

முஸ்லிம் சமூகத்தின் அதிகமான இளம் பரம்பரையினர் இந்நிலைக்குட்பட்டுள்ளனர். அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை அவர்களது காதுகளில் மோசமான இசைகள் விழுந்து கொண்டிருக்கிறது. இந்த இசைகள் அவர்களது உணர்வுகளைச் சிதறடிக்கிறது. அந்த பாடல்கள் அவர்களை மிக மோசமாக வழிநடாத்திக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான உணர்வு நிலைக்குட்பட்டுள்ள சமுதாயத்தை விடுதலைக்காகவும் போராட்டத்திற்காகவும் இஸ்லாமிய எழுச்சிக்காகவும் அழைக்கும் போராட்ட இயக்கங்கள், வறண்ட உரைகளையும் காய்ந்து போன பேச்சுக்களையும் உணர்வுகளற்ற எழுத்துக்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனாலான தாக்கம் எந்தப் பாரிய விளைவுகளும் அற்றதாகவே காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான ஒரு கட்டத்தில் தான் மாற்றீடு பற்றி சிந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இத்துறையில் முஸ்லிம் சமூகம் தனது காத்திரமான பங்களிப்பை செய்தாக வேண்டிய தேவையை உணர்கிறோம். இசை பற்றிய இஸ்லாத்தின் தீர்வை தெளிவாக வரையறுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. கலாநிதி யூஸுப் அல் காளாவி கொல்கிறார். *"இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழித்தொழிப்பதற்காக யூத அமெரிக்க சக்திகள் செய்மதிகள் (Satalite) மூலம் முஸ்லிம் நாடுகளை உளவு பார்த்துக் கொண்டிருக்க முஸ்லிம்களோ (Camera) மூலம் புகைப்படம் (Photo) எடுப்பது கூடுமா கூடாதா என கருத்து முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்."* எனவே இக்காலகட்டத்தில் பதிலீட்டின் தேவையை முஸ்லிம் சமூகம் உணர்ந்து செயற்பட வேண்டும். இது காலத்தின் தேவை. மனித சமூக வளர்ச்சியின் தேவை.

இஸ்லாம் இசையை அனுமதித்துள்ளது என்பதே அடிப்படை. ஆனால், அது மனித உணர்வுகளை சிதறடிக்கச் செய்து மோசமான உணர்வுகளைத் தூண்டக்கூடாது என்பது அதன் நிபந்தனை. இஸ்லாமிய வரையறைக்கு உட்படக்கூடியதாக காணப்படக்கூடியதான இசை கிராமத்து இசையாகும் (Classical Music). மேற்கத்தேய தென்னிந்திய துள்ளல் இசைகளுக்குப் பழகிப் போயிருக்கும் இக்காலத்தில் அந்த கிராமத்து இசையால் பெரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்த முடியுமா என்றும் சிலர் கேட்கத்தான் செய்கிறார்கள். அது ஒரு நியாயமான கேள்வியாக இருப்பினும். பாரம்பரிய இசைகள் மூலம் தமது அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு போராடிய பல சமூகங்கள் வெற்றி கண்டுள்ளதையும் மறுக்க முடியாது.

இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களுக்கென தனியானதொரு பாரம்பரியம் காணப்பட்டது. நபி(ஸல்) அவர்களும் பல சந்தர்ப்பங்களில் பாடல் இசைப்பதை அனுமதித்தும் ஊக்கமளித்தும் வந்துள்ளார்கள். ஹஜ்ஜுப் பெருநாள் தினம் இரு பெண்கள் தாளம் தட்டிப் பாட்டைப்பாட ரஸூல் (ஸல்) அவர்கள் அதனை கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதனை தடுத்து நிறுத்த ஆபூ பக்கர்(ரலி) அவர்கள் முற்பட்டபோது அவர்களை பாட விடும்படி சொன்னார்கள். இவ்வாறு இன்னும் பல சம்பவங்களை அவர்களது வரலாற்றில் காண்கிறோம். நவீன கால இஸ்லாமிய சட்ட மேதை கலாநிதி யூஸுப் அல் காளாவி அவர்கள் இசை இஸ்லாமிய வரையறைகளுக்குட்பட்டு மனித உணர்வுகளை மோசமாக வழிநடத்தாத வரை அது சரி எனத் தீர்ப்பு சொல்கிறார். அல்குர்ஆனில் ஓசை நயத்தில் நவீன கால சங்கீதப் போக்கு காணப்படுவதாக நவீன கால அல்-குர்ஆன் விளக்கவுரையாளர்கள் கூறுகிறார்கள். அக்காலத்தில் அல்-குர்ஆன் எதிர்கொண்ட சமூகச் சூழல் இலக்கியத்திறன் மிக்கதாக, பல கவிஞர்களைக் கொண்டதாக காணப்பட்டது. இவ்வாறான சமூக நிலைக்கேற்ப தனது கருத்துக்களை முன்வைத்தல் என்ற சவாலை மிகச் சரியாக அல்குர்ஆன் எதிர்கொண்டு வெற்றி கண்டது. எனவே அல்குர்ஆனிலுள்ளது போன்று பத்து வசனங்களையாவது முடிந்தால் கொண்டு வருமாறு சவால்விட்டது. இஸ்லாத்தில் மிகப் பெரிய எதிரிகளில் ஒருவனான வலீத் பின் முகீரா என்பவன் அல்குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்டு பின்வருமாறு சொன்னான்-

"அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மதிடமிருந்து நான் சில வசனங்களைக் கேட்டேன். அது மனிதனதோ

திஹாரிய-பினாரீப்

ஜின்களினதோ பேச்சல்ல. அதற்கொரு இனிமை இருக்கிறது. அதற்கொரு கவை இருக்கிறது. அதனது உச்சி கனி தரக்கூடியது. அதனது கீழ்ப்பகுதி நீர்த்தன்மை கொண்டது"

மனது சோகத்தில் தடுமாறும் போது அச்சோகம் பலவாறு வெளிப்படுகிறது. அல்குர்ஆன் போராட்டச் சூழலில் கவலையோடு அருளப்பட்டது. எனவே அதனை ஓதும்போது அழ முயற்சிக்குமாறும் முடியாவிட்டால் அழுவது போன்று ஓதுமாறு நபியவர்கள் சொன்னார்கள். மேலும் அல்குர்ஆனை ஓதும்போது ராகத்துடன் ஓதுமாறு நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மனதின் சோகத்தை பாடல் வெளிப்படுத்துகிறது. தமது சொந்த மண்ணை விட்டு மதீனாவிற்கு துரத்தப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அங்கு செல்லும் வாய்ப்பு கிட்டாதா என கவலையோடு கவிதை பாடினார்கள்.

மனித உள்ளம் தீமைகளால் சூழப்பட்டுக் காணப்படுகிறது. தீமைகளைக் காணும் போது அதன் சுவர்ச்சிகளுக்கு ஆட்பட்டு தன்னை இழந்து விடுகிறான். இது மனித இயல்பு. இவ்வாறான பாடல்களின் தாக்கத்திற்குட்படும் மனிதன் ஏன் நல்ல அர்த்தமுள்ள சங்கீதத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது? எனவே நவீன ஜாஹிலியத்திலிருந்து ஒரு முஸ்லிமைக் காப்பாற்ற வேண்டுமாயின் நவீன ஜாஹிலியத்துடன் மோதக்கூடியவாறு நமது கலைகள் காணப்பட வேண்டும்.

தற்கால உலகம் மேற்கத்தைய இசையின் அட்டகாசத்திற்கு உட்பட்டிருக்கிறது. எனவே. இவ்வாறான ஒரு நிலையின் போது நமது போராட்டத்திற்கு நாம் கைக்கொள்ளப் போகும் இசைக்கருவிகளும் முக்கியத்துவம் பெறுவதை நாம் உணரலாம். இசைக்கருவிகளை ஆதிகால இசையின்போது பயன்படுத்திய சில கருவிகளுடன் துண்டித்துக் கொள்ள நினைப்பது எந்தளவு பொருத்தமானது என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். நமது இசைப் பாரம்பரியம் வரலாற்றோட்டத்தில் எங்கோ ஒரு கட்டத்தில் துண்டிக்கப்பட்ட போது, நமது பாரம்பரியக் கருவிகளாகக் காணப்பட்ட தப்லா, ரபான்.... போன்ற சில கருவிகளுடன் நமது தற்கால இசையையும் சுருக்கிக்கொள்ள வேண்டும் என்பது கிடையாது. அது பொருத்தமான செயற்பாடாகவும் அமையாது.

நவீன உலகம் பல இசைக்கருவிகளைக் கண்டுபிடித்துவிட்டது. பல வகையான ராகங்கள், புதுப்புது ஓசைகள் உருவாக்கப்பட்டு விட்டன. எனவே இதற்கு ஏற்றாற்போல நமது போராட்டம் காணப்படுதல் அவசியமாகும். சில கருவிகளுடன் தற்காலத்து இசை யோடு போட்டியிட நினைப்பது சாத்தியமா னதா என்பது தொடர்பாக விவாதிக்கப்பட வேண்டும்.

எனினும், தற்காலப் போட்டியுலகில் இசைக்கருவிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை விட அதன் இலக்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதே முக்கியமானதாகத் தோன்றுகிறது. காரணம். இலக்கு சரியாக வரையறுக்கப்பட்டிருக்கும் போது அதன் போக்கில் சறுக்கல் ஏற்படுவது அசாத்தியமானது. மேற்கத்தேய இசையோடு போட்டியிட வெறும் சல்லாவும் ரபானும் போதாது என்பதும் தெளிவானது. இது அணுகுண்டுகளுக்கு முன்னால் துப்பாக்கிகளுடன் போட்டியிட நினைப்பதை ஒத்ததாகும்.

சந்தோஷத்தை, கவலையை, போராட்ட உணர்வை வெளிப்படுத்த மிகச் சிறந்த சாதனமாக இசையும் பாட லும் காணப்படுகின்றன. எனவே. மனித உணர்வுகளை திறந்துவிட வேண்டும். சுத நந்திரமாக சிந்திக்க விடவேண்டும். அது ஏனைய கொள்கைகளையும் சிந்தனைகளையும் எட்டிப் பார்க்க வேண்டும். அப்போது அதில் புதிய சிந்தனைகள் தோன்றும். தனது உரிமைகளை தேடத் துவங்கும். எனவே உணர்வுகள் விரிந்த தாக காணப்படும்போது அதன் விளைவுகள் பாரிய தாகவே அமையும். இத்தேவையை நாம் உணரும்போது, பதிலீடுகளை மிக விரைவில் எதிர்பார்க்கலாம்.

வாசகர் கடிதம்

முஸ்லிம் குரல் சுவடு ஒன்பது தாமதமாகியது ஏன்?

முஸ்லிம் குரல் சுவடு ஒன்று முதல் இதுவரை ஒன்றையேனும் விடாது வாசிக்கும் ஆயிரம் ஆயிரம் வாசகர்களில் நானும் ஒருவன்.

ஏனெனில், அது தாங்கி வரும் ஒவ்வொரு செய்திகளும் தற்போதைய பயங்கரமான காலகட்டத்தில் மிக மிக வலிமையுடையதாகவும், பெறுமதியானதாகவும் உள்ளது. ஒவ்வொரு சுவடுகளும் எம்மைத் தனதாக்கிக் கொள்கிறது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் குரல் தாமதமாக வெளிவருவதை எம்மால் ஜீரணித்துக் கொள்ள முடியாமல் உள்ளது!

றிபாய் எம். சம்சுதீன், நிந்தவூர்

முஸ்லிம் குரலோடு வாசக நெஞ்சமாய்

முஸ்லிம் மக்களின்
மூச்சுத் துடிப்பாக
முழங்கிடும் குரலாக
முழுமதி நிலவாக
அரங்கேற்றப்படுகின்ற
அதிரடிக்குரலாக
அணையா தீபமாய்
என்றும் ஒளிவீச
இஸ்லாமிய இதயங்களுடன்
இணைந்தே இசை மீட்ட
இருகரம் ஏந்திடும்
வாசக நெஞ்சமாய்

இஸ்லாமிய நெஞ்சங்களின்
எழுச்சிக் குரலாக
இதயத் துடிப்புடன்
இடியோடு மழையாக
இயற்கையாய் கலந்திடும்
அதிரடிக் குரலாக
அணைத்து நெஞ்சிலும்
அகிம்சா வழியோடு
உரிமைக் குரல் எழுப்ப
இருகரம் ஏந்திடும்
வாசக நெஞ்சமாய்

என்றும் அன்புடன்

பாதிமா நப்ஸா, கல்முனை.

நீங்களால் வெளியிடப்படும் முஸ்லிம் குரல் 8 ஆவது இதழை அண்மையில் கண்ணுற்றேன். மூதூர் வாழ் முஸ்லிம்களின் அவலங்களையும், இன்னும் பல தேசங்களிலும் ஒடுக்கி, அடக்கி வாழ்கின்ற இஸ்லாமியர்களின் அவலங்களையும், மிகத் தெளிவாக, விரிவாக நடுநிலை தவறாது நின்று குரல் கொடுத்த பாங்கை எவரும் மறுப்பதற்கில்லை.

முஸ்லிம் சமுதாயத்திற்கென ஒரு ஊடகம், பத்திரிகை, கொழும்பில் மட்டுமல்ல மூலை முடுக்கெல்லாம் உதயம் பெறவேண்டும். இஸ்லாத்தின் எழுச்சி எங்கும் பரிணமிக்க வேண்டும். இந்த வகையில் முஸ்லிம் குரல் வெற்றி காணுமெனபதில் எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. இதன் வளர்ச்சிக்கு எனது ஒத்துழைப்புக்கள் என்றும் நிலவும். எங்கள் ஊரில் இப்பத்திரிகை ஏராளமாக விற்பனை செய்யப்படுகிறது. விற்பனை முகவர் யாரென்று தெரியாது. இதனைத் தொடர்ந்து இங்கு அனுப்புங்கள்.

முஸ்லிம் குரல் முஸ்லிம்களின் விடுதலைக் குரலாக ஒலிக்க இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறும்.

முஸ்லிம் குரல் அபிமானி, இப்றாஹீம், மூதூர்.

"முஸ்லிம் குரல்" நேசமிக்க வாசகனாவேன். இலங்கை வாழ் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு வித்திட்டு, எதிர்காலத்தை சுபீட்சமுள்ளதாகவும், சுய உரிமையுள்ளதாகவும் மாற்றி வெற்றி காணவேண்டும் என்ற இலட்சியப் பாதையில் காலடி பதித்து எல்லா நெஞ்சங்களையும், தன்னகத்தே ஈர்த்து வெற்றி நடைபோடும் முஸ்லிம் குரலே! உன் நாமம் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்.

முஸ்லிம் குரலின் அன்பான ஆணையை ஏற்று சகல விடயங்கள் பற்றியும் ஆய்வுசெய்து தொடர்ந்து எழுத வேண்டும் என்ற ஆவலுடன் இருக்கின்றேன். "உண்மைக்கு அழிவில்லை"

எம்.ஐ.ஏ. சுபைர், ஏறாவூர்.

நபி பெருமானாரின் புனித வாழ்க்கை...!

நபி (ஸல்) பிறப்பு - கி.பி 20.04.570 திங்கட் கிழமை ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 12

பிறந்த இடம் - மக்கா அல் முகர்ரம்

பெற்றோர் - தந்தை அப்துல்லாஹ், அன்னை ஆமினா

பாட்டனார் - அப்துல் முத்தலிப்

தந்தையின் மரணம் - நபி (ஸல்) அவர்கள் கருவாய் இருந்த போது

தாயார் மரணம் - நபி (ஸல்) அவர்களின் ஆறாவது வயதில்

பாட்டனார் மரணம் - நபி (ஸல்) அவர்களின் எட்டாவது வயதில்

வளர்ப்பு - பாட்டனாருக்குப்பின் பெரிய தந்தை ஆபூ தாலிப்

செவிலித்தாய - துபைபா (ரலி) என்ற அடிமைப் பெண், பின்னர் ஹலிமா (ரலி)

சிறப்புப் பெயர்கள - அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) அஸ்ஸாதிக் (உண்மையாளர்)

முதல் வணிகம் - அன்னை கதீஜா (ரலி) அவர்களின் வணிகக் குழுவில்சேர்ந்து சிரியா பயணம்

முதல் திருமணம் - 40 வயதில் அன்னை கதீஜா (ரலி) அவர்களுடன் நபி (ஸல்) வயது 25

மஹர் தொகை - 50 திர்ஹம்கள்

திருமணத்தை நடத்தியவர் - அபூதாலிப் (பெரிய தந்தை)

நபி (ஸல்) மனைவியர்கள்- கதீஜா, ஸவ்தா, ஆயிஷா, ஹஃப்ஸா, ஸைனப்பின்த் குஸைமா, உம்முஸல்மா, ஸைனப் பின்த் ஜஹ்ஷ், ஜுவைரியா, உம்முஹபீபா, ஸஃபிய்யா, மைமுனா, மரியத்துல் கிப்தியா. (ரலி அன்ஹுமன்)

ஆண் மக்கள - 3. காசிம், அப்துல்லாஹ், இபுறாகிம், (ரலி அன்ஹும்) இவர்கள் குழந்தைப் பருவத்திலேயே காலமாகி விட்டார்கள்

பெண் மக்கள் - 4 ஸைனப், ருகையா, உம்மு குல்தூம், பாத்திமா (ரலி)

பேரர்கள் - அலி, உம்மா, முஹ்சின், ஹஸன், ஹுஸைன் (ரலி-அன்ஹும்)

ஊழியர்கள் - பிலால், அனஸ், உம்மு அய்மன், மாரியா (ரலி-அன்ஹும்)

அடிமை - ஸைது இப்னு ஹாரிதா

நபியவர்களின் தகப்பனாரின் உடன் பிறந்தோர். - மொத்தம் 12 போ அவர்களின் இஸ்லாத்தை ஏற்றவர்கள் ஹழ்ரத், ஹம்ஸா (ரலி) ஹம்ரத் அப்பாஸ் (ரலி) தாயின் உடன் பிறந்தோர் மொத்தம் 6 போ, அவர்களில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் ஹழ்ரத் ஆவா, ஆத்திகா, ஸபிய்யா (ரலி-அன்ஹுன்ன)

நபிப் பட்டம் கிடைத்த இடம் - ஹிரா குகை

முதல் வசனம - இக்ர.ஃ பிஸ்மி என்ற வசனம்

முதல் முஸ்லிம் ஈமான் கொண்டவர்கள பெண்களில் அன்னை ஹதீஜா (ரலி), சிறுவர்களில் ஹழ்ரத் அலி (ரலி) ஆண்களில் ஹழ்ரத் ஆபூ பக்கா (ரலி), அடிமைகளில் ஹழ்ரத் பிலால் (ரலி)

முஸ்லிம்களின் முதல் ஹிஜ்ரத் அபிசீனியாவிற்கு, நபித்துவம் 5ஆம் ஆண்டில் மன்னர் நஜ்ஜாஷியின் ஆட்சியில் நபி (ஸல்) மகள் ருகையா (ரலி), மருமகனார் உஸ்மான் (ரலி) உட்பட 11 ஆண்கள், 4 பெண்கள்

தாய்ப் நகரில் தவ்ஹீத் - நபித்துவ 10 ஆம் ஆண்டில் துணையாக சென்றவர் ஸைது (ரலி) அவர்கள் 13 ஆண்டுகள்

மதீனாவிற்கு ஹிஜ்ரத் உடன் சென்றவர்கள் - நபித்துவம் 14 ஆம் ஆண்டில் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள்

ஹிஜ்ரத்தின் போது மறைந்திருந்த குகை- தௌர

மதீனா சேர்ந்த நாள் - கி.பி.25.09.622 (அன்று முதலே ஹிஜ்ரி ஆண்டு கணக்கிடப்படுகின்றது)

என் பார்வையில் அஷ்ரஃப்

அரசியற்களத்தில் அனாதைகளாக
அவதிப்பட்ட
ஒரு சமூகத்தின் குரலாக ஓங்கியொலித்து
விபூகங்களமைத்து விடிவைக்காண்பித்து
இரு கண்கள்
இரவு முழுவதும் சமூகத்திற்காய்
விழிதிறந்திருந்து
விடிந்த பின்னர் விழிகளை மூடிக்கொண்டது
நாம் விழித்துக் கொள்வதற்காகவே.

கிழக்கில் உதித்து மேற்கில் நிலைத்து
பின்னர்
மத்தியில் மறைந்திட்ட அச்சூரியன்
மரத்தை வளர்த்து மக்களைக் காத்து
மரங்கள் நிறைந்த வனத்தில் மறைந்தார்
உயர்ந்த மனிதத்தின் மறைவும் மலைமேட்டில்.

அழிந்தது! அழிந்து போகக் கூடியதுதான்
அந்த
உடல் கூட நெருப்பில் குளித்துத்தான்
பயணப்பட்டுள்ளது.
அவர் உணர்வுகள் விதைத்திட்ட
உண்மைகள் ஓங்கியொலித்துக்
கொண்டிருக்கின்றது
இன்னும்
களம் நிற்கும் போராளிகளை நோக்கியே.

புறப்படு நீ
சுழலும் சக்கரமல்லாது
அகன் நடுவில் உறுதியான அச்சாணியே நீ.

புறப்படு நீ
அழுதுகொண்டிருப்பது உன் வேலையல்ல
உன்னில் கண்ட என் ஆற்றலின் களம் நீ.

புறப்படு நீ
அறிந்து கொண்டதிலும் கற்றுக்
கொண்டதிலும்
சிறந்ததை உன் சமூகத்திற்காய் அளித்திடு நீ.

புறப்படு நீ
ஊக்கம்தான் என் உயிர்
உன்னில் என்னைக் கொண்டே
உறுதிகொள்.

புறப்படு நீ
உனது ஆர்வத்தின் பலன்தான் பயன்
உயர்ந்த பயனுக்காக புறப்படு நீ.

புறப்படு நீ
நம் சமூகத்தின் மூச்சாக
உன்னில் நான், என்றும் உணர்ந்துகொள்.

-அ.முஹம்மது அனஸ்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு புதிய உபவேந்தர் நியமனம்!

மிக நீண்ட நாட்களாக இழுத்தடிக்கப்பட்டு வந்த தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் நியமன விவகாரம் ஒருவாறு முடிவுக்கு வந்திருக்கிறது. கலாநிதி. ஹாசைன் இஸ்மாயில் அவர்கள் புதிய உபவேந்தராகப் பொறுப்பேற்றுள்ளார். பேருவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஒரு காலத்தில் இலங்கையின் முன்னணி முஸ்லிம் பாடசாலையாகத் திகழ்ந்த கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் பயின்றார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விசேட கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொண்டார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விச் சமூகவியலில் (Education Psychology) முதுமானிப் பட்டத்தையும், வளர்ந்தோர் கல்வியில் (Adult Education) கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். உபவேந்தராகப் பதவியேற்கும் வரை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

முஸ்லிம்களின் மிகப் பெறுமதியான கல்விச் சொத்தாகத் திகழ வேண்டிய தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சமூக அக்கறையற்ற சக்திகளின் கையில் சிக்கிச் சின்னா பின்னமாகி வந்த ஒரு காலகட்டத்திலேயே, புதிய உபவேந்தரது நியமனம் இடம்பெற்றிருக்கிறது. முன்பு உபவேந்தராகப் பதவி வகித்த எம்.எல்.ஏ. காதா அவர்களது காலத்தில் பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்ததாக அடிக்கடி புகார்களும் பிரச்சினைகளும் மேலெழுந்தன. தொடர்ச்சியான மாணவர் போராட்டங்களும் அமைதியீனமும் அடிக்கடி ஏற்பட்டன. இரு தடவைகள் வளாகம் இழுத்து மூடப்பட்டது. நியமன விவகாரங்களிலும் நிதிக் கையாளல்களிலும் பாரிய ஊழல்கள் நிகழ்ந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. இது தொடர்பாக உடனடியாக சுதந்திரமான விசார ணைக் குழுவொன்றை புதிய உபவேந்தர் நியமிக்க வேண்டும் எனவும், குற்றவாளி களாக இனங்காணப்படுவோர் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டுமெனவும் மாணவர் பேரவையினரும் சமூக ஆய்வாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழகம் 1999 இல் மூடப்பட்ட போது, நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவில் கலாநிதி ஹுசைன் இஸ்மாயிலும் ஓர் அங்கத்தவராக இருந்தார். வளாகத்தில் இடம்பெற்ற எண்ணற்ற குளறுபடிகள் பற்றிய விசாரணை அறிக்கையைத் தயாரிப்பதில் இவருக்குக் கணிசமான பங்கு இருந்தது. இன்றுவரை முன்னாள் உபவேந்தர் எம்.எல்.ஏ.காதாரால் திட்டமிட்டு மறைக்கப்பட்ட இவ்வறிக்கை, உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய உபவேந்தர் இது குறித்து போதிய பரிச்சயமுள்ளவர் என்பதால், சமூக ஆய்வாளர்களும், பல்கலைக்கழக சமூகமும் புதிய உபவேந்தரிடம் நிறைய எதிர்பார்த்து நிற்கின்றனர். அது செயலுருவம் பெறவேண்டும் என்பதே எல்லோரதும் வேணவா.

பிரதேசவாதம், பக்கச் சாய்வு, தகுதியற்றவர்களை ஊக்குவித்தல் போன்ற இருண்ட சகாப்தம் முடிவுக்கு வந்தாக வேண்டும். சுயநலவாதக் கும்பலின் பிடியிலிருந்து பல்கலைக்கழகம் விடுவிக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மாணவ சமூகம் எதிர்பார்க்கிறது.

ஒரு பொற்காலம் வராவிட்டாலும் பரவாயில்லை. அநீதியும் அராஜகமும் ஊழலும் ஒழிக்கப்பட்ட ஒரு சுதந்திரமான பல்கலைக்கழகம் பற்றிய குறைந்தபட்ச எதிர்பார்ப்பேனும் நிறைவேற வேண்டும். இது ஆகக் குறைந்த ஒரு எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பு புதிய உபவேந்தருக்குச் சமாப்பணம்.

மூதூர் ஆஸாத் நகர் - மனிதாபிமானம் இறந்த கதை

17.04.2003 அன்று பாலத்தோப்பூர் அப்பாவி முஸ்லிம்கள் மீது புலிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுதர்பாரில் துப்பாக்கிச் சூடு காரணமாக படுகாயமுற்ற முஸ்லிம் இளைஞனான முஹைதீன் பிச்சை - ஹம்தான் (24) அண்மையிலுள்ள ஆஸாத் நகர் (பாரதிபுரம்) வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வைத்தியசாலையினுள், சுத்திகள், பொல்லுகள் சகிதம் உட்புகுந்த கும்பலொன்று கெட்ட கோஷங்களை இட்டவாறு மோசமாகக் காயமடைந்து மயக்க நிலையிலிருந்த இளைஞனையும், அவரை அனுமதிக்க வந்தவரையும் தாக்கிக் கொல்ல முயன்றுள்ளதுடன், ஸ்டெச்சரில் இருந்து தள்ளி வீழ்த்தவும் முயன்றுள்ளது. அத்துடன் வைத்தியரையும் பாதிக்கப்பட்டவருக்கு வைத்தியம் செய்யக்கூடாது எனப் பணித்ததுடன். "இது தமிழனின் வைத்தியசாலை, சோனிக்கு மூதூரில்

வைத்தியசாலை உள்ளது. இவனை அங்கே கொண்டு போங்கடா" என விரட்டியடித்துமுள்ளது.

மனித இனம் வெட்கித் தலை குனியும் இம்மனிதாபிமானமற்ற படுபாதகச் செயல் இடம்பெற்றபோது பொலிஸார் துப்பாக்கி ஏந்திய கொலு பொம்மைகளாக அங்கே வீற்றிருந்தனர். அது சரி, வைத்தியசாலைகளில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பிரிவுகள் எப்போது ஏற்படுத்தப்பட்டன?

–முனீறா ஜஹான்

பாரதிபுர முஸ்லிம் பிரதேச அழிப்பு ! ஒரு திட்டமிட்ட சதியின் வெளிப்பாடு

மூதூர் பாரதிபுரம்: ஆஸாத் நகர் கி.சே. பிரிவிலிருந்து அண்மையில் பிரிக்கப்பட்ட ஒரு கி.சே.பிரிவு இதில் 43 முஸ்லிம் குடும்பங்களும், 295 தமிழ் குடும்பங்களும் உள்ளன. இப்பகுதி முஸ்லிம்கள் அனை வரும் விவசாயிகள் என்பதுடன் சுமாரான வசதிபடைத்தவர்கள். அத்துடன் இம் முஸ்லிம்களின் வீடுகள் அமைந்துள்ள இடம் கேந்திர முக்கியத்துவமுள்ள ஒரு சந்தி. அத்துடன் பிரதான வீதியையும், சந்தியையும் சூழவுள்ள பெருமளவு குடியி



ருப்புக் காணிகளும் இவர்களுக்குச் சொந்தமானவையே.

சில வருடங்களுக்கு முன்பு ஐபல் நகர் (64ம் கட்டை) பாணியில் இம்மக்களினதும் காணிகளை வாங்க உள்ளூர் தரகர்கள் மூலம் சில தமிழ் அமைப்புக்களும், மிஷனரிகளும் முயன்ற கதையை இப்பகுதி மக்கள் இப்போது சொல்கிறார்கள். கூடிய விலை தருவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி பலனளிக்காது போகவே இரவு வேளைகளில் வீடுகள் திடீரென தீப்பற்றத் தொடங்கின. சுமார் 6 வீடுகள் வரை இது தொடர்ந்தது.

இன்றோ, எங்கோ நடந்த பிரச்சினை ஒன்றிற்காக சகலதும் பறிக்கப்பட்டு, உடைமைகள் அழிக்கப்பட்டு இம்மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். பொருட்கள் கொள்ளை, வீடுகள் முற்றாக தீக்கிரை, கால்நடைகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. வீட்டில் உள்ள பயிர்கள் அழிப்பு, மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. கிணறுகளில் டீசல் ஊற்றப்பட்டுள்ளது. இம் மக்களின் ஒட்டுமொத்த இருப்பையும் அழிப்பதற்கான காரியங்கள் கச்சிதமாகத் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டுள்ளன. ஆனால், இம்மக்கள் இக்கொடுமைகளை புரிந்தோருக்கெதிராக எத்தகைய அநீதிகளையும் இழைத்திருக்கவில்லை எனபது தான் சோகம்.

–அபூ ஹில்னி

கேட்பாரும் இல்லை பார்ப்பாரும் இல்லை கவனிப்பாரும் இல்லை

அல்ஹாஜ் ஏ.எச்.எம். பௌஸி அவர்கள் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது 22.11.1997 அன்று புத்தளம் புகையிரத நிலையத்திற்கு வடக்கே 2 மைல் தூரத்தில், நூறாநகர் புகையிரத நிலையத்தை உருவாக்கி, நூறாநகர் - புத்தளம் இணைப்புச் சேவைக்கும், நூறாநகர் - சிலாபம் சேவைக்கும், டீமோ புகையிரத வண்டியொன்றை ஈடுபடுத்தச் செய்தார். இதனால் புத்தளம் நகரசபை எல்லைக்குட்பட்ட 4 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் வட்டார மக்களும், புத்தளம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முள்ளிபுரம், மணல் தீவு, விழுக்கை பகுதி மக்களும் மிகக் குறைந்த செலவில் புகையிரத பிரயாணத்தை மேற்கொண்டனர். இந்த டீமோ புகைவண்டி பழுதடைந்ததால், அது திருத்தப்படும் வரை மாற்றீடாக வேறொரு புகைவண்டி சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. கடந்த 5.3.2003 முதல் இந்த டீமோ புகைவண்டி பழுதடைந்து, திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டது. மாற்றீடாக வேறு புகைவண்டியும் வந்து சேரவில்லை. இதனால் மாணவர்கள், கூரியாலய ஊழியர்கள், சந்தை வியாபாரிகள் உட்பட பிரயாணிகள் படுகின்ற அவஸ்தை சொல்லுந்தரமன்று. இது சம்பந்தமாக அனைத்துத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் இன்று வரை எதுவிதப் பயனுமில்லை. தற்போது மேற்படி டீமோ பஸ்வண்டி, அநுராதபுரப் பிரதேசத்தில் குறுகிய தூர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் புகையிரத நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர். எனவே, இன்று இது விடயத்தைக் கேட்பாரும் இல்லை, பார்ப்பாரும் இல்லை, கவனிப்பாரும் இல்லை.

–எஸ்.எஸ்.எம்.எஸ்.ரகுமத்துல்லா மரிக்கார், 123/16, சமகி மாவத்தை, புத்தளம்.

பாவனைக்குதவாத அரிசி கண்டுபிடிப்பு

வடமாகாண அகதிகளுக்கு விநியோகிப்பதற்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகை அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது.

வன்னி புணர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் குழு நுவரைச்சோலை, கண்டக்குழி, குறிஞ்சிப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளைச் சோதனையிட்ட வேளை இவ் வரிசி கண்டுபிடிக்கப்பட்டது.

பாவனைக்கு உதவாத, விலை அதிகமான அரிசிகள் அகதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாக வன்னி புனர்வாழ்வு அமைச்சுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன. இதனையடுத்து அமைச்சர் நூர்தீன் மஷூர் இச்சோதனை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

இதேவேளை, பாவனைக்கு உதவாத பெருந்தொகை அரிசிகள் ஏற்கனவே, அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், கற்பிட்டி, முந்தல் மற்றும் வணாத்தவில்லு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 15,500 குடும்பங்கள் இந்த உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

–அஹமத் கபீர்

தொடரும் புலிகளின் அச்சுறுத்தல்

மூதூரில் மழை விட்டும் தூறல் நின்றபாடில்லை என்பதற்கொப்ப முஸ்லிம் மக்களின் மீதான புலிகளின் பல்வேறு அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

மூதூர் முஸ்லிம் பிரமுகர்களுக்கும் புலிகளின் தளபதிகளுக்கும் ஆங்காங்கே சமாதானக் கூட்டம் நடைபெற்றாலும் புலிகளின் பாசிசப் போக்கில் மாற்றமில்லை. 'வியாபாரம் செய்ய வந்த சோனிகளுக்கு தமிழீழத்தில் இடமில்லை. மூதூரை விட்டு சோனியெல்லாம் போகாவிட்டால் கொன்றொழிப்போம்' என புலிகள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். இத்துண்டுப் பிரசுரம் 01-05-2003 அன்று மூதூருக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரிடமும் ரொய்ட்டர் செய்தியாளரிடமும் முஸ்லிம்களால் காண்பிக்கப்பட்டது.

மேலும், தோப்பூரில் இருந்து இராணுவத்தினரின் பாதுகாப்புடன் (?) மூதூருக்கு வரும் முஸ்லிம்களை புலிகள் பச்சனூரில் மறித்து 'தொப்பியைக் கழட்டுடா சோனி' எனத் தூசிக்கின்றனர். அத்தோடு மூதூரில் இருந்து வெளியூருக்கு முஸ்லிம்கள் தம் வாகனங்களைக் கொண்டு செல்லவோ மூதூருக்குள் பொருட்களைக் கொண்டு வரவோ புலிகள் தடுக்கின்றனர். இவ்வாறு முஸ்லிம்களின் அடிப்படை மனித உரிமைகளைப் புலிகள் தம் காலில் போட்டு மிதிக்கையில் மூதூர் பிரதேச செயலாளர் 'மூதூர் வழமைக்குத் திரும்பியது' என்று பொய்த்தகவல் வழங்க அதனை அரச மற்றும் தமிழ் ஊடகங்கள் அப்படியே வெளியிடுகின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.மு. அரசில் இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பதன் மர்மம் என்ன?

தற்போதைய அரசின் சமாதானச் சூழல் எனும் மாயை முஸ்லிம்களை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எந்த முஸ்லிம் மக்களின் ஆதரவோடு பதவி ஏறியதோ, அதே முஸ்லிம் மக்களின் உயிர்களையும், உடமைகளையும் அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் கைகட்டிக் கொண்டு நிற்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரவூப் ஹக்கீம் அவர்களும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று கூடி கூட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில் கூட தாக்குதல் நடக்கின்றன என்றால் இதன் மர்மம் என்ன.

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தீர்ந்து எல்லா இன மக்களும் சமத்துவ அடிப்படையில் ஒன்றிணைந்து வாழக்கூடிய நிலைமை எல்லோராலும் வரவேற்கப்படக் கூடியது! அதனை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது! ஆனால், இங்கு என்ன நடைபெறுகிறது. என்ன நடைபெற திட்டங்கள் தீட்டப்படுகிறது. எவ்வாறு எமது சகோதர, ஒரே மொழி பேசுகின்ற தமிழ் இனம் சிங்கள பேரினவாதத்தோடு ஒன்றிணைந்து வாழ முடியாது என்று போர்க்கொடி தூக்கியது ஏன்? அவ்வாறானால் பிட்டும் தேங்காய்ப் பூவும் போன்று வாழ்ந்த மக்களை ஓரிரு மணித்தியாலயங்களுக்குள் உடுத்த உடுமானங்களோடு வெளியேற்றியும், தாக்குதல் நடாத்தியும், சொத்துக்களையும், பொருட்களையும் அபகரித்துக் கொண்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியான காட்டுத்தர்பாரங்களையும் செய்து கொண்டிருப்பதன் மர்மம் என்ன?

இலங்கையின் தற்போதைய சமாதானச் சூழலில் இவ்வாறானதொரு நிலைமை இருந்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அரசும், ஆயுதம் தரித்த குறிப்பிட்ட இயக்கத்தினரும் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களை அழிக்கவோ, அவர்களை இனச் சுத்திகரிப்பு செய்வதற்கு ஒன்றிணைந்தாற்போல் செயற்படுவதாக ஒவ்வொரு சம்பவங்களும் நடந்து கொண்டிருக்கிறது. எனெனில் பொ.ஐ.மு. அரசில் முஸ்லிம்கள் மீது 4 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. அதனால், பதவிக்கு வர முடியாது! ஒன்றன் பின் ஒன்றாக படுதோல்வி அடைந்த ஐ.தே.முன்னணி அரசின் காலத்தில் எல்லாத் தரப்பினரும் பார்த்துக் கொண்டிருக்கின்ற சமயத்தில் சுமார் 8 தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இன்றும் எத்தனை தாக்குதல்களுக்கு திட்டம் தீட்டியுள்ளார்களோ?

இவ்வாறானதொரு நிலையில் இவ்வரசினை ஆட்சியதிகாரத்திற்கு கொண்டு வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்தையும் வேடிக்கை பார்ப்பதுதான் முஸ்லிம்களை சந்தேகத்திற்கு உட்படுத்தி உள்ளது. முஸ்லிம் காங்கிரஸ், மறைந்த தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃபினால் எதற்காக உருவாக்கப்பட்டதோ, அவ்வழியிலிருந்து நழுவி தற்போது, கேலிக் கூத்துக்குள்ளாகி ஐ.தே. முன்னணி அரசின் காலில் வீழ்ந்து கிடக்கின்றன. எழும்பவும் முடியாமல், அமரவும் முடியாத நிலையில். யார்தான் இஹ்லாசுடன் முன்வந்து கை கொடுப்பார்கள்? எனவேதான், இன்றும் ஐ.தே.முன்னணி அரசின் கையாலாகாத வெறும் பூச்சாண்டிகளை பார்த்துக் கொண்டிராமல், எமது மக்களின் எதிர்கால நலன்களை கருத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த அரசுக்கும் ஆயுதம் தரித்து குறிப்பிட்ட இயக்கத்தினருக்கும் போர்கொள்ள வேண்டும். சந்தர்ப்பம் தவறும் பட்சத்தில் எதிர்கால முஸ்லிம் சமுதாயம் பாரியதொரு அழிவிற்குட்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

சுதந்திரம் என்பது தங்களை, தாங்கள் ஆளப்படும்போதுதான் உண்மையான சுவாச காற்றை உணர முடியும்.

–ரியாய் எம்.சம்சுதீன், நிந்தவூர்.

கூடி கூடர்வோம்

"கலைமேகம்" மூதூர்

ஆண்டவன் அருள் சுரந்து
அனுதினம் இறை தொழுது
கண்டோர் மனம் கனியும்
கருணை நபிக் கீடுண்டோ!

வாழ்வில் மனிதன்
நன்மையுற
வழிக லிட்ட அறிவமுதம்
தாழ்வு நிலைக்கு
உள்ளோரை
தாங்கிய அறிவுக்கருப் பீடம்!

ஏழ்மையில் உழலும்
மாந்தர்க்கு
ஏணியாய் நின்று உதவியவர்
நாளும் பொழுதும் அனைவர்க்கும்
நன்மைகள் பொழியும் நன் நபியாம்!

அறியாமை இருளில் ஆழ்ந்திருந்த்
அறிவிலி சமூகத்தைச் சீர்திருத்தி
நெறி பிறழா திஸ்லாத்தை
நேரிய பாதை வகுத்த நபி!

சாதனையாற் பல கோடி
மாந்தரினை
சன்மார்க்க நெறியில் உட்புகுத்தி
போதனை புரிந்த கோமானை
புகழ்ந்து பாடிக் களிகூர்வோம்!

பெரும்பான்மை இனத்தவரின் கப்பம் கோரல்

(புத்தளம் மாவட்ட செய்தியாளர்)

மதுரங்குளி நகரில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் வியாபாரிகளிடமிருந்து கப்பம் கோரும் செயல் அண்மைக்காலமாக முனைப்புப் பெற்று வருகிறது. இதனை பெரும்பான்மை இளைஞர் குழுவொன்று திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொண்டு வருவதாக பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்ற வருடம் நவம்பர் மாதம் 17ஆம் திகதி மதுரங்குளி நகரில் முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கிடையில் மூண்ட முறுகல் நிலை பெரும் இன மோதலாக வெடித்து பல்வேறு அசம்பாவிதங்களுக்கு வழிவகுத்தன் பின்னர் மேற்படி கப்பம் கோரும் நடவடிக்கை அரங்கேறி வருவதாகத் தெரிய வருகிறது. இதன் காரணமாக முஸ்லிம் வர்த்தகர்களும் பொது மக்களும் பெரிதும் விசனமடைந்துள்ளனர். பெரும்பான்மை இன அரசியல்வாதியின் ஆதரவு பெற்ற சுமார் 10 பேர் கொண்ட குழுவே இதன் பின்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இரவுவேளைகளில் இரகசியமான முறையில் இவர்கள் கூடி முஸ்லிம் வர்த்தகர்களுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்து பணம் பறிப்பதாகவும் இவர்களுக்கு அஞ்சி, வர்த்தகர்கள் 25,000 தொடக்கம் 50,000 ரூபா வரையில் கப்பம் கொடுப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது. இவ்வாறு பிழைப்பு நடத்தும் கும்பல் கடையாமோட்டை பகுதிக்கு பிந்திய இரவில் வந்து செல்வதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்து சந்தேகத்தின் பேரில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பலவும் பதிவாகியுள்ளன. எனினும் இவர்கள் சுதந்திரமாக நடமாடித் திரிவதுதான் வியப்பாகவுள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மதுரங்குளி நகரில் சுமார் 150 வர்த்தக நிலையங்கள் உள்ளன. இவற்றில் 95 வீதமானவை முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாகும். மேற்படி கப்பம் கோரும் செயல் தீவிரமடைவதைத் தொடர்ந்து கடையாமோட்டைப் பள்ளிவாசலில் கூடிய ஊர் அரசியல் பிரமுகர்கள் உட்பட நம்பிக்கை சபையினரும் இதர பிரமுகர்களும் கப்பம் வழங்குவதை நிறுத்தக் கோரி வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். பிரதேச முஸ்லிம் வர்த்தகர்கள் ஒற்றுமைப்பட்டு இறைவனுக்கஞ்சி கப்பம் கொடுப்பதை கைவிட்டால் எதிரியைப் பணியவைக்கலாம்.

முஸ்லிம் குரல் கவடு 10
16 மே 2003 Muslim Kural صوت المسلم இஸ்லாமிய வாரம் 14 ரபீஉல்அவ்வல் - 1424
143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

அரசியல் தீர்க்க வரர்த்தகரின் முயலீடு சமாதானத்தை கண்டபடிக்கு முடியும்!

நிறைவேறாது அதிகாரமிக்க ஜனாதிபதிக்கும் குறைந்தபட்சம் பெரும்பான்மையுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்குமிடையேயான அரசியல் மோதல் வெடித்து விட்டது. இம்மோதலின் பிரதான தாக்கம் நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளில் பெருந்தடங்கலை ஏற்படுத்துவது திண்ணம். கடந்த கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை மேசையிலும் முஸ்லிம்கள் மிகத் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வந்தனர். முஸ்லிம்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற ஆதங்கம் எவ்வளவு அக்கறைக்குரியதோ அதே போன்று சமாதானப் பேச்சுவார்த்தையும் தடைப்படுட விடக்கூடாது என்பதிலும் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அதிக அக்கறையுள்ளது. முஸ்லிம்களின் நிரந்தர சமாதானத்தின் மீதான பற்றுறுதியின் காரணமாகவே சமாதானப் பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களையும் அரசியல் சமத்துவத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற குரல்கள் முஸ்லிம் சமூக மட்டத்தில் பரவலாக ஒலித்தன. இதனை சக தேச சக்திகளும், அமைப்புகளும் மிகத் தவறாக விளங்கிக் கொண்டன. இதனால் முஸ்லிம்களை தவறாக சித்தரித்துக் காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இத்தவறான புரிதல்களை ஏற்படுத்துவதில் தமிழ் ஊடகங்கள் அதிக பிரயத்தனம் எடுத்தன. இம்போது சமாதானத்தின் சிதைவுக்கு வாலாறு வேறு அரசியல் காரணங்களை முன் நிறுத்தியுள்ளன. இதுவே உண்மையுமாகும். முஸ்லிம்கள் எப்போதும் நியாயமான சமாதானத்திற்கு எதிரானவர்களல்ல!

இந்நிலையில் முஸ்லிம்கள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைத் தொடர்வதை உளப்பூர்வமாக வரவேற்கின்றனர். முஸ்லிம்களையும், சமத்துவமாக இணைத்த சமாதானப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும். இதுவே முஸ்லிம்களின் அரசியல் நிபந்தனையுடனாகூடிய எதிர்பார்ப்பாகும்.

தோழமையுடன் பிரதம ஆசிரியர்.

பலஸ்தீன மண்ணிலிருந்து

இஸ்லாமியச் சகோதரர்களே! எம்மிடம் நற்சிந்தனை ஒன்றிருக்கிறது. கொஞ்ச நேரம் ஒதுக்கி நீங்கள் அதனை வாசிப்பீர்கள் என நினைக்கிறோம். நாம் அதனைப் பேனா மையினாலல்ல, எழுதியது இதய மையினால். சகோதரர்களே! அனுமதிப்பீர்களா? கொஞ்சம் நாம் உங்களைக் கண்டதால் உங்கள் ரத்தத்தோடு கலந்திருக்கும் Coca cola வைக் காட்டித் தந்தால்!

நீங்கள் செய்து விட்டவற்றை மீண்டும் நீங்கள் செய்வீர்களென நாம் எதிர்பார்க்கவில்லை. ஒடுகின்ற எங்கள் ரத்தக் காட்சிகள் உங்களைக் கவரும் காட்சிகளென நினைத்திருக்கவில்லை. எங்கள் யுவதிகள், சகோதரிகள் பிறர் கையினால் அல்ல தம் கையினாலே மாயும் காட்சிகள் உங்களை மகிழ்விக்கும் என நினைக்கவில்லை. துராரா, ஈமான், பிலால்... போன்ற பச்சிளங் குழந்தைகளின் ரணக் காட்சிகளை கலை ரசனை யோடு கண்டு களித்திருப்பீர்கள் என நாம் நினைக்கவில்லை. உங்களிடம் நாம் இந்தளவு மலிவானவர்கள் என நினைக்கவில்லை. எம்மைப் பற்றி யோசிப்பதில் கூட உலோபிகளானீர்கள். அற்பச் சில்லறையிலுமா நீங்கள் எமக்கு கஞ்சத்தனம் காட்டுகிறீர்கள். எமக்கெதிராக யுதனுக்கு உதவுகின்றீர்கள். எம்மை விடவும் உங்களுக்கு Pepsi யும் Coca cola வும் பெறுமதி மிக்கவை என நாம் தெரிந்திருக்கவில்லை. அமெரிக்க கோபுரங்கள் இடிந்த வேளை எழுந்த எம் இரத்தங்களுக்கு முன்னால் நுரையாய் இறங்கிவிடும் என நாம் நினைக்கவில்லை. சத்தியமாய் நினைக்கவில்லை. நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என நாம் நினைத்திருக்கவேயில்லை. ஏன் தெரியுமா? நாம் உங்களை கஷ்டப்படுத்தியிருக்க மாட்டோம் என நினைக்கிறோம். மன்னியுங்கள் உங்களை கஷ்டப்படுத்தியிருந்தால் மீண்டும் உங்கள் கேளிக்கைகளில் மூழ்குங்கள். நிச்சயமாக நாம் எமது ரப்பை கண்டு கொண்டோம். அவன் உங்களுக்கு மேலிருப்பதைக் கண்டோம். இதுதான் எமது வழி - புனிதப் போர். அதில் வெற்றி! இல்லையேல் வீரமரணம்!!

நன்றி முஜாஹிதீன் : தமிழில் : பைசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, 143, முஹந்திரம் வீதி, முஸ்லிம் குரல் பணிமனையில் இன்னர் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.